வார இதழ்
வெள்ளிதோறும்
# தமிழக அரசியல்
புதியதோர் உலகம் செய்வோம்
Vol - 19 Iss. - 38 விலை ரூ.20 www.tamilagaarasiyal.com 30.04.2026

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026




# 234 தொகுதிகளின் மெகா சர்வே ரிப்போர்ட்..!

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026

# 234 தொகுதிகளின் மெகா சர்வே ரிப்போர்ட்..!

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி நடைபெற்று வரும் அரசியல் கட்சிகளின் தீவிர பிரச்சாரம் 21ம் தேதி மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது. தேசிய, மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தீவிரமாக இறுதிகட்ட பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த மார்ச் 15ம் தேதி அறிவிக்கப்பட்டது. அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கடந்த பிப்ரவரியில் ஆலோசனை நடத்தினார். அப்போது, ஒவ்வொரு முறையும் தமிழகத்தில் முதல் கட்டத்திலேயே தேர்தல் நடத்துவதால், நீண்ட நாட்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாக்க வேண்டியுள்ளது. அதனால் வாக்கு எண்ணிக்கைக்கு முன்னதாக தேர்தலை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று ஏப்ரல் முதல் வாரத்துக்கு பதிலாக ஏப்.23ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில் தமிழகத்தில் 5.73 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தமிழகத்தில் 1977ம் ஆண்டுக்கு பிறகு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் இருமுனை போட்டியே இருந்து வந்தது. இந்நிலையில், தற்போது திமுக, அதிமுக, தவெக, நாதக என நான்கு முனைப் போட்டி உருவாகியுள்ளது.

தமிழக சட்டமன்றம் இதுவரை இப்படியொரு தேர்தலை சந்தித்திருக்காது. காரணம், எஸ்.ஐ.ஆர். திருத்தத்திற்கு பிறகு தேர்தல் நடக்கிறது. இன்னொரு காரணம், இளைஞர்கள், இளம்பெண்கள் பேராதரவுடன் களத்தில் இறங்கியிருக்கும்'தமிழக வெற்றிக் கழகம்'!

தமிழகத்தில் விஜய் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை யாராலும் கணிக்க முடியவில்லை என்றாலும், ஒவ்வொரு தொகுதியிலும் த.வெ.க. 8 முதல் 14 சதவீதம் வரை வாக்குகள் பிரித்தால், அது தி.மு.க.வுக்கு சாதகமாக அமைகிறது. 14 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பெற்றால் அது அ.தி.மு.க.விற்கு சாதகமாக அமைகிறது. 'தமிழக அரசியல்' டீம் 234 தொகுதிகளிலும் யாருக்கு வெற்றி கிடைக்கும்... களநிலவரம் எப்படி இருக்கிறது? என்பது குறித்து எடுத்த விபரங்களை அப்படியே மக்களுக்கு கொடுக்கிறோம்.

2026 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி வாரியாக கட்சிகள் பிடிக்கும் தொகுதி நிலவரம்...

நமது சர்வே ரிப்போர்ட்டில் இழுபறி 37 ஆக இருக்கிறது. முன்பு சொன்னது போலவே 2026 சட்டமன்றத் தேர்தல் நிலவரம் வித்தியாசமாக இருக்கிறது. காரணம் த.வெ.க. தலைவர் விஜய் 'கேம் சேஞ்சர்' ஆக இருப்பதால், தி.மு.க., அ.தி.மு.க.வின் பெரும்பான்மை வெற்றியை தடுக்கிறார். இழுபறியாக இருக்கும் தொகுதிகள் யாருக்கு சாதகமாக அமையப்போகிறது என்பது த.வெ.க. பிரிக்கும் வாக்குகள்தான் முடிவு செய்கிறது. எனவே, 2026ல் யார் ஆட்சி அமைக்கப் போகிறார்கள் என்பது மே மாதம் 4 தெரியவரும். அதுவரை பொறுத்திருப்போம்! ■

### 2026 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி வாரியாக கட்சிகள் பிடிக்கும் தொகுதி நிலவரம்

| | |
|---|---|
| தி.மு.க. கூட்டணி | 100 |
| அ.தி.மு.க. கூட்டணி | 95 |
| த.வெ.க. | 2 |
| இழுபறி | 37 |
| மொத்தம் | 234 |

### கட்சி வாரியாக யாருக்கு எத்தனை சீட்?

| தி.மு.க. கூட்டணி | | அ.தி.மு.க. கூட்டணி | |
|---|---|---|---|
| தி.மு.க. | 82 | அ.தி.மு.க. | 83 |
| காங்கிரஸ் | 11 | பா.ஜ.க. | 5 |
| தே.மு.தி.க. | 2 | பா.ம.க. | 5 |
| சி.பி.எம். | 2 | அ.ம.மு.க. | 1 |
| சி.பி.ஐ. | 1 | ஐ.ஜே.கே. | 1 |
| வி.சி.க. | 1 | | |
| முஸ்லிம் லீக் | 1 | | |
| மொத்தம் | 100 | மொத்தம் | 95 |

# திருவள்ளூர் மாவட்டம்

## 1. கும்மிடிப்பூண்டி

கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க .சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. கோவிந்தராஜன், அ.தி.மு.க. சார்பில் சுதாகர், த.வெ.க. சார்பில் எஸ்.விஜயகுமார், நாம் தமிழர் கட்சி சார்பில் ஸ்ரீதர் மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். நான்கு முனைப் போட்டி நிலவினாலும் தி.மு.க., அ.தி.மு.க. இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது.

கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் பிரகாஷ் அவர்களை 50, 938 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்த முறை அ.தி.மு.க.வே நேரடியாக களம் காண்கிறது. தற்போது, தி.மு.க. மீதான அதிருப்தி தொகுதியில் காணப்படுவதால், அ.தி.மு.க. வேட்பாளர் சுதாகர் முந்திச் செல்கிறார்!

## 2. பொன்னேரி

பொன்னேரி தனித் தொகுதியில் 2021ல் காங்கிரஸின் துரை சந்திரசேகரன் வெற்றி பெற்றார். 2016ல் அதிமுகவின் சிறுனியம் பலராமன் வெற்றி பெற்றிருந்தார். இந்த முறை சிட்டிங் எம்.எல்.ஏ.வான துரை சந்திரசேகரனே காங்கிரஸ் வேட்பாளராக மீண்டும் போட்டியிடுகிறார். அதிமுக வேட்பாளராக போன முறை தோல்வி அடைந்த முன்னாள் எம்.எல்.ஏ. சிறுனியம் பலராமன் மீண்டும் போட்டியிடுகிறார். த.வெ.க. சார்பில் ரவி போட்டியிடுகிறார்.

இந்த முறை புதிய வரவான த.வெ.க. களமிறங்குவதால் தொகுதியின் கள நிலவரம் எதிர்பார்ப்புக்குரியதாக இருக்கிறது. கடந்த முறை 9,689 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் காங்கிரஸ் துரை சந்திரசேகரன். இந்த முறை தி.முக, காங்கிரஸ் உறவு நீருபூத்த நெருப்பாக இருப்பதாலும், த.வெ.க. வாக்குகளை பிரிப்பதாலும் அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றிக் கோட்டைத் தொடுகிறார்.

## 3. திருத்தணி


திருத்தணிசட்டமன்றத்தொகுதியில்2026சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு டி கிருஷ்ணமூர்த்தி (தேமுதிக), கோ.ஹரி (அஇஅதிமுக), டாக்டர் சத்யகுமார் (டி.வி.கே), சந்திரன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் எஸ்.சந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் திருத்தணி கோ. அரி அவர்களை 29,253 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும்.

2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது. தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. போட்டியிடுவதால் கடுமையான போட்டியில் மிக சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க. முந்திச் செல்கிறது.

## 4. திருவள்ளூர்

திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு ராஜேந்திரன் (திமுக), பி.வி.ரமணா (அஇஅதிமுக), டாக்டர் அருண்குமார் (டி.வி.கே), செந்தில்குமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பிவி ரமணாவை 22,701 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்திய தேசிய காங்கிரஸ் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

திருவள்ளூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் கடுமையாக தாக்கத்தை ஏற்படுத்துவார் என்கிறார்கள். எனவே, தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுவதால் இழுபறி நீடிக்கிறது.



## 5. பூவிருந்தவல்லி

பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமி போட்டியிடுகிறார். அ.தி.மு.க கூட்டணியில் அ.ம.மு.க. வேட்பாளர் ஏழுமலை, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ஆர்.பிரகாசம், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேகலா மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் ராஜமன்னார் அவர்களை 94,110 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

பூவிருந்தவல்லி தொகுதியில் அ.தி.மு.க. நேரடியாக களம் காணாமல் இருப்பது தி.மு.க.விற்கு பிளஸ் ஆக அமைந்திருக்கிறது. எனவே, பூவிருந்தவல்லி தொகுதியில் மீண்டும் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 6. ஆவடி

ஆவடி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு நாசர் (திமுக), ராஜசிம்ம மஹேந்திரா (பாஜக), ஆர்.ரமேஷ்குமார் (டி.வி.கே), புனிதா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஆவடி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சா.மு.நாசர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் க. பாண்டியராஜன் அவர்களை 55,275 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

இந்தச் சட்டமன்றத் தொகுதி திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்திய தேசிய காங்கிரஸ் தனது வெற்றியைப் பதிவு செய்தது. தி.மு.க.வில் சிட்டிங் அமைச்சராக இருக்கும் ஆவடி நாசர் மீண்டும் வாகை சூடுவார் என்பதுதான் களநிலவரமாக இருக்கிறது.

## 7. மதுரவாயல்

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு காரம்பாக்கம் கணபதி (திமுக), பெஞ்சமின் (அஇஅதிமுக), பி.ரேவந்த் சரண் (டி.வி.கே), ரேவதி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் காரப்பாக்கம் கணபதி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பென்ஜமின் அவர்களை 31,721 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பத்மப்பிரியா 33,401 வாக்குகள் பெற்றார். இந்தமுறை தி.மு.க. கூட்டணியில் ம.நீ.ம. இருக்கிறது. த.வெ.க. குறிப்பிட்ட சதவீத வாக்குகளைப் பிரித்தாலும், தி.மு.க. வேட்பாளர் நூலிழையில் முந்திச் செல்கிறார்.

## 8. அம்பத்தூர்

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு பூர்ணிமா (திமுக), சேகர் (பாமக), ஜி.பாலமுருகன் (டி.வி.கே), ஆதித்தன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஜோசப் சாமுவேல், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அலெக்சாண்டர் அவர்களை 42146 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

இந்தச் சட்டமன்றத் தொகுதி ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தி.மு.க. தனது வெற்றியைப் பதிவு செய்தது. கடந்த தேர்தலில் ம.நீ.ம. மற்றும் நா.த.க. இரண்டு கட்சிகளுமே 9 சதவீத வாக்குகளைப் பெற்றது. தற்போது அம்பத்தூர் தொகுதியில் தி.மு.க., பா.ம.க. இடையே கடும் போட்டி நிலவினாலும், தி.மு.க. வெற்றி வாய்ப்பை பெறும் சூழல் நிலவுகிறது.

## 9. மாதவரம்

மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் 20216 சட்டமன்றத் தேர்தலில் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சுதர்சனம் (திமுக), மூர்த்தி (அஇஅதிமுக), எம்.எல். விஜய் பிரபு (டி.வி.கே), கிருத்திகா எழுமலை (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சுதர்சனம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் மாதவரம் மூர்த்தி அவர்களை 57,071 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்திய தேசிய காங்கிரஸ் தனது வெற்றியைப் பதிவு செய்தது. 2026 சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க. வேட்பாளர் 12 சதவீதத்திற்கும் அதிகமாக வாக்குகளை பிரிப்பதால், அது தி.மு.க.விற்கு பாதகமாகவும், அ.தி.மு.க.விற்கு சாதகமாகவும் மாறும் நிலை ஏற்படுவதால், மாதவரம் மூர்த்தி குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிக் கோட்டைத் தொட இருக்கிறார்.

## 10. திருவொற்றியூர்

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு எல்.சுந்தரராஜன் (சிபிஎம்), கே.குப்பன் (அஇஅதிமுக), செந்தில் குமார் (டி.வி.கே), சத்ய பாஸ்கர் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சங்கர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கே.குப்பன் அவர்களை 37661 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திருவொற்றியூர் தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க., அ.தி.மு.க. மாறி மாறி வெற்றி பெற்று வருகிறது. இந்த முறை தி.மு.க. கூட்டணிக்கு கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், தொகுதியில் கடும் போட்டி நிலவினாலும் கே.குப்பனுக்கு சாதகமாக கள நிலவரம் இருக்கிறது.

# சென்னை மாவட்டம்

## 11. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்

ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு எபினேசர் (திமுக), ஆர் எஸ் ராஜேஷ் (அஇஅதிமுக), மரிய வில்சன் (டி.வி.கே), வெண்ணிலா தாயுமானவன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஆர்.கே நகர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஜே.ஜே.எபிநேசர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஆர்.எஸ். ராஜேஷ் அவர்களை 42479 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆர்.கே.நகர் தொகுதி ஜெ. மற்றும் டி.டி.வி. ஆகியோர் வெற்றி பெற்ற தொகுதி. இந்த முறை அ.தி.மு.க. கூட்டணியில் டி.டி.வி. இருப்பதால், தொகுதியின் கள நிலவரம் அ.தி.மு.க. சாதகமாக இருக்கிறது.

## 12. பெரம்பூர்

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் களம் காணும் தொகுதி என்பதால் ஸ்டார் அந்தஸ்தை பெறுகிறது. பெரம்பூர் ஆர்டி சேகர் (திமுக), திலகபாமா (பாமக), சி.ஜோசப் விஜய் (டி.வி.கே), வெற்றித்தமிழன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஆர்.டி.சேகர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட என்.ஆர். தனபாலன் அவர்களை 54976 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி வட சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும்.

திமுகவின் மூத்த தலைவரான சத்தியவாணி முத்து அம்மையார் வென்ற தொகுதி. அவர் அதிமுகவுக்கு போன போது திமுகவின் இளைஞரான பரிதி இளம்வழுதியால் தோற்கடிக்கப்பட்டவர். சிபிஎம் இங்கே 3 முறை வெற்றி பெற்றிருக்கு. கடந்த 2019 இடைத்தேர்தல், 2021 தேர்தல்களில் திமுகவின் ஆர்டி சேகர் வென்றார். இந்தத் தொகுதியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் த.வெ.க.வில் உறுப்பினர்களாக இணைந்திருப்பது உள்பட, பல்வேறு சூழல்கள் விஜய்க்கு சதகமாக இருப்பதால், பெரம்பூர் தொகுதி மக்களின் சார்பாக விஜய் சட்டமன்றத்திற்குள் செல்வது உறுதியாகிவிட்டது!

## 13. கொளத்தூர்


கொளத்தூர் தொகுதியில் திமுக தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் ஹாட்ரிக் வெற்றி பெற்ற தொகுதி. 2011, 2016, 2021ல் தொடர்ந்து இங்கே முதல்வர் ஸ்டாலின் வெற்றி பெற்றார். இந்த முறை முதல்வர் ஸ்டாலினை எதிர்த்து அதிமுகவின் சந்தானகிருஷ்ணன் களம் காண்கிறார்.

தவெக சார்பில் அதிமுக மாஜி கவுன்சிலர் விஎஸ் பாபு, நாதக சார்பில் சவுந்தரபாண்டியன் இங்கே களம் காண்கிறார்கள். தொடர்ச்சியாக மு.க.ஸ்டாலின் நான்காவது முறையாக கொளத்தூரில் வெற்றி பெறுவார். கொளத்தூர் தொகுதியில் த.வெ.க. இரண்டாவது இடத்தைப் பிடிக்க வாய்ப்பிருக்கிறது.

## 14. வில்லிவாக்கம்

திமுக வேட்பாளராக மோகன் கார்த்திக் போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவாக முதல்வர் ஸ்டாலின் மகள் செந்தாமரை, அவரது கணவர் சபரீசன் களத்தில் பிரசாரம் செய்தார்கள். 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் வெற்றியழகன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ஜே.சி.டி பிரபாகரை 37,237 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

2026ல் அதிமுக வேட்பாளராக விஜயகுமார், தவெக வேட்பாளராக ஆதவ் அர்ஜுனா களம் காண்கிறார்கள். நாதக சார்பில் ரோசினி போட்டியிடுகிறார். வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க வெற்றி வெற்றே ஆகவேண்டும் என தி.மு.க. குடும்பம் நினைப்பதால், ‘வாரி வழங்கப்பட்டுள்ளது’! ஆதவ் அர்ஜுனாவுக்காக விஜய்யும் வில்லிவாக்கத்தில் பிரச்சாரம் செய்தது தேர்தல் களத்தை மாற்றியிருக்கிறது. எனவே, வில்லிவாக்கத்தில் தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுகிறது. இங்கு அ.தி.மு.க. மூன்றாம் இடத்திற்குப் போக வாய்ப்புண்டு!



## 15. திரு.வி.க நகர்

திருவிநகர் தனி சட்டமன்றத் தொகுதி இந்த முறை கவனிக்கப்படுகிற தொகுதியாக மாறியிருக்கிறது. காரணம், அதிமுக வேட்பாளராக கொல்லப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் ஆம்ஸ்டிராங்கின் மனைவி பொற்கொடி, இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். திமுகவில முன்னாள் எழும்பூர் எம்.எல்.ஏ. கே.எஸ். ரவிச்சந்திரன் போட்டியிடுகிறார்.

த.வெ.க. சார்பில் எம்.ஆர்.பல்லவி, ஜெகதீஷ் சந்தர் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் தாயகம் கவி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஜிவிசி வேட்பாளர் பி.எல்.கல்யாணியை 55,013 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த முறை அ.தி.மு.க. சார்பில் களமிறங்கும் ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடிக்கு அனுதாப வாக்குகளே கரைசேர்த்துவிடும்!

## 16. எழும்பூர்

2021 சட்டமன்றத் தேர்தலில் எழும்பூர் தொகுதியில் திமுக வேட்பாளர் பரந்தாமன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட தமிழக மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் ஜான் பாண்டியனை 38,768 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

2026 தேர்தலில் திமுக சார்பில் தமிழன் பிரசன்னா, அதிமுக சார்பில் அபிசேக் ரங்கசாமி, தவெக சார்பில் ராஜ்மோகன், நாதக சார்பில் சரண்யா ஆகியோர் களம் காண்கின்றனர். திமுக முன்னிலையில் இருக்கிறது. அமைச்சர் சேகர்பாபுவின் அரசியல் அனுபவம் தமிழன் பிரசன்னாவை சட்டமன்றத்திற்குள் அனுப்புகிறது.

## 17. இராயபுரம்

இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சுபேர்கான் (திமுக), டி ஜெயக்குமார் (அஇஅதிமுக), கே.வி.விஜயதாமு (டி.வி.கே), பாபுமைலன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் டி.ஜெயக்குமார் அவர்களை 27779 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி வட சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க.வில் உள்ளடி வேலைகளில் ஜெயக்குமார் கரைசேர்வார் என்பதுதான் கள நிலவரமாக இருக்கிறது.

## 18. துறைமுகம்

துறைமுகம் தொகுதியில் அமைச்சர் சேகர்பாபு போட்டியிடுகிறார். அதிமுகவில ராயபுரம் மனோ வேட்பாளராக களம் காண்கிறார். துறைமுகம் தொகுதி 1989, 1991ல் கலைஞர் வென்ற தொகுதி. 1996ல் இருந்து 2006 வரைக்கும் பேராசிரியர் அன்பழகன் வென்ற தொகுதி. 2016, 2021ல் சேகர்பாபு வெற்றி பெற்ற தொகுதி. 2021ல் தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாஜக வேட்பாளர் வினோஜ் செல்வத்தை 27,274 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்த முறையும் அமைச்சர் சேகர்பாபு களம் காண்கிறார். அதிமுக சார்பில் ராயபுரம் மனோ, தவெக சார்பில் சினோரா பி.எஸ். அசோக், நாதக சார்பில் ரூஃப்கான் ஷெரிஃப் ஆகியோர் களம் காண்கின்றனர். இங்கு சேகர் பாபு வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. இரண்டாம் இடத்தைப் பிடிப்பதில் அ.தி.மு.க., த.வெ.க. இடையே போட்டி நிலவுகிறது.

## 19. சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் போட்டியிடுகிற தொகுதி. 2021ல் பாமகவின் கசாளியை 69,355 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார் உதயநிதி ஸ்டாலின். இந்த முறை அதிமுகவின் ஸ்டிராங் வேட்பாளர் என சொல்லக் கூடிய ஆதிராஜாராம் நிறுத்தப்பட்டிருக்கிறார்.


தவெக சார்பில் டி.செல்வம், நாதக சார்பில் ஆயிஷா பேகம் ஆகியோர் களம் காண்கின்றனர். சேப்பாக்கம் தொகுதியைப் பொறுத்தளவில் உதயநிதி ஸ்டாலின் சுலபமாக வெற்றி பெறும் வாய்ப்பிருக்கிறது. இந்தத் தொகுதியிலும், அ.தி.மு.க., த.வெ.க. இடையேதான் இரண்டாவது இடத்திற்கு கடும் போட்டி நிலவுகிறது.

## 20. ஆயிரம் விளக்கு

சிட்டிங் எம்.எல்.ஏ. டாக்டர் எழிலன் நாகநாதன் மறுபடியும் களம் காண்கிறார். அதிமுக சார்பாக முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி போட்டியிடுகிறார். இதனால் இந்த தொகுதியும் ரொம்பவே கவனம் பெற்றிருக்கிறது. 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாஜக வேட்பாளர் குஷ்புவை 32,200 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் எழிலன் தோற்கடித்தார்.

இந்த தொகுதியில் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் 1989, 1996, 2001, 2006 ஆகிய தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். 2011ல் பா.வளர்மதி வெற்றி பெற்றார்.

அதிமுகவின் முதுபெரும் தலைவர்கள் மதியழகன், சாதிக்பாட்சா, கேஏ கிருஷ்ணசாமி அகியோர் வெற்றி பெற்ற தொகுதி ஆயிரம் விளக்கு. இந்த தேர்தலில் தவெக சார்பில் ஜேசிடி பிரபாகர், நாதக சார்பில் களஞ்சியம் ஆகியோர் களம் காண்கின்றனர். தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுவதால், இங்கும் இழுபறி நீடிக்கிறது!



## 21. அண்ணா நகர்

அண்ணா நகர் தொகுதியில் திமுக வேட்பாளராக சிற்றரசும், அதிமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் கோகுல இந்திராவும் களம் காண்கிறார்கள். 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் மோகன் கோகுல இந்திராவை 27,445 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். 2011ல் இங்கே கோகுல இந்திரா வெற்றி பெற்றார். 2016, 2021ல் திமுகதான் வெற்றி பெற்றது. தவெக சார்பில் ராம்குமார், நாதக சார்பில் சங்கர் ஆகியோர் களம் காண்கின்றனர்.

அண்ணாநகர் தொகுதியில் தி.மு.க., அ.தி.மு.க. இடையே போட்டி நிலவினாலும், ஜெயலலிதா என்ற ஆளுமை இருந்தபோது, தொகுதிக்கு சம்மந்தமே இல்லாத கோகுல இந்திரா நின்று வெற்றி பெற்றார். அது இப்போது சாத்தியமில்லை! நே.சிற்றரசு மாவட்டச் செயலாளராக பொறுப்பேற்ற பிறகு மாவட்டம் முழுவதும் களப்பணி ஆற்றி வருகிறார். தவிர, பண்டிகை காலங்களில் கட்சி நிர்வாகிகளைத் தாண்டி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார். எனவே, தொகுதி மக்களுக்கு பரிச்சயமான சிற்றரசு வெற்றி பெறுகிறார்.

## 22. விருகம்பாக்கம்

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு பிரபாகர் ராஜா (திமுக), விருகை விஎன் ரவி (அஇஅதிமுக), ஆர்.சபரிநாதன் (டி.வி.கே), சந்தோஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் விருகை ரவி அவர்களை 18367 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் பிரிக்கும் வாக்குகள் விருகை வி.என்.ரவியை வீர நடை போடவைக்கும் என்பதுதான் கள நிலவரமாக இருக்கிறது.

## 23. சைதாப்பேட்டை

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு மா.சுப்பிரமணியன் (திமுக), செந்தமிழன் (அமமுக), அருள் பிரகாசம் (டி.வி.கே), ஸ்ரீவித்யா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பளார் ம.சுப்ரமணியம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் சைதை சா. துரைசாமி அவர்களை 29408 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன் தனது தொகுதியில் கட்சி நிர்வாகிகளுக்கு அனைத்து அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். பகுதிச் செயலாளர்களுக்கு மண்டல பொறுப்பு வழங்கியிருக்கிறார். வட்ட செயலாளர்களுக்கு ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு மூலம் வீடு ஒதுக்கி கொடுத்திருக்கிறார். அரசு மருத்துவமனைகளில் ஓ.ஏ மற்றும் கிளீனிங் வேலைகளுக்குத் தொகுதி மக்களுக்கே முன்னுரிமை கொடுத்திருக்கார். அதனால் அவருக்கு கட்சிக்காரர்கள் மத்தியில் நல்ல பிடிப்பு இருக்கிறது. இருந்தாலும் அண்ணா பல்கலைக்கழக 'விவகாரம்' தான் முகம் சுழிக்க வைக்கிறது. எனினும் நூலிழையில் அ.ம.மு.க. வேட்பாளரை முந்திச் செல்கிறார்.

## 24. தியாகராய நகர்


தி.நகர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு ராஜா அன்பழகன் (திமுக), பி சத்தியநாராயணன் (அஇஅதிமுக), புஸ்ஸி ஆனந்த் (டி.வி.கே), அனுஷா விஜயகுமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் ஜெ.கருணாநிதி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் சத்திய நராயணன் என்ற தி.நகர் சத்யா அவர்களை வெறும் 137 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

இந்த தேர்தலில் திமுக சார்பில் ராஜா அன்பழகன் போட்டியிடுகிறார். அதிமுக வேட்பாளர் சத்யா ரொம்ப வலுவான வேட்பாளராக இருக்கிறார். களத்தில் இறங்கி வேலை செய்கிறார். அதேநேரம் தமிழக வெற்றிக் கழகம் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் இந்த தொகுதியில் களமிறங்குவதால் போட்டி கடுமையாக இருந்தாலும், அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 25. மயிலாப்பூர்

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் வேலு (திமுக), அ.தி.மு.க. கூட்டணியில் தமிழிசை சௌந்தரராஜன் (பாஜக), வெங்கட்ரமணன் (டி.வி.கே), அருண் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் தா வேலு, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஆர். நட்ராஜ் அவர்களை 12,633 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

மயிலாப்பூர் தொகுதியைப் பொறுத்தளவில் அ.தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த நிலையில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர் தமிழிசை பம்பரமாக சுற்றி சுழன்று வருகிறார் இங்கு பிராமனர்கள் வாக்கு வங்கி அதிகம் என்பதும் குறிப்பிடத் தக்கது. இதனால், தி.மு.க., பா.ஜ.க. இடையே கடும்போட்டி நிலவுகிறது.



## 26. வேளச்சேரி

வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் ஜே.எம்.எச்.அசன் மவுலானா (காங்கிரஸ்), எம்.கே. அசோக் (அஇஅதிமுக), ஆர்.குமார் (டி.வி.கே), கீர்த்தனா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் ஜே.எம்.எச்.ஹஸ்ஸான், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எம்.கே. அசோக் அவர்களை 4352 எனும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்

கடந்த முறையே காங்கிரஸ் கஷ்டப்பட்டுதான் வெற்றி பெற்றது. 2026ல் காங்கிரஸ் வெற்றி பெற தி.மு.க. ரொம்ப கஷ்டப்பட்டு வேலை செய்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும். இல்லையென்றால் வாய்ப்பு குறைவுதான். எனவேதான் எம்.கே.அசோக் குமார் வெற்றி வாகை சூட வாய்ப்பிருக்கிறது.

# வேலூர் மாவட்டம்

## 27. காட்பாடி

காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வில் சீனியரான அமைச்சர் துரைமுருகன், ராமு (அஇஅதிமுக), எம்.சுதாகர் (டி.வி.கே), திருக்குமரன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

காட்பாடி தொகுதியில் திமுக பொதுச்செயலாளர், மூத்த அமைச்சர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனின் தொகுதி! 1971, 1989, 1996, 2001, 2006, 2011, 2016, 2021 என 8 முறை இந்த தொகுதி எம்.எல்.ஏ.வாக இருக்கிறார் அமைச்சர் துரைமுருகன். கடந்த 2021 தேர்தலில் அதிமுகவின் ராமுவை விட 746 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே துரைமுருகன் வெற்றி பெற்றார். இந்த முறையும் திமுக வேட்பாளராக களம் காண்கிறார் அமைச்சர் துரைமுருகன். அதிமுகவில் போன முறை நூலிழையில் வெற்றியை இழந்த அதே வி.ராமுதான் களம் காண்கிறார். 'நான் போட்டியிடும் கடைசி தேர்தலாக இருக்கலாம்' என துரைமுருகன் கண்ணீர் விடுவதால், அவரை மீண்டும் கண்ணீர்தான் கரை சேர்க்கும் என்கிறார்கள்!

## 28. வேலூர்

வேலூர் சட்டப்பேரவை தொகுதியில் காங்கிரஸ், திமுக, அதிமுக ஆகிய கட்சிகள் கடந்த சட்டமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளன. 2001 தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ், 2006 தேர்தலில் காங்கிரஸ், 2011 தேர்தலில் அதிமுக, 2016 தேர்தலில் திமுக, 2021 தேர்தலில் திமுக வெற்றி பெற்றுள்ளன. இந்த தேர்தலில் சிட்டிங் எம்எல்ஏ கார்த்திகேயன் மீண்டும் போட்டியிடுகிறார். அதிமுக சார்பில் அப்பு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வினோத் கண்ணன், நாம் தமிழர் கட்சி சார்பில் சோனியா ஆகியோர் களம் காண்கின்றனர்.

அ.தி.மு.க. வேட்பாளர் செலவு செய்வதில் சுணக்கம் காட்டி வருகிறாராம். வேலூர் தொகுதியைப் பொறுத்தளவில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பது முஸ்லிம் வாக்குகள். முஸ்லிம் மக்களிடை நல்லுறவுடன் இருக்கும் தி.மு.க.வின் சிட்டிங் எம்.எல்.ஏ. கார்த்திக்கேயன் மீண்டும் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 29. அணைக்கட்டு

அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. நந்தகுமார், வேலழகன் (அஇஅதிமுக), ஆர்.வேல்முருகன் (டி.வி.கே), ரவிக்குமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் நந்தகுமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வேலழகன் அவர்களை 6360 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கடந்த 2016, 2021ல் திமுகவின் நந்தகுமார் தொடர்ந்து வெற்றி பெற்றார். மூன்றாவது முறையாகவும் நந்தகுமார் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது. காரணம், சாலைவசதி, குடிநீர் வசதி, மருத்துவசதி போன்ற அடிப்படை வசதிகளை ஓரளவு நிறைவேற்றிக்கொடுத்திருக்கிறார் நந்தகுமார்!

## 30. கீழ்வைதினான்குப்பம்

கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தலில் தி.மு.க. சார்பில் ராஜேஸ்வரி மோகன் காந்தி, அ.தி.மு.க. கூட்டணியில் புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி, இ.தென்றல் குமார் (டி.வி.கே), கலையேந்திரி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

கீழ்வைத்தினன்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் வேட்பாளர் எம்.ஜெகன்மூர்த்தி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கே.சீதாராமன் அவர்களை 10,582 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். த.வெ.க. பிரிக்கும் அதிகப்படியான வாக்குகள் பூவை ஜெகன் மூர்த்தியை மீண்டும் சட்டமன்றத்திற்குள் அனுப்பும்!

## 31. குடியாத்தம்

குடியாத்தம் சட்டமன்றத் தொகுயில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. வேட்பாளர் பிரதாப், பரிதா புருஷோத்தமன் (அஇஅதிமுக), கே.சிந்து (டி.வி.கே), இமலன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் வி.அமுலு, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஜி. பரிதா அவர்களை 6901 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

குடியாத்தம் தொகுதியைப் பொறுத்தளவில் அதிமுக, திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் மாறி மாறி வெற்றி பெற்றுள்ளன. இந்த முறை அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது. காரணம், தி.மு.க.வில் நடக்கும் உள்குத்துகள், மட்டும் விட்டமின் குறைபாடுகள்!

# கிருஷ்ணகிரி மாவட்டம்

## 32. ஊத்தங்கரை

ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில், 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ஆர்.குப்புசாமி களமிறங்குகிறார். அ.தி.மு.க.வில் சிட்டிங் எம்.எல்.ஏ.வான டி.எம். தமிழ்செல்வம், பி.குமரவேல் (டி.வி.கே), மேகலா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அதிமுக வேட்பாளர் டி.எம்.தமிழ்செல்வம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஆறுமுகம் அவர்களை 28,387 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

ஊத்தங்கரை தொகுதியைப் பொறுத்தளவில் அ.தி.மு.க.வின் கோட்டையாகவே கருதப்படுகிறது. கடந்த 2011ல் இருந்து 3 தேர்தல்களில் அதிமுக தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. இந்தமுறையும் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டதால் அ.தி.மு.க.வின் வெற்றி எளிதாகிறது.

## 33. பர்கூர்

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. மதியழகன் போட்டியிடுகிறார். இ.சி. கோவிந்தராஜன் (அஇஅதிமுக), இ.முரளிதரன் (டி.வி.கே), கவின் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் தே.மதியழகன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஏ. கிருஷ்ணன் அவர்களை 12,614 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பர்கூர் தொகுதியைப் பொறுத்தவரையில் திமுக, அதிமுக மாறி மாறி ஜெயிக்கிற தொகுதி.. 2021ல் திமுகவின் மதியழகன் வெற்றி பெற்றார். இம்முறையும் அவரே வேட்பாளராக களம் காண்கிறார். அதிமுக வேட்பாளராக களமிறங்கும் கோவிந்தராஜன் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது. தொகுதியில் பொதுவாக ஆளுங்கட்சி மீதான அதிருப்தி அதிகமாக காணப்படுகிறது.

## 34. கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளர்களாக இங்கு ஏ. செல்லகுமார் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. கே.அசோக்குமார், முகுந்த் ஆர்.பாண்டியன் (டி.வி.கே), சுகந்தி பார்த்திபன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அசோக்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் டி.செங்குட்டுவன் அவர்களை 794 என்ற குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

இந்த முறை திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு இந்த தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. காங்கிரஸின் டாக்டர் செல்லகுமார் இங்கே போட்டியிடுகிறார். அதிமுக சார்பில் மீண்டும் அசோக் குமார் களம் காண்கிறார். கடந்த முறை குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற அ.தி.மு.க.வை, அதே குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தக் காத்திருக்கிறது காங்கிரஸ்.

## 35. வேப்பனஹள்ளி

வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் பி.எஸ். ஸ்ரீனிவாசன் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் சீனியரான சிட்டிங் எம்.எல்.ஏ. கே.பி.முனுசாமி மீண்டும் போட்டியிடுகிறார். சம்பங்கி (டி.வி.கே), நாகராஜ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கேபி முனுசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் பி.முருகன் அவர்களை 3054 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் மீது இருந்த விமர்சனங்களையும் தாண்டி கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற கே.பி.முனுசாமி மீண்டும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 36. ஓசூர்

ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் எஸ்.ஏ.சத்யா போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பி.பாலகிருஷ்ண ரெட்டி, எம்.அம்பரீஷ் (டி.வி.கே), ஸ்டாலின் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஒய்.பிரகாஷ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஜோதி பாலகிருஷ்ணா அவர்களை 12.367 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

காங்கிரஸ் அதிக முறை வென்ற தொகுதி. 2021ல் திமுகவின் பிரகாஷ் வெற்றி பெற்றிருந்தார். இந்த முறை அவருக்கு பதில் திமுக வேட்பாளராக சத்யாவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தாலும், தி.மு.க. – காங்கிரஸ் இடையேயான புகைச்சல் தொகுதியில் இழுபறியை ஏற்படுத்துகிறது.



## 37. தளி

தளி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய தி.மு.க. கூட்டணியில் சிட்டிங் எம்.எல்.ஏ.ராமசந்திரன் (சிபிஐ) போட்டியிடுகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. வேட்பாளராக நாகேஷ் குமார் களமிறங்குகிறார். ஜி.சுரேஷ் (டி.வி.கே), நரசிம்மன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். தளீ சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ராமச்சந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ஜ.க. சி.நாகேஷ்குமார் அவர்களை 56226 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

தளி தொகுதியில் 2011, 2021ல் வெற்றி பெற்ற சிபிஐ வேட்பாளராக தளி ராமச்சந்திரன் மீண்டும் களம் காண்கிறார். தொகுதியில் நிலவும் அதிருப்திகள் காரணமாக பா.ஜ.க. வேட்பாளர் நாகேஷ்குமார் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிக்கோட்டை தொடக் காத்திருக்கிறார் என்பதுதான் கள நிலவரம்!

## 38. பாலக்கோடு


பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலிலி தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.பி. வி.செந்தில்குமார், அ.தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. கே.பி.அன்பழகன், ஆர்.கோபி (டி.வி.கே), பூபதி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கே.பிஅன்பழகன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் பி.கே.முருகன் அவர்களை 28,100 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

அதிமுகவின் முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன் 2001ல் இருந்து 5 முறை தொடர்ச்சியாக பாலக்கோடு தொகுதியில் வெற்றி பெறிறிருக்கிறார். இந்த முறையும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும் வாய்ப்பு இருக்கிறது.

## 39. பெண்ணாகரம்

பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ஜி.கே.எம்.தமிழ் குமரன் 'திடீர்' வேட்பாளராக களமிறங்கியிருக்கிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளராக பாடி வெ.செல்வம், சி.கஜேந்திரன் (டி.வி.கே), பழனியம்மாள் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பென்னாகரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் ஜிகே மணி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் பி.என்.பி.இன்பசேகரனை, 21186 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

பா.ம.க.விற்கு செல்வாக்குள்ள தொகுதி என்பதால் அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க. வேட்பாளர் செல்வம் 'டஃப பைட்' கொடுக்கிறார். எனவே பெண்ணாகரம் தொகுதியில் இழுபறியே நிலவுகிறது.



## 40. தர்மபுரி

தர்மபுரி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. வேட்பாளராக இளங்கோவன் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளராக சௌமியா அன்புமணி போட்டியிடுகிறார். எம்.சிவன் (டி.வி.கே), சாந்தலட்சுமி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். தர்மபுரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் பா.ம.க. வேட்பாளர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் தடங்கம் பெ.சுப்பிரமணியனை 26,860 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

தர்மபுரி தொகுதியும் பா.ம.க.விற்கு மிகுந்த செல்வாக்குள்ள தொகுதி. தவிர, அன்புமணியின் மனைவி சௌமியா போட்டியிடுவதால் இந்தத் தொகுதி நட்சத்திர அந்தஸ்தை பெற்றிருக்கிறது. தே.மு.தி.க. வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெறுவார் சௌமியா அன்புமணி என்பதுதான் களநிலவரமாக இருக்கிறது.

## 41. பாப்பிரெட்டிப்பட்டி

பாப்பிரெட்டிப்பட்டி சட்டப்பேரவை தொகுதியில் திமுக சார்பில் பழனியப்பன், அதிமுக சார்பில் மரகதம் வெற்றிவேல், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் திலகவதி, நாம் தமிழர் கட்சி சார்பில் அர்ச்சனா தமிழ் அருவி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

2021 சட்டமன்ற தேர்தலில் அதிமுக வேட்பாளர் கோவிந்தசாமி திமுக வேட்பாளர் பிரபு ராஜசேகரை 36,943 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். 2021 சட்டமன்ற தேர்தலில் அமுமுக சார்பில் போட்டியிட்ட பழனியப்பன் இப்போது திமுக சார்பில் களம் காண்கிறார். இவர் 2011, 2016 ஆகிய தேர்தல்களில் அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி அ.தி.மு.க.வுக்கு மிகவும் செல்வாக்கான தொகுதி. எனினும் அ.தி.மு.க.வில் இருந்து வந்த பழனியப்பன் தி.மு.க. சார்பில் போட்டியிடுவதால், இந்த முறை பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி தி.மு.க. வசமாக வாய்ப்பிருக்கிறது.

## 42. அரூர்

அரூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் சண்முகம் களமிறங்குகிறார். அ.தி.மு.க. சார்பில் சம்பத்குமார் போட்டியிடுகிறார். கே.ராகேஷ் (டி.வி.கே), அனிதா அண்ணாதுரை (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அரூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வி. சம்பத்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வேட்பாளர் ஏ. குமார் அவர்களை 30,362 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இந்த முறை தி.மு.க. நேரடியாக களமிறங்கினாலும், மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது அ.தி.மு.க. மீண்டும் தொகுதியை வசப்படுத்து. அரூரில் த.வெ.க. வேட்பாளர் கணிசமாக பிரிக்கும் வாக்குகள் அ.தி.மு.க.வுக்கு சாதகமாக அமையும் என்கிறார்கள்.

# திருவண்ணாமலை மாவட்டம்

## 43. செங்கம்

செங்கம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. கிரி போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் டி.எஸ்.வேலு களமிறங்குகிறார். கே.பாரதிதாசன் (டி.வி.கே), ஜெ சோபா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். செங்கம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் மு.பெ.கிரி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் நைனாக்கண்ணுவை 11,570 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

செங்கம் தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க., அ.தி.மு.க மாறி மாறி வெற்றி பெற்ற தொகுதி. 2016, 2021ல் திமுகவின் மு.பெ.கிரி வெற்றி பெற்றார். அதிமுக சார்பில் களமிறங்கும் வேலு மீது எந்தவொரு விமர்சனமும் இல்லை. எனவே, குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது வெற்றிக் கோட்டை தொட இருக்கிறார் அதி.மு.க.வின் வேலு!

## 44. திருவண்ணாமலை

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் அமைச்சர் எ.வவேலு போட்டியிடுகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் – பா.ஜ.க. வேட்பாளராக சி. ஏழுமலை போட்டியிடுகிறார். அருள் ஆறுமுகம் (டி.வி.கே), விக்னேஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக எ.வ.வேலு, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் எஸ். தங்கவேலை 94,673 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

1989, 1996, 2001, 2006ல் திமுகவின் முன்னாள் அமைச்சர் கு.பிச்சாண்டி தொடர்ந்து ஜெயிச்சிருந்தார். 2011, 2016, 2021ல் தற்போதைய அமைச்சர் எ.வ.வேலு தொடர்ந்து வெற்றி பெற்று வரும் தொகுதி இது. திருவண்ணாமலை தொகுதியை எ.வ.வேலு தனது கோட்டையாக வைத்திருக்கும் நிலையில் மீண்டும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 45. கீழ்பெண்ணாத்தூர்

கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் சீனியரான கு.பிச்சாண்டி போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் எஸ்.ராமசந்திரன் களம் காண்கிறார். டி.ராஜா (டி.வி.கே), வி.லோகநாதன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கீழ்பென்னத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. வேட்பளார் கு.பிச்சாண்டி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் செல்வக்குமார் அவர்களை 26,787 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுகவின் சீனியரான கு.பிச்சாண்டிஞ் திருவண்ணாமலையில் தொடர்ந்து வெற்றி பெற்றவர். 2016, 2021ல் இங்கேயும் தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறார். இந்த முறையும் கு.பிச்சாண்டி போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து அதிமுகவின் எஸ்.ராமச்சந்திரன் களத்தில் உள்ளார். இழுபறியாக இருந்தாலும், குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 46. கலசப்பாக்கம்

கலசப்பாக்கம் தொகுதியைப் பொறுத்தளவில் 2021ல் திமுகவின் சரவணன் வெற்றி பெற்றார். இந்த முறையும் அவரே களம் காண்கிறார். இவரது தந்தை பெ.சு. திருவேங்கடம், 1977, 1980. 1989, 1996 ல் திமுக எம்.எல்.ஏவாக இருந்தவர். இங்கே அதிமுக வேட்பாளராக நிற்பவர் அக்ரி எஸ் கிருஷ்ணமூர்த்தி. இதே தொகுதியில 2006, 2011ல் எம்.எல்.ஏ.வாக இருந்தவர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி.

கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் பெ.சு.தி.சரவணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வி. பன்னீர்செல்வம் அவர்களை 9222 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த முறை அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 47. போளூர்

போளூர் தொகுதியில் கடந்த முறை அதிமுகவின் அக்ரி எஸ் கிருஷ்ணமூர்த்தி போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். திமுக, அதிமுக, காங்கிரஸ் மாறி மாறி வெற்றி பெற்ற தொகுதி இது. இந்த முறை திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தேமுதிக வேட்பாளராக டி.பி.சரவணன் களம் காண்கிறார்.

அதிமுக கூட்டணியில பாமகவுக்கு கொடுக்கப்பட்டிருப்பதால், பாமக வேட்பாளராக சி.ஆர். பாஸ்கரன் போட்டியிடுகிறார். போளூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கே.வி.சேகரன் அவர்களை 9725 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்த முறை அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வெற்றி பெறும் சூழல் உருவாகியிருக்கிறது.

## 48. ஆரணி

ஆரணியை தொகுதியில் அதிமுகவின் சேவூர் ராமச்சந்திரன் கடந்த 2016, 2021 தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்றார். இந்த முறை அதிமுக வேட்பாளராக ஜெயசுதா போட்டியிடுகிறார். தி.மு.ச. சார்பில் மகாலட்சுமி கோவர்தன் களம் காண்கிறார். ஏ.வெங்கடேசன் குமார் (டி.வி.கே), தவமணி ரமேஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அதிமுக, திமுக மாறி மாறி வெற்றி பெற்ற தொகுதி!

ஆரணி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் வேட்பாளர் சேவூர் ராமச்சந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எஸ்.எஸ்.அன்பழகனை 3,128 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த முறை அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயசுதா வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 49. செய்யாறு

செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் ஜோதி களம் காண்கிறார். அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் போட்டியிடுகிறார். தூசி.கே. மோகன் (டி.வி.கே), தமிழ்ச் செல்வன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் ஓ.ஜோதி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் தூசி மோகனை 12,271 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

செய்யாறு தொகுதியில் போட்டியிடும் நான்கு வேட்பாளர்களுமே வன்னியர் சமூகத்தினர் என்பதால், தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவினாலும், த.வெ.க. பிரிக்கும் வாக்குகள் அ.தி.மு.க.விற்கு சாதகமாக அமைவதால், அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 50. வந்தவாசி

வந்தவாசி தனித் தொகுதியைப் பொறுத்தளவில் திமுக, அதிமுக அதிக முறை வெற்றி பெற்றிருந்தாலும், பாமகவும் 2001ல் ஒருமுறை வெற்றி பெற்ற தொகுதி. கடந்த 2016, 2021 தேர்தல்களில் திமுகவின் அம்பேத்குமார் தொடர்ச்சியாக இரண்டு முறை வெற்றி பெற்றிருக்கிறார். இந்த முறையும் சிட்டிங் எம்.எல்.ஏ. அம்பேத்குமார் திமுக வேட்பாளராக களம் காண்கிறார்.

அ.தி.மு.க. சார்பில் ராணி போட்டியிடுகிறார். உதயகுமார் (டி.வி.கே), கணேஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக எஸ்.அம்பேத்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் முரளி சங்கரை 35,953 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த முறை அ.தி.மு.க. நேரடியாக போட்டியிடுவதால், மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

# விழுப்புரம் மாவட்டம்

## 51. செஞ்சி

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக முன்னாள் அமைச்சர் 'செஞ்சி' மஸ்தான் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளராக கணேஷ், வி.சந்திரசேகரன் (டி.வி.கே), கிருஷ்ணன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கே.எஸ்.மஸ்தான், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் எம்.பி.எஸ். ராஜேந்திரன் அவர்களை 35803 வாக்குகள் வித்தியாசத்தில்

செஞ்சி தொகுதியில் 2016, 2021 தேர்தல்களில் மஸ்தான் தொடர்ச்சியாக வெற்றி பெற்றிருக்கிறார். அதிமுக கூட்டணியில பாமகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த தொகுதியில 2011ல் எம்..எல்.ஏ.வாக இருந்த கணேஷ்குமார் போட்டியிடுகிறார். செஞ்சி மஸ்தானுக்கு தொகுதியில் அதிருப்தி நிலவுகிறது. இந்த அதிருப்தி பா.ம.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்யும் என்கிறார்கள்.

## 52. மயிலம்

மயிலம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. வேட்பாளராக எஸ்.வெங்கடேசன் போட்டியிடுகிறார். அ.தி.மு.க.வில் முன்னாள் அமைச்சரும், ராஜ்யசபா எம்.பி.யுமான சி.வி.சண்முகம் போட்டியிடுகிறார். ஏ.விஜய் நிரஞ்சன் (டி.வி.கே), விஜய் விக்ரம் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

மயிலம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் சிவக்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. மாசிலாமணியை 2,230 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பா.ம.க.வுக்கு மிகவும் செல்வாக்குள்ள தொகுதி என்பதாலும், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இருப்பதால் சி.வி.சண்முகத்தின் வெற்றி உறுதியாகியிருக்கிறது.

## 53. திண்டிவனம்

திண்டிவனம் தனித் தொகுதியை பொறுத்தளவில் திமுக, அதிமுக மாறி மாறி வெற்றி பெறுகிற தொகுதி. 2021ல் அதிமுகவின் அர்ச்சுனன் வெற்றி பெற்றார். திமுகவின் சீதாபதி 9,753 ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.இந்த முறை திமுக கூட்டணியில் விசிகவின் துணை பொதுச்செயலாளர் வன்னி அரசு களம் காண்கிறார். போன முறை வானூர் தொகுதியில் போட்டியிட்ட வன்னி அரசு வெற்றி பெறவில்லை.

அதிமுகவில சிட்டிங் எம்.எல்.ஏ. அர்ச்சுனனே மீண்டும் வேட்பாளராக களமிறங்கியிருக்கிறார். தவெக சார்பில் சக்திவேல், நாதக சார்பில் பேச்சிமுத்து ஆகியோர் களம் காண்கின்றனர். இங்கே பாமகவும் கணிசமான வாக்குகளை வைத்திருக்கிறது. எனவே, அ.தி.மு.க., விசிக இடையே கடும் போட்டி நிலவினாலும், த.வெ.க. பிரிக்கும் வாக்குகள், அ.தி.மு.க. மீண்டும் வாகை சூட வைக்கிறது.

## 54. வானூர்

வானூர் தனி தொகுதியில் 2021ல் அதிமுக வெற்றி பெற்றது. இந்த முறை சிட்டிங் எம்.எல்.ஏ. சக்கரபாணிக்கு பதிலாக முருகன் அதிமுக வேட்பாளராக களமிறங்குகிறார். கடந்த முறை தன்னை எதிர்த்து போட்டியிட்ட விசிக வேட்பாளர் வன்னி அரசுவை 21,727 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

திமுக வேட்பாளராக கௌதம் திராவிடமணி களத்தில் இருக்கிறார். 2001ல் இருந்தே அதிமுக தொடர்ந்து வெற்றி பெற்று வரும் இந்த தொகுதியில 2026ல் கள நிலவரப்படி சமமான போட்டி நிலவுகிறது. தவெக சார்பில் சுரேஷ், நாதக சார்பில் கரிகாலன் ஆகியோர் களம் காண்கின்றனர். வானூர் தொகுதியைப் பொறுத்தளவில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பது வன்னியர் சமூகத்தினர். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இருப்பதால், அ.தி.மு.க. வேட்பாளரே முந்திச் செல்கிறார்.

## 55. விழுப்புரம்

விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் மருத்துவர் லட்சுமணன் களமிறங்குகிறார். கே. விஜயா (அஇஅதிமுக), என்.மோகன்ராஜ் (டி.வி.கே), அபிநயா பொன்னிவளவன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஆர்.லட்சுமணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களை 14,868 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

விழுப்புரம் தொகுதியை கேட்டு தேமுதிக போராடியது. ஆனால் சிட்டிங் எம்.எல்.ஏ லட்சுமணன் இதை விட்டுக்கொடுக்கவில்லை. இதை திமுக தலைமையும் ஏற்றுக்கொண்டது. இந்த தொகுதியில் 4 முறை முன்னாள் அமைச்சர் பொன்முடி வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் மீண்டும் தி.மு.க. தொகுதியை தக்க வைத்துக்கொள்ளும் என்பதுதான் களநிலவரமாக இருக்கிறது.

## 56. விக்கிரவாண்டி

விக்கிரவாண்டி தொகுதியையும் திமுக கூட்டணியில தேமுதிக கேட்டு பார்த்தது. 2021ல் திமுகவின் புகழேந்தி வெற்றி பெற்றார். ஆனால் அவர் இறந்ததால் 2024ல் இடைத்தேர்தல் நடந்தது. அதில் திமுகவின் அன்னியூர் சிவா வெற்றி பெற்றார். பல திட்டங்களை விக்கிரவாண்டிக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். இந்நிலையில் 2026 தேர்தலில் விக்கிரவாண்டி தொகுதியில் மீண்டும் திமுக வேட்பாளராக அன்னியூர் சிவா களம் காண்கிறார்.

இங்கே அதிமுக கூட்டணியில பாமகவின் சிவக்குமார் போட்டியிடுகிறார். தவெக சார்பில் விஜய் வடிவேல், நாதக சார்பில் சுதா சந்திரசேகரன் ஆகியோர் களம் காண்கின்றனர். தி.மு.க. மற்றும் பா.ம.க. இடையே கடும் போட்டி நிலவினாலும், தி.மு.க. முன்னணியில் இருக்கிறது.

## 57. திருக்கோயிலூர்

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பொன்முடியின் மகன் கௌதம சிகாமணி களமிறங்குகிறார். எஸ்.பழனிசாமி (அஇஅதிமுக), பரணி பாலாஜி (டி.வி.கே), ஹேமராஜன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் க.பொன்முடி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் வி.ஏ.டி. கலிவரதன் அவர்களை 59,680 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

தன்னைச் சுற்றி வழக்குகள் வளைப்பதால், பொன்முடி போட்டியிடவில்லை. அவருக்கு பதிலாக அவரது மகன் களமிறங்கியிருக்கிறார். திருக்கோவிலூர் தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவினாலும், கௌதம சீகாமணி குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிக் கோட்டை தொடுகிறார்.

# சேலம் மாவட்டம்

## 58. கெங்கவல்லி

கெங்கவல்லி தொகுதியை பொறுத்தவரை அதிமுக நல்லதம்பிதான் இப்போது சிட்டிங் எம்.எல்.ஏ. வாக இருக்கிறார். 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட திமுகவின் ரேகா பிரியதர்ஷினியை 7,361 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

2026 தேர்தலில் திமுக வேட்பாளராக சின்னதுரை அதிமுக வேட்பாளராக நல்லதம்பி போட்டியிடுகிறார்கள். தவெக சார்பில் சுஜாதா, நாதக சார்பில் அபிராமி நெடுஞ்சேரலாதன் ஆகியோர் களம் காண்கின்றனர். தி.மு.க. அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவினாலும், மீண்டும் நல்ல தம்பிக்கு குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது வெற்றி பெறுவார் என்பதுதான் கள நிலவரமாக இருக்கிறது.

## 59. ஆத்தூர்

சேலம் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில், 2021 அதிமுக வெற்றி பெற்றது. தற்போது சிட்டிங் எம்.எல்.ஏ.வாக இருக்கும் ஜெயசங்கரன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் சின்னதுரையை 8,257 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்த தேர்தலில் அதிமுக வேட்பாளராக மீண்டும் ஜெயசங்கரன் போட்டியிடுகிறார். ஆத்தூர் தொகுதி திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கட்சி வேட்பாளராக அர்த்தநாரி களமிறங்கிறார். இவரும் தேர்தல் களத்துக்கு புதியவர் அல்ல. 2011, 2016 தேர்தல்களில் போட்டியிட்டவர்தான். தவெக சார்பில் செல்வபாரதி, நாதக சார்பில் மோனிஷா சின்னதுரை போட்டியிடுகின்றனர். ஆத்தூர் தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க. நேரடியாக போட்டியிட்டால், அ.தி.மு.க.வுக்கு நெருக்கடி கொடுத்திருக்கலாம். இங்கு தி.மு.க., காங்கிரஸ் இடையேயான இணக்கமான சூழல் இல்லாதது, அ.தி.மு.க.வுக்கு தொகுதியை சாதகமாக மாற்றுகிறது!

## 60. ஏற்காடு

ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் ரேவதி மாதேஸ்வரன் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. வேட்பாளராக உஷாராணி களமிறங்குகிறார். ஜே.லட்சுமி (டி.வி.கே), பழனிசாமி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கு. சித்ரா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சி.தமிழ்செல்வன் அவர்களை 25,955 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஏற்காடு தொகுதியை எப்படியாவது கைப்பற்றியாக வேண்டும் என முழு வீச்சுடன் தி.மு.க. களமிறங்கினாலும், அ.தி.மு.க.விற்கு இருக்கும் வாக்கு வங்கி உஷா ராணியை உற்சாகமடைய வைக்கிறது. தி.மு.க. வேட்பாளரை அ.தி.மு.க. வேட்பாளர் நூலிழையில் முந்திச் செல்கிறார்.

## 61. ஓமலூர்

ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. வேட்பாளராக இளங்கோவன் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. வேட்பாளராக ஆர்.மணி களமிங்குகிறார். ஆர்.வி.அதியமான் (டி.வி.கே), சிவசக்தி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஆர். மணி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.மோகன் குமாரமங்கலம் அவர்களை 55294 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஓமலூர் தொகுதியைப் பொறுத்தளவில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பது வன்னியர் சமூகத்தினர். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இருப்பதால், அ.தி.மு.க. வேட்பாளர் முந்திச் செல்கிறார்.

## 62. மேட்டூர்

மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தி.மு.க. சார்பில் மிதுன் சக்கரவர்த்தி போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் ஜி.வெங்கடாசலம் போட்டியிடுகிறார். கே.செல்வம் (டி.வி.கே), வித்யா வீரப்பன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் பா.ம.க. வேட்பாளர் சதாசிவம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் எஸ். சீனிவாச பெருமாளை குறைந்த வாக்குகள் ( 656) வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவினாலும், பா.ம.க. கூட்டணியில் இருப்பதால், அ.தி.மு.க. முந்திச் செல்கிறது.

## 63. எடப்பாடி

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்மன்றத் தேர்தலில் அ.தி.முக.வின் முன்னாள் முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி போட்டியிடுவதால் இந்தத் தொகுதி ஸ்டார் அந்தஸ்தைப் பெறுகிறது.

தி.மு.க. சார்பில் காசி களம் காண்கிறார். பிரியதர்ஷினி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கே.பழனிச்சாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் த.சம்பத்குமார் அவர்களை 93L802 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

'தி.மு.க.வுக்கும், த.வெ.க.வுக்கும்தான் போட்டி' என விஜய் கூறிவந்த நிலையில், எடப்பாடி எதிர்த்து த.வெ.க. சார்பில் வேட்புமனு தாக்கல் செய்ததோடு சரி, களம் காணவில்லை. காரணம், வேட்பாளர் மாயமாகி விட்டதாக புகார் எழுந்தது. எனினும் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இருப்பதால், எடப்பாடி பழனிசாமி மீண்டும் அபார வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறார்.

## 64. சங்ககிரி

சங்ககிரி தொகுதியைப் பொறுத்தளவில் 1977, 1980, 1984, 2001ல் முன்னாள் சபாநாயகர் தனபால் வெற்றி பெற்றார். 2011, 2016, 2021 தேர்தல்களில் அதிமுகவின் விஜயலட்சுமி, எஸ்.ராஜா, எஸ்.சவுந்திரராஜன் வெற்றி பெற்றார்.


2026ல் மணிகண்டன் (திமுக), வெற்றிவேல் (அஇஅதிமுக), செந்தில்குமார் (டி.வி.கே), நித்யா அருள் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சுந்தரராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் கே.எம்.ராஜேஷ் அவர்களை 20,045 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அதிமுக 8 முறை வெற்றி பெற்ற தொகுதி என்பதாலும், மீண்டும் இங்கு அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது. காரணம், அ.தி.மு.க.வின் கோட்டையாகவே சங்ககிரி தொகுதி பார்க்கப்படுகிறது!

## 65. சேலம் மேற்கு

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. வேட்பாளராக மோகன் ராஜ் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளராக கார்த்தி களமிறங்குகிறார். எஸ்.லட்சுமணன் (டி.வி.கே), சுரேஷ் குமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சேலம் ( மேற்கு ) சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் இரா.அருள், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. ராஜேந்திரனை 21,499 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

சேலம் மேற்கு தொகுதியில் 2011, 2016ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில் அதிமுக வேட்பாளர் வெங்கடாசலம், 2021 தேர்தலில் பாமக சார்பில் போட்டியிட்ட அருள் ஆகியோர் வெற்றி பெற்றனர். தற்போது பா.ம.க.வில் ஏற்பட்ட பிளவின் தாக்கம் மேற்கு தொகுதியில் தெரிகிறது. எனவே, நூழிலையில் தே.மு.தி.க. வேட்பாளர் மோகன்ராஜ் முந்திச் செல்கிறார்.



## 66. சேலம் வடக்கு

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தளவில் தொகுதி மறுசீரமைப்புக்கு பின்னர் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதிமுக கூட்டணியில் தேமுதிக வேட்பாளர் அழகாபுரம் மோகன்ராஜ் வெற்றி பெற்றார். 2016, 2021 ஆகிய தேர்தல்களில் திமுக வேட்பாளர் பனமரத்துப்பட்டி ரா.ராஜேந்திரன் வெற்றி பெற்றார். தற்போது இவர் சுற்றுலாத்துறை அமைச்சராக உள்ளார்.

மீண்டும் 2026 தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடுகிறார். என்டிஏ கூட்டணியில் பாமக வேட்பாளர் சதாசிவம், தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சிவகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் குணசீலா ஆகியோர் சேலம் வடக்கு தொகுதியில் களம் காண்கின்றனர். இந்தத் தொகுதியைப் பொறுத்தளவில் பனமரத்துப்பட்டி ராஜேந்திரனுக்கு சாதகமாகவே இருக்கிறது. இதனால், மீண்டும் பனமரத்துப்பட்டி ராஜேந்திரன் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 67. சேலம் தெற்கு

சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் எம் .லோகநாதன் களமிறங்குகிறார். அ.தி.மு.க. சார்பில் வினோத் போட்டியிடுகிறார். விஜய் தமிழன் பார்த்திபன் (டி.வி.கே), சோபியா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சேலம் ( தெற்கு ) சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பாலசுப்பிரமணியன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எ.எஸ்.சரவணன் அவர்களை 22,609 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


சேலம் தெற்கு தொகுதியில் இதுவரை அதிமுக 8 முறையும், காங்கிரஸ் 3 முறையும், திமுக 4 முறையும் வெற்றி பெற்றுள்ளன. இந்த முறை தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும்போட்டி நிலவினாலும், மீண்டும் அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 68. வீரபாண்டி

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் மீண்டும் தருண் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பல் டாக்டர் பாலாஜி சுகுமார் களத்தில் இருக்கிறார். எம்.எஸ். பழனிவேல் (டி.வி.கே), ராஜேஷ் குமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எம். ராஜா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் தருண் அவர்களை 19,895 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

இந்த தொகுதியில் அதிமுக 8 முறையும், திமுக., 6 முறையும், காங்கிரஸ் ஒரு முறையும் வெற்றி பெற்றிருக்கின்றன. 2026 சட்டமன்ற தேர்தலில் இந்த தொகுதியில் மீண்டும் திமுக சார்பில் தருண் களம் இறங்குகிறார். தி.மு.க. அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுகிறது. எனவே, தொகுதியில் இழுபறி நீடிக்கிறது!



# நாமக்கல் மாவட்டம்

## 69. இராசிபுரம்

இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் சிட்டிங் அமைச்சர் மதிவேந்தன் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. வேட்பாளர் எஸ்.டி.பிரேம்குமார் களம் காண்கிறார். த.வெ.க. சார்பில் முன்னாள் சபாநாயகர் தனபால் மகன் லோகேஷ் தனபால் போட்டியிடுகிறார். சசிகலா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் மா.மதிவேந்தன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வி.சரோஜா அவர்களை 1,952 வாக்குகள் என குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இராசிபுரம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் லோகேஷ் தனபால், அ.தி.மு.க.வின் வாக்குகளை பிரிப்பதால், மீண்டும் மதிவேந்தன் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 70. சேந்தமங்கலம்

சேந்த மங்கலங் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் பூமலர் வேட்பாளராக களமிறங்குகிறார். அ.தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரசேகரன் போட்டியிடுகிறார். பி.சந்திரசேகர் (டி.வி.கே), பொன்னுமணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

சேர்ந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கே.பொன்னுசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சந்திரன் அவர்களை 10,493 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1996, 2016ல் சந்திரசேகரன் இந்த தொகுதியில் வெற்றி பெற்று எம்.எல்.ஏ.வாக இருந்தவர். அதிமுக 8 முறை, திமுக 5 முறை வென்ற தொகுதி. 2011ல் அ.தி.மு.க. கூட்டணியில் தேமுதிக இங்கே வெற்றி பெற்றது. மீண்டும் சந்திரசேகரன் சட்டப்பேரவைக்குள் நுழைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

## 71. நாமக்கல்

நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக இராணி களமிறங்குகிறார். அ.தி.மு.க. சார்பில் ஸ்ரீதேவி போட்டியிடுகிறார். டி.எஸ்.திலீப் (டி.வி.கே), பிரவீன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் பெ.ராமலிங்கம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கேபிபி பாஸ்கர் அவர்களை 27,861 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் நாமல்லில் அ.தி.மு.க.வை வெற்றி பெற வைத்தாகவேண்டும் என தங்கமணி களப்பணியாற்றி வருவதால், அ.தி.மு.க. கரைசேர வாய்ப்பிருக்கிறது.

## 72. பரமத்தி வேலூர்

பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்மன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக கே.எஸ். மூர்த்தி (திமுக), எஸ். சேகர் (அஇஅதிமுக), ஏ.நந்தகுமார் (டி.வி.கே), அரவிந்த் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எஸ். சேகர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி அவர்களை 7662 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். 2021ல் அதிமுகவின் சேகர் வெற்றி பெற்றிருந்தார். மீண்டும் சேகரே அதிமுக வேட்பாளராக களம் காண்கிறார்.


திமுகவில் போன முறை போட்டியிட்டு தோல்வி அடைந்த மூர்த்தி மீண்டும் திமுக வேட்பாளராக நிற்கிறார். அ.தி.மு.க. மீது கொஞ்சம் அதிருப்தி இருப்பதால், தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 73. திருச்செங்கோடு

திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் ஈஸ்வரன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் ஆர்.சந்திரசேகர், த.வெ.க. சார்பில் ஓய்வு பெற்ற ஐ.ஆர்.எஸ். அதிகாரி கே.ஜி. அருண்ராஜ் உள்பட ரேவதி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில்

கடந்த 2021 தேர்தலில் கொங்கு ஈஸ்வரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பொன். சரஸ்வதி அவர்களை மிகவும் குறைந்த 2,862 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

திருச்செங்கோடு தொகுதியில் த.வெக. அதிக வாக்குகளை பிரிப்பதால், வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதில் இழுபறியாக இருக்கிறது.



## 74. குமாரபாளையம்

அதிமுகவின் மூத்த தலைவர்களில் ஒருவரான தங்கமணியின் தொகுதியாக குமாரபாளையம் பார்க்கப்படுகிறது. 2011 முதல் இந்த தொகுதியில் தொடர்ந்து தங்கமணி வெற்றி பெற்று வருகிறார்.

2021 தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் வெங்கடாஜலத்தை 31,646 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இந்த தேர்தலில் மீண்டும் தங்கமணி களம் காண்கிறார். அவரை எதிர்த்து திமுக சார்பில் பாலு போட்டியிடுகிறார். தமிழக வெற்றி கழகம் சார்பில் விஜயலட்சுமி, நாம் தமிழர் கட்சி சார்பில் யுவராணி ஆகியோர் போட்டியிடுகின்றனர். மீண்டும் நான்காவது முறையாக குமாரபாளையம் தொகுதியில் தங்கமணி வெற்றி பெறுகிறார்.

# ஈரோடு மாவட்டம்

## 75. ஈரோடு கிழக்கு

ஈரோடு கிழக்கு தொகுதியில் தொகுதி மறுசீரமைப்பு செய்த பிறகு 2011 சட்டப்பேரவை தேர்தலில் தேமுதிக வேட்பாளர் வி.சி சந்திரசேகர் வெற்றி பெற்றார். 2016 சட்டமன்ற தேர்தலில் அதிமுக வேட்பாளர் தென்னரசு வெற்றி பெற்றார்.

2021 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமகன் ஈவெரா வெற்றி பெற்றார். அவரது மறைவுக்குப் பிறகு 2023ல் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் அவரது தந்தை ஈவிகேஎஸ் இளங்கோவன் வெற்றி பெற்றார். பின்னர் அவரும் மறைந்ததை தொடர்ந்து 2025 இல் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் திமுக வேட்பாளர் வி.சி சந்திரகுமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை 90,629 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் போட்டியிடும் இந்த தொகுதியில் கோபிநாத் பழனியப்பன் களம் காண்கிறார். அதிமுக சார்பில் மனோகரன், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் விஜய் பாலாஜி, நாம் தமிழர் கட்சி சார்பில் தாண்டவமூர்த்தி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

த.வெ.க. பிரிக்கும் வாக்குகள் மற்றும் சிறுபான்மையினர் வாக்குகள் ஈரோடு கிழக்கில் காங்கிரஸை கரைசேர்க்கிறது.

## 76. ஈரோடு மேற்கு

ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க சார்பில் அமைச்சர் முத்துசாமி, அ.தி.மு.க. கூட்டணியில் த.மா.கா. வேட்பாளராக எம். யுவராஜா, கே.கே.ஆனந்த் மோகன் (டி.வி.கே), விஜய் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஈரோடு(மேற்கு) சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சு.முத்துசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கேவிராமலிங்கம் அவர்களை 22089 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஈரோடு கிழக்கு தொகுதியை குறி வைத்து வேலைபார்த்து வந்த யுவராஜாவுக்கு, மேற்கு தொகுதியைதிடீரென்றுஒதுக்கியிருப்பதுதி.மு.க.விற்கு பிளஸ்ஸாக அமைந்திருக்கிறது. எனவே, அமைச்சர் முத்துசாமியின் வெற்றி எளிதாகிறது.

## 77. மொடக்குறிச்சி

மொடக்குறிச்சி தொகுதியில் திமுகவின் மூத்த தலைவர் சுப்புலட்சுமி ஜெகதீசன், பாஜகவின் சரஸ்வதியிடம் 281 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். பிறகு சுப்புலட்சுமி ஜெகதீசன் தீவிர அரசியலில் இருந்தே ஒதுங்கிவிட்டார். 2026 சட்டமன்றத் தேர்தலில் மொடக்குறிச்சி தொகுதியில் மதிமுகவும், பாஜகவும் மோதுகிறது. பாஜக வேட்பாளராக சிட்டிங் எம்.எல்.ஏ. சரஸ்வதியின் மருமகள் கிருத்திகா போட்டியிடுகிறார். மதிமுகவில செந்தில்நாதன் களம் காண்கிறார்.தவெக சார்பில் சண்முகம், நாதக சார்பில் அருண் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

தி.மு.க.வில் நிலவி வரும் அதிருப்தியும், த.வெ.க. பிரிக்கும் வாக்குகளும் சரஸ்வதியின் மருமகள் கிருத்திகாவை வெற்றி பெற வைக்கிறது.

## 78. பெருந்துறை


பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாச்சலம், சிட்டிங் அதிமுக எம்.எல்.ஏ., எஸ்.ஜெயக்குமார், வி.டி. அருணாசலம் (டி.வி.கே), லோகு (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

பெருந்துறை தொகுதியில் திமுக வேட்பாளராக களமிறங்கும் தோப்பு வெங்கடாசலம் 2011, 2016 ல் அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றவர். இவர் கொண்டுவந்த கொடிவேரி கூட்டுக்குடிநீர் திட்டம் இன்றளவிலும் குடிநீர் பிரச்னையை தீர்த்து வருகிறது. ஏற்கனவே இவர் அமைச்சராக இருக்கும்போது கொண்டு வந்த திட்டங்கள் தோப்பு வெங்கடாச்சலத்தின் வெற்றியை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் உறுதி செய்கிறது.

## 79. பவானி

பவானி தொகுதி, அதிமுக முன்னாள் அமைச்சர் கே.சி. கருப்பண்ணன் தொகுதி. 2001, 2016, 2021ல் பவானி தொகுதியில் ஜெயித்தவர் கேசி கருப்பண்ணன். இந்த முறையும் அதிமுக வேட்பாளராக போட்டியிடுகிறார். திமுக வேட்பாளராக கே.ஏ.சேகர், புதுமுகம் களம் காண்கிறார். அதிமுக முன்னிலை வகித்தாலும் கடும் போட்டி நிலவுகிறது.

காரணம், எடப்பாடி பழனிசாமியின் சம்மந்தி உறவு என்ற ஒற்றைக் காரணத்தை வைத்துக்கொண்டு கே.சி.கருப்பண்ணன் அ.தி.மு.க.வினரிடம் அதிகப்படியான அதிருப்திகளை சம்பாதித்திருக்கிறார்.



## 80. அந்தியூர்

அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் சிவபாலன் (திமுக), ஹரிபாஸ்கர் (அஇஅதிமுக), எம்.விஜய் வெங்கடேஷ் (டி.வி.கே), ஆனந்தி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எ.ஜி.வெங்கடாச்சலம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கே.எஸ். சண்முகவேல் அவர்களை 1275 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

தி.மு.க., அ.தி.மு.க.வில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களுமே ஒன்றியச் செயலாளர்களாக இருக்கிறார்கள், தவிர, இரண்டு பேருமே புதுமுகம் என்பதால் அந்தியூர் தொகுதியில் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதால் இழுபறி நீடிக்கிறது!




## 81. கோபிச்செட்டிப்பாளையம்

தமிழ்நாடு ரொம்பவே எதிர்பார்க்கிற தொகுதி கோபிசெட்டிப்பாளையம். இந்த தொகுதியில 8 முறை வெற்றி பெற்ற அதிமுகவின் மூத்த தலைவராக இருந்த கே.ஏ.செங்கோட்டையன் இந்த முறை தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளராக களம் காண்கிறார்.

1980ம் ஆண்டு எம்ஜிஆர் காலம் முதல் கோபியை கோட்டையாக வைத்திருப்பவர் செங்கோட்டையன். 1996ல் திமுகவின் ஜிபி வெங்கிடு, செங்கோட்டையனை வீழ்த்தியவர். 1977க்குப் பின் கோபி தொகுதியில 11 தேர்தல்கள் நடந்திருக்கிறது. இதில் மொத்தம் 10 முறை அதிமுகதான் வெற்றி பெற்றிருக்கிறது.

இந்த முறை திமுக வேட்பாளராக நல்லசிவம், அதிமுக வேட்பாளராக பிரபு ஆகியோர் களம் காண்கின்றனர். த.வெ.க. வேட்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் பிரிக்கும் அதிகப்படியான வாக்குகள் கோபி தொகுதியில் இழுபறி நீடிக்கிறது.



## 82. பவானி சாகர்

பவானிசாகர் தொகுதியில் திமுக கூட்டணியில சிபிஐ கட்சியின் பிஎல் சுந்தரம் களம் காண்கிறார். 2011ல் பிஎல் சுந்தரம் இந்த தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாக இருந்தவர். அதிமுக வேட்பாளராக பண்ணாரி போட்டியிடுகிறார். அதிமுக வேட்பாளர் பண்ணாரிதான் சிட்டிங் எம்.எல்.ஏ.வாக இருக்கிறார்.

2021 தேர்தலில் பிஎல் சுந்தரம் போட்டியிட்டு 16,008 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை இழந்தார். 2026 தேர்தலில் தவெக சார்பில் தமிழ்செல்வி, நாதக சார்பில் சௌந்தர்யா ஆகியோர் களம் காண்கின்றனர். இந்தத் தொகுதி தி.மு.க. கூட்டணிக்கு ஒதுக்கியதால், அக்கட்சியினர் அதிருப்தியில் இருக்கிறார்கள். தி.மு.க.வினரின் அதிருப்தி மற்றும் த.வெ.க. பிரிக்கும் வாக்குகள் மீண்டும் பண்ணாரியை வெற்றி பெற வைக்கிறது.

# திருப்பூர் மாவட்டம்

## 83. தாராபுரம்

தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் இந்திராணி (திமுக), சத்தியபாமா (அஇஅதிமுக), கவுரி சித்ரா (டி.வி.கே), திவ்யா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கயல்விழி செல்வராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் எல்.முருகன் அவர்களை 1393 வாக்குகள் வித்தியாசத்தில் பெற்றார்.

அமைச்சர் கயல்விழி செல்வராஜுக்கு இந்த முறை வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. தவிர, தி.மு.க.வில் நிலவும் உட்கட்சிப் பூசல் தாராபுரம் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரை கரைசேர்க்கிறது.

## 84. காங்கேயம்

காங்கேயம் சட்டமன்ற தொகுதி இந்த சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு மு.பெ. சாமிநாதன் (திமுக), என்.எஸ்.என். நடராஜ் (அஇஅதிமுக), டி.மணி (டி.வி.கே), கார்மேகன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சாமிநாதன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர்ராமலிங்கம். அவர்களை 7331 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது. தற்போதைய கள நிலவரப்படி காங்கேயம் தொகுதியில் திமுகவே மீண்டும் கால் பதிக்கிறது.

## 85. அவினாசி

அவினாசி சட்டமன்ற தொகுதியில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக டாக்டர். கோகிலா மணி (திமுக), எல். முருகன் (பாஜக), எஸ்.கமலி (டி.வி.கே), மேனகா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

அவினாசி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் தனபால், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ATP வேட்பாளர் அதியமான் அவர்களை 50902 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

திமுகவில் இளம்பெண் வேட்பாளராக களமிறங்கியுள்ள டாக்டர் கோகிலா மணியின் வெற்றி அவிநாசியில் கிட்ட தட்ட உறுதியாகியிருக்கிறது.

## 86. திருப்பூர் வடக்கு


திருப்பூர் வடக்கு தொகுதியில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன், திமுக கூட்டணி (இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ரவி சுப்பிரமணியன்), மற்றும் தவெக (சத்தியபாமா) இடையே கடும் முக்கோணப் போட்டி நிலவுகிறது. திருப்பூர் வடக்கு தொகுதியில் கடந்த 2011ம் ஆண்டு முதல் நடைபெற்ற 3 சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் அதிமுக வேட்பாளர்களே வெற்றி பெற்றுள்ளனர்.

2016, 2021 தேர்தல்களில் கே.என்.விஜயகுமார் வெற்றி பெற்றார். பல்லடம் தொகுதிசட்டப்பேரவை உறுப்பினர் எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்த முறை சொந்த தொகுதியை கட்சித் தலைமையிடம் கேட்டுப் போட்டியிடுகிறார். இம்முறையும் அதிமுகவுக்கே வெற்றி வாய்ப்பு.

## 87. திருப்பூர் தெற்கு

திருப்பூர் (தெற்கு) தொகுதியில் தினேஷ் குமார் (திமுக), எஸ். தங்கராஜ் (பாஜக), எஸ்.பாலமுருகன் (டி.வி.கே), பேரறிவாளன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருப்பூர் (தெற்கு) சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் க.செல்வராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் குணசேகரன் அவர்களை 4709 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

இந்தச் சட்டமன்றத் தொகுதி திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது வெற்றியைப் பதிவு செய்தது. அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளரின் தந்தை அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ். காரர். தவிர, இந்து முன்னணி வாக்குகளிலும் அப்படியே பா.ஜ.க.விற்கு விழுவதால், தி.மு.க.விற்கு கடும் போட்டி கொடுக்கிறார். இதனால் தொகுயில் இழுபறி நீடிக்கிறது.



## 88. பல்லடம்

பல்லடம் சட்டமன்றத் தொகுதி திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. பல்லடம் சட்டமன்ற சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு செல்வராஜ் (திமுக), பரமசிவம் (அஇஅதிமுக), கே.ராம்குமார் (டி.வி.கே), தமிழினியன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

பல்லடம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எம்.எஸ்.எம். ஆனந்தன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் முத்துரத்தினம் அவர்களை 32691 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி கோயமுத்தூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

பல்லடம் தொகுதியில் கடந்த முறை போட்டியிட்டு வெற்றி பெற்ற அதிமுக வேட்பாளர் எம்.எஸ்.எம். ஆனந்தன் இம்முறை தொகுதி மாறியதால் திமுக வுக்கு வாய்ப்பாகி போயுள்ளது.

## 89. உடுமலைப்பேட்டை

உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு ஜெயக்குமார் (திமுக) உடுமலை ராதா கிருஷ்ணன் போட்டியிடுகின்றனர். உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் கே.தென்னரசு அவர்களை 21895 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்தச் சட்டமன்றத் தொகுதி பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது. கடந்த முறை திமுக கூட்டணி கட்சியான காங்கிரஸ் போட்டியிட்டு தோல்வியடைந்தது இம்முறை திமுக வே நேரடி களம் காண்பதால் திமுக வாகை சூட வாய்ப்பிருக்கிறது.

## 90. மடத்துக்குளம்

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு ஜெயராமகிருஷ்ணன் (திமுக), சண்முகவேலு, ஆர்.திருமலை (டி.வி.கே), ராதாமணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சி.மகேந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் இரா.ஜெயராமாகிருஷ்ணன் அவர்களை 6438 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

மடத்துகுளம் தொகுதியில் கடந்த முறை வெற்றி பெற்ற மகேந்திரன் செங்கோட்டையனின் உறவினர் என்பதால் அவருக்கு வாய்ப்பு வழங்கபடவில்லை அதிமுக கூட்டணியான அமமுகவிற்கு ஒதுக்கி பழைய எம்.எல்.ஏ சண்முகவேலு போட்டியிடுகிறார் இதனால் இந்த தொகுதி திமுகவுக்கு சாதகமாக அமையலாம்.

# நீலகிரி மாவட்டம்

## 91. உதகமண்டலம்

உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதி நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு பி.ராமச்சந்திரன் (காங்கிரஸ்), போஜராஜன் (பாஜக), ஆர்.இப்ராஹிம் (டி.வி.கே), ரகுபதி பீமன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.கணேஷ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் போஜராஜன் அவர்களை 5348 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்தச் சட்டமன்றத் தொகுதி நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

இம்முறை திமுக போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்த்த உடன்பிறப்புகளுக்கு ஏமாற்றம் மற்றும் காங்., கட்சிக்கு சரியான உட்கட்டமைப்பு இல்லாததும் அதிமுகவின் ஓராண்டு கால தேர்தல் பணி கிராமங்களில் பா. ஜ.க வின் ஓட்டு வங்கி ஆகியவற்றின் மூலம் பாஜக வெற்றி பெறும் சூழல் உள்ளது.

## 92. கூடலூர்

கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு திராவிட மணி (திமுக), பொன்.ஜெயசீலன் (அஇஅதிமுக), ஏ.தீபக் சாய் கிஷோர் (டி.வி.கே), கார்த்திக் ராமகிருஷ்ணன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பொன். ஜெயசீலன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எஸ். காசிலிங்கம் அவர்களை 1945 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

கூடலூர் தொகுதியை பொருத்தவரை கம்யூனிஸ்ட்கள், காங்கிரஸ், முஸ்லிம் லீக், தாயகம் திரும்பிய தமிழர்கள் சராசரி ஓட்டு வங்கியை உள்ளடக்கியுள்ளது. அதன் ஓட்டுக்கள் மாறாத நிலையில் திமுகவின் வெற்றிக்கு சாதகமாக அமையும். என்றே தெரிகிறது.

## 93. குன்னூர்

குன்னூர் சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு கேளம் ராஜு (திமுக), ராமு (அஇஅதிமுக), சி.தங்கராஜ் (டி.வி.கே), தீனு (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கா.ராமசந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கப்பச்சி டி. வினோத் அவர்களை 4105 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

சிறுபான்மையினரின் வாக்கு வங்கி மற்றும் மகளீர் உரிமை தொகை போன்றவற்றால் குன்னூர் தொகுதியில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வெற்றி பெறும்!

# கோயம்புத்தூர் மாவட்டம்

## 94. மேட்டுப்பாளையம்

மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு கவிதா கல்யாணசுந்தரம் (திமுக), ஓ.கே.சின்னராஜ் (அஇஅதிமுக), என்.சுனில் ஆனந்த் (டி.வி.கே), கோபாலகிருஷ்ணன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஏ.கே. 1 செல்வராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் டி.ஆர்.சண்முகசுந்தரம் அவர்களை 2456 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

திமுகவில் சீட் கிடைக்காதால் டி.ஆர். சண்முக சுந்தரம் சுயெட்சையாக போட்டியிட்டுள்ளார். இதனால் திமுகவுக்கு ஓட்டுக்கள் காரமடை மேற்கில் மட்டுமே பிரியும் மேட்டுப்பாளையம், கூடலூர் நகர ஓட்டுக்கள் திமுக கூட்டணிக்கு உள்ளது. இது தவிர அதிமுக வேட்பாளர் தேர்வு, திமுகவில் பெண் வேட்பாளர் திமுகவுக்கு பலம் என்கிற ரீதியில் திமுக வெற்றி பெறுகிறது.

## 95. சூலூர்

சூலூர் சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு தளபதி முருகேசன் (திமுக), வி.பி.கந்தசாமி (அஇஅதிமுக), என்.எம்.சுகுமார் (டி.வி.கே), ராஜசேகர் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சூலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் விபி கந்தசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் பிரிமியர் செல்வம் அவர்களை 31932 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி கோயமுத்தூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

கடந்த முறை திமுக கூட்டணி (கொ ம தே க) போட்டியிட்டது இம்முறை திமுக நேரடி களம் காண்கிறது திமுகவின் உள்ளடிகளால் மீண்டும் அதிமுக வெற்றிக்கு வாய்ப்பு உள்ளது.

## 96. கவுண்டம்பாளையம்


கவுண்டம்பாளையம் சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு கேபி சூர்ய பிரகாஷ் (காங்கிரஸ்), பிஆர்ஜி அருண்குமார் (அஇஅதிமுக), ஆர்.டி.கனிமொழி (டி.வி.கே), கலாமணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அருண்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் பையா (எ) கிருஷ்ணன் அவர்களை 9776 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி கோயமுத்தூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

காங்., கட்டமைப்பு கவுண்டம்பாளையம் தொகுதியில் இல்லாததால், வாய்ப்பு கிடைக்காத திமுகவினரும் கண்டுகொள்வதில்லை இதெல்லாம் அதிமுகவுக்கு சாதகமாகி மீண்டும் அதிமுக வெற்றி பெறும்!

## 97. கோயம்புத்தூர் வடக்கு

கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியில் இந்த சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக செந்தமிழ் செல்வன் (திமுக), வானதி சீனிவாசன் (பாஜக), வி.சம்பத்குமார் (டி.வி.கே), நர்மதா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அம்மன் அர்ச்சுணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் வ.ம.சண்முகசுந்தரம் அவர்களை 4001 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

வானதிக்கு அதிமுக, பாஜக மற்றும் அண்ணாமலை ஆதாரவாளர்களின போதிய ஆதரவு இல்லாத சூழல் களத்தில் காணப்படுகிறது. இருந்தாலும் தி.மு.க. வாக்குகளை த.வெ.க. பிரிப்பதால் இழுபறி நிலை நீடிக்கிறது.



## 98. தொண்டாமுத்தூர்

தொண்டாமுத்தூர் சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு என்.ஆர். கார்த்திகேயன் (திமுக), அ.தி.மு.க.வில் ‘பலம்’ வாய்ந்த வேட்பாளரான எஸ்.பி.வேலுமணி, ஆர்.சதீஷ் ராஜு (டி.வி.கே), ரஜபுனிஷா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எஸ்.பி. வேலுமணி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கார்த்திக்கேய சிவசேனாதிபதி அவர்களை 41630 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

இந்தச் சட்டமன்றத் தொகுதி பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது. தொண்டாமுத்தூர் தொகுதியில் எஸ்.பி.வேலுமணியின் தனது தனிபட்ட செல்வாக்கால் அதிமுக இம்முறையும் வெற்றி பெறுகிறது.

## 99. கோயம்புத்தூர் தெற்கு

கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க.வில் முதல்வர் ஸ்டாலினின் நம்பிக்கை நட்சத்திரமான செந்தில் பாலாஜி, அம்மன் அர்ச்சுணன் (அஇஅதிமுக), வி.செந்தில் குமார் (டி.வி.கே), பேரறிவாளன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் வானதி சீனிவாசன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் வேட்பாளர் கமல் ஹாசன் அவர்களை 1728 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

செந்தில் பாலாஜியின் தேர்தல் வியூகம் சிறுபான்மையினர் வாக்குகள் திமுகவுக்கு வெற்றிக்கு ஏதுவாக அமைந்துள்ளது. எனவே, செந்தில் பாலாஜி வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 100. சிங்காநல்லூர்

சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக வி.ஸ்ரீநிதி நாயுடு, கே.ஆர். ஜெயராம் (அஇஅதிமுக), கே.எஸ். கிரிபிரசாத் (டி.வி.கே), நேருஜி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கே.ஆர். ஜெயராம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் நா.கார்த்திக் அவர்களை 10854 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி கோயமுத்தூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

காங்., வேட்பாளர் மீதான அதிருப்தி மற்றும் உட்கட்சி பூசல்களால் சிங்காநல்லூரில் அதிமுக மீண்டும் வெற்றி பெறும் சூழல் உருவாகியிருக்கிறது.

## 101. கிணத்துக்கடவு

கிணத்துக்கடவு சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சபரி கார்த்திகேயன் (திமுக), செ.தாமோதரன் (அஇஅதிமுக), கே.விக்னேஷ் (டி.வி.கே), பானு பிரியா செந்தில் குமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.


கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் தாமோதரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் குறிச்சி பிரபாகரன் அவர்களை 1095 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

கடந்த முறை சொற்ப வாக்கு வித்தியாசத்தில் திமுக தொல்வியை தழுவியது இம்முறை வசந்தராஜனுக்கு சீட் கிடைக்காத அதிருப்தி மற்றும் திமுகவின் கூட்டணி பலம் சபரி கார்த்திகேயனை வெற்றி பெற வைக்கிறது.

## 102. பொள்ளாச்சி

பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் திமுக கூட்டணியில் நித்தியானந்தன் (கொ.ம. தே.க ) பொள்ளாச்சி ஜெயராமன் (அஇஅதிமுக), ஜி.ராமநாதன் (டி.வி.கே), செந்தில் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பொள்ளாச்சி ஜெயராமன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் வரதராஜன் அவர்களை 1725 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத்தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகம் தனது வெற்றியைப் பதிவு செய்தது.

பொள்ளாச்சி தொகுதியைப் பொறுத்தளவில் வெற்றி வாய்ப்பு என்பது இழுபறியாக இருக்கிறது.



# திண்டுக்கல் மாவட்டம்

## 103. வால்பாறை

வால்ப்பாறை சட்டமன்ற தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சுதாகர் (திமுக), லட்சுமண சிங் (அஇஅதிமுக), டாக்டர் ஸ்ரீதரன் (டி.வி.கே), உமாதேவி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். வால்ப்பாறை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அமுல்கந்தசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஆறுமுகம் அவர்களை 12223 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பெற்றார்.

30 ஆண்டுகளுக்கு பிறகு இம்முறை வால்ப்பாறை தொகுதி கூட்டணி கட்சிகளுக்கு கொடுக்காமல் திமுக வே போட்டியிடுவதால் திமுகவின் வெற்றி உறுதி செய்யபட்டுள்ளது.

## 104. பழநி

2026 சட்டப்பேரவை தேர்தலில் பழனி தொகுதியில் திமுக கூட்டணியில் சிபிஎம் வேட்பாளர் என்.பாண்டி களம் இறங்குகிறார். அதிமுக சார்பில் ரவி மனோகரன், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பிரவீன் குமார், நாம் தமிழர் கட்சி சார்பில் முருகேஸ்வரி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

பழனி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ரவிமனோகரன் அவர்களை 30056 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஐ.பி.செந்தில் குமார் தொகுதி மாறி போட்டியிடுவதாலும், அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி பலத்தாலும் அ.தி.மு.க. வேட்பாளர் ரவி மனோகரன் வெற்றி பெறுகிறார்.

## 105. ஒட்டன்சத்திரம்

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் சிட்டிங் அமைச்சர் சக்கரபாணி, அ.தி.மு.க. கூட்டணியில் த.மா.கா.வேட்பாளர் விடியல் எஸ்.சேகர் (டிஎம்சி (எம்)), எஸ்.மோகன் (டி.வி.கே), ரகுபதி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் அர.சக்கரபாணி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் என்.பி. நடராஜ் அவர்களை 28742 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. நேரடியாக போட்டியிட்டால் தி.மு.க.வுக்கு கொஞ்சம் சவால் கொடுக்கலாம். தவிர த.மா.கா. இரட்டை இலைசின்னத்திலும் போட்டியிடவில்லை. தாமரை சின்னத்தில் பேட்டியிடுவதும் திமுகவுக்கு ஒரு பிளஸ். எனவே, சக்கரபாணி மீண்டும் வெற்றி பெறுகிறார்.

## 106. ஆத்தூர்

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் சீனியரான அமைச்சர் ஐ.பெரியசாமி, விஸ்வநாதன் (அஇஅதிமுக), என்.கலைச்செல்வி (டி.வி.கே), சைமன் ஜஸ்டின் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

ஆத்தூர் தொகுதி திமுகவின் இன்னொரு கோட்டை. மூத்த அமைச்சர் ஐ.பெரியசாமியின் தொகுதி. கடந்த 2021 தேர்தலில் தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில், அதாவது 1,35,571 வாக்குகள் வித்தியாசத்தில் ஐ.பெரியசாமி வெற்றி பெற்றார். 1989, 2006, 2011, 2016, 2021 என தொடர்ந்து ஐ.பெரியசாமி வெற்றி பெற்று வருகிறார்.

2016ல் இந்த தொகுதியில ஐ.பெரியசாமிக்கு எதிராக அதிமுகவின் சீனியரான நத்தம் விஸ்வநாதனை ஜெயலலிதா நிறுத்தினார். ஆனாலும் ஐ.பெரியசாமியை தோற்கடிக்க முடியவில்லை. 2021 தேர்தலில் ஐ.பெரியசாமியைஎதிர்த்துபோட்டியிட்டபாமகவேட்பாளர் தோல்வி அடைந்தார். இந்தமுறையும் அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் ஐ.பி. வெற்றி பெறுவார்.

## 107. நிலக்கோட்டை

நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு நாகஜோதி (திமுக), தேன்மொழி (அஇஅதிமுக), ஆர். அய்யனார் (டி.வி.கே), கைலை ராஜன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

கடந்த 2021 தேர்தலில் வென்ற அதிமுகவின் தேன்மொழி தன்னை எதிர்த்து போட்டியிட்ட மக்கள் விடுதலை கட்சி வேட்பாளர் முருகவேல்ராஜனை 27,618 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இந்த முறையும் களம் காண்கிறார் தேன்மொழி. திமுக வேட்பாளராக நாகஜோதி போட்டியிடுகிறார். தி.மு.க. சார்பில் பலமில்லாத வேட்பாளர் களமிறங்குவதாலும், நிலக்கோட்டை அதிமுகவின் கோட்டை என்பதாலும் அ.தி.மு.க. வேட்பாளர் மீண்டும் வெற்றி பெறுகிறார்.

## 108. நத்தம்

நத்தம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் 'தமிழர் தேசம் கட்சி' சார்பில் முத்தரையர் சமுதாயத்தைச் சேர்ந்த கே.கே.செல்வக்குமார், அ.தி.மு.க. சார்பில் நத்தம் ஆர்.விஸ்வநாதன், எல்.எல்.ரமேஷ் (டி.வி.கே), அழகம்மாள் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். நத்தம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் நத்தம் விஸ்வநாதன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எம்.எ.ஆண்டி அம்பலம் அவர்களை 11,932 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


நத்தம் தொகுதியைப் பொறுத்தளவில் அ.தி.மு.க.வின் வேட்பாளர் நத்தம் விஸ்வநாதனுக்கு கட்சியைத் தாண்டி, தனிப்பட்ட செல்வாக்கு இருப்பதால், அதுவே அவரை மீண்டும் வெற்றி பெறவைக்கும்!

## 109. திண்டுக்கல்

திண்டுக்கல் தொகுதி திமுக, அதிமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் வென்ற தொகுதியாகும். திண்டுகல் மக்களவை தொகுதியில் 4 முறை வென்ற சி.சீனிவாசன், 2 முறை எம்.எல்.ஏ.வாகவும் இருந்தவர். அதிமுக ஆட்சியில் அமைச்சராக இருந்துள்ளார். அதிமுகவின் பொருளாளராக இருக்கிறார். இந்த முறையும் இங்கே போட்டியிடுகிறார். 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட சிபிஎம் வேட்பாளர் எம்.பாண்டியை 17,747 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்தமுறை திண்டுக்கல்லில் திமுக வேட்பாளராக போட்டியிடுகிறவர் பழனி தொகுதி எம்.எல்.ஏ. ஐபி செந்தில்குமார். திண்டுக்கல் தலைநகரில் திமுக வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தனது மகன் ஐபி செந்தில்குமாரையே களத்தில் நிறுத்தி இருக்கிறார் அமைச்சர் ஐ.பெரியசாமி. பழனியில் எளிதாக ஜெயிக்கும் வாய்ப்பு இருந்ததால் தொடக்கத்தில் ஐபி செந்தில்குமார் திண்டுக்கல்லில் போட்டியிட தயங்கினாலும் தலைமையின் பேச்சை கேட்டு களம் காண்கிறார்.

தவெக சார்பில் நஜீர் ராஜா, நாதக சார்பில் முத்தரசி ஆகியோர் களம் காண்கின்றனர். திண்டுக்கல் சீனிவாசன், ஐ.பி.செந்தில்குமார் இருவருக்குமே இந்த தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே, போட்டி கடுமையாக இருப்பதால் இழுபறி நீடிக்கிறது.



## கரூர் மாவட்டம்

## 111. அரவக்குறிச்சி

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக சிட்டிங் எம்.எல்.ஏ., ஆர்.இளங்கோ (திமுக), கே.செல்வக்குமார் (அஇஅதிமுக), பி.கார்த்திகேயன் (டி.வி.கே), நரேன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ஆர்.இளங்கோ, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் அண்ணாமலை அவர்களை 24,816 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பெரிதாக எந்தவொரு சர்ச்சைகளிலும் சிக்காதவர் சிட்டிங் எம்.எல்.ஏ.வாக இருக்கும் மொஞ் சனூர் மோகன். எனவே மீண்டும் அரவக்குறிச்சி தொகுதியை தி.மு.க. தக்கவைக்கிறது.

## 110. வேடசந்தூர்

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதியில் 2026 தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சாமிநாதன் (திமுக), வி.பி.பி.பரமசிவம் (அஇஅதிமுக), டாக்டர் என்.நாகஜோதி (டி.வி.கே), ஹுசைன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எஸ்.காந்திராஜன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் விபிபி பரமசிவம் அவர்களை 17553 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.


தி.மு.க.வில் கடுமையான அதிருப்தி நிலவி வரும் நிலையில், அதிமுக வேட்பாளராக போட்டியிடுகிறவர் டாக்டர் விபிபி பரமசிவம். 2016ல் இந்த தொகுதி அதிமுக எம்.எல்.ஏ.வாக இருந்தவர். இவர் முன்னாள் துணை சபாநாயகர் விபி பாலசுப்பிரமணியன் மகன். டாக்டர் விபிபி பரமசிவம், அதிமுகவின் மாநில இளைஞர், இளம்பெண்கள் பாசறையின் செயலாளர்.

எனவே, இந்த முறை அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 112. கரூர்

கரூர் தொகுதியைப் பொறுத்தளவில் ரொம்பவே எதிர்பார்ப்புக்குரிய தொகுதியாக மாறியிருக்கிறது. அதிமுகவில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர், திமுகவில் செந்தில் பாலாஜியின் விசுவாசி தியாகராஜன், தவெகவில் 41 பேர் பலியான சம்பவத்தில் சிறை சென்ற வந்த மதியழகன் ஆகியோர் களம் காண்கிறார்கள்.

அதிமுகவில 2 முறையும் திமுகவில 1 முறையும் செந்தில் பாலாஜி வெற்றி பெற்ற தொகுதி. போன முறை கரூரில்தான் செந்தில் பாலாஜி வெற்றி பெற்றிருந்தார். 2021ல் அதிமுகவின் எம்.ஆர். விஜயபாஸ்கரை 12,448 ஓட்டுகள் வித்தியாசத்தில் செந்தில் பாலாஜி தோற்கடித்து, தி.மு.க.வில் முக்கியத்துறைகளுக்கு அமைச்சரானார். இந்த முறை செந்தில் பாலாஜி கோவைக்கு மாறியிருப்பது அ.தி.மு.க.விற்கு ஒரு பிளஸ்ஸாக இருந்தாலும், தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுவதால் இழுபறி நீடிக்கிறது.



## 113. கிருஷ்ணராயபுரம்

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சி.கே.ராஜா (திமுக), டாக்டர் எஸ் திவ்யா (அஇஅதிமுக), எஸ்.மதன் (டி.வி.கே), சத்யா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் க.சிவகாமசுந்தரி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் முத்துக்குமார் என்ற தானேஷ் அவர்களை 31625 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

2026 சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தளவில் மீண்டும் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது. இங்கு வேட்பாளரை விட, செந்தில் பாலாஜியின் முகத்திற்கு மக்கள் வாக்களிக்கிறார்கள் என்பதால், மீண்டும் தி.மு.க. வெற்றி பெறுகிறது.

## 114. குளித்தலை

குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு சூரியனூர் சந்திரன் (திமுக), எஸ்.கருணாகரன் (அஇஅதிமுக), ஜி.பாலசுப்பிரமணி (டி.வி.கே), நன்மாறன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் இரா.மாணிக்கம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் என்.ஆர். சந்திரசேகர் அவர்களை 23,540 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1989க்குப் பிறகு தி.மு.க., அ.தி.மு.க. என மாறி மாறி வெற்றி பெற்ற தொகுதி. 2016, 2021ல் தொடர்ந்து தி.மு.க. வெற்றி பெற்று வருகிறது. 2026ல் மீண்டும் குளித்தலை தொகுதியில் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதியாகியிருக்கிறது. காரணம், செந்தில் பாலாஜிதான்!

# திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## 115. மணப்பாறை

மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மனித நேய மக்கள் கட்சி சார்பில் அப்துல் சமது போட்டியிடுகிறார். அ.தி.மு.க. சார்பில் மருத்துவர் பி.எல்.விஜயகுமார் போட்டியிடுகிறார். த.வெ.க. சார்பில் கதிரவன், நா.த.க. சார்பில் அருணகிரி ஆகியோர் களம் காண்கின்றனர். மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் மமக வேட்பாளர் அப்துல் சமது, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சந்திரசேகர் அவர்களை 12,243 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

மணப்பாறை தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க. கூட்டணிக்கு மீண்டும் ஒதுக்கப்பட்டதில் அக்கட்சியினர் சோர்வில் இருக்கிறார்கள். அதிமுக சார்பில் களமிறங்கும் மருத்துவரை பண பலம், சமூக வாக்குகள் ஆகியவை கரை சேர்க்கிறது. எனவே, மணப்பாறை தொகுதியில் அ.தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது.

## 116. ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் 2026 தேர்தலில் திமுக சார்பில் துரைராஜ், அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அரசு கொறடா ஆர்.மனோகரன், எஸ்.ரமேஷ் (டி.வி.கே), தர்மராஜ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் எம்.பழனியாண்டி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் கு.ப. கிருஷ்ணன் அவர்களை 19,915 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஸ்ரீரங்கம் தொகுதியில் ஜெயலலிதா போட்டியிட்ட தொகுதி. தி.மு.க. வேட்பாளர் காவல்நிலையத்தில் புகுந்த தாக்கியதை மக்கள் இன்னும் மறக்கவில்லை. மனோகரனைப் பொறுத்தளவில் மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தராக இருந்தாலும் அனைத்து சமுதாயத்தினரையும் அரவணைத்துச் செல்கிறார். ஸ்ரீரங்கம் தொகுதி மக்களிடம் நன்கு பரிச்சயமானவர் என்பதோடு, இரட்டை இலை சின்னம் இவரை வெற்றி பெற வைக்கிறது.

## 117. திருச்சிராப்பள்ளி மேற்கு

திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க.வின் சீனியரும், அமைச்சருமான கே.என்.நேரு, அதிமுக கூட்டணியில் அ.ம.மு.க. வேட்பாளராக தொட்டியம் ராஜசேகரன், ஜி.ராமமூர்த்தி (டி.வி.கே), புவனேஸ்வரி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

2016, 2021ல் அமைச்சர் நேரு வெற்றி பெற்ற தொகுதி. 2021 தேர்தலில் அதிமுகவின் பத்மநாபனை 85,109 வாக்குகள் வித்தியாசத்தில் அமைச்சர் கே.என்.நேரு தோற்கடிச்சு பிரம்மாண்டமான வெற்றியை பெற்றிருந்தார்.


இந்த முறை அமைச்சர் நேரு பொங்கலின் போது தொகுதி மக்களுக்கு சிறப்பான கவனிப்பை செய்துவிட்டார். தவிர, தேர்தல் கவனிப்பும் வியக்கத்தக்க வகையில் இருக்கும் என்பதால், மீண்டும் பிரம்மாண்ட வெற்றியை பதிவு செய்யக் காத்திருக்கிறார் கே.என்.நேரு!

## 118. திருச்சிராப்பள்ளி கிழக்கு

திருச்சி கிழக்கு தொகுதி தமிழகம் ரொம்பவே எதிர்பார்க்கிற தொகுதியாக மாறிவிட்டது. தமிழக வெற்றிக் கழகத் தலைவர் பெரம்பூரை தொடர்ந்து திருச்சி கிழக்கிலும் போட்டியிடுகிறார்.

2021ல் திமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர் இனிகோ இருதயராஜ் மீண்டும் களம் காண்கிறார். கடந்த தேர்தலில் 53, 797 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் இனிகோ இருதயராஜ். இந்த முறை அதிமுகவில் ராஜசேகரன். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் களம் காண்கின்றனர்.

2026 தேர்தலில் இனிகோ இருதயராஜ் மீண்டும் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது என்ற சூழலில் திருச்சியில் விஜய் செய்த வாகனப் பிரச்சாரம் த.வெ.க. வெற்றி பெறுகிறதோ இல்லையே, தி.மு.க.வின் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பதால், இழுபறி நிலை நீடிக்கிறது.




## 119. திருவெறும்பூர்

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தளவில் தி.மு.க. சார்பில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ், அதிமுக வேட்பாளராக முன்னாள் எம்.பி., ப.குமார், நவல்பட்டு எஸ்.விஜி (டி.வி.கே), ஜல்லிக்கட்டு ராஜேஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

திருவெறும்பூர் தொகுதியில் ‘சர்வீஸ் ரோடு’ இல்லாததால் விபத்தில் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்படுகிறது. இதுதான் இங்கு தலையாயப் பிரச்னை. குமார் எம்.பி.யாக இருந்தபோது, இதற்கான முயற்சிகளை எடுத்தார். தி.மு.க. முட்டுக்கட்டை போட்டதாக குற்றச்சாடு எழுந்தது. 10 ஆண்டுகள் எம்.எல்.ஏ.வாக இருந்தும் சர்வீஸ் ரோடு பிரச்னைக்கு தீர்வு காணாதது தி.மு.க.வுக்கு மைனசாக இருக்கிறது.

தவிர, த.வெ.க. வேட்பாளர் நவல்பட்டு விஜி பிரிக்கும் வாக்குகள் அதிமுக வேட்பளார் குமாருக்கு சாதகமாக தொகுதியை மாற்றுகிறது. இதனால் திருவெறும்பூர் தொகுதியில் இழுபறி நிலை ஏற்படுகிறது.



## 120. இலால்குடி

இலால்குடி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் முக்கிய கட்சிகளின் தி.மு.க. வேட்பாளராக பாரி வள்ளல், அ.தி.மு.க.வின் திடீர் பணக்கார வேட்பாளராக லீமா ரோஸ், த.வெ.க. சார்பில் முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன் (டி.வி.கே), மதன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

அதிமுக வேட்பாளராக போட்டியிடுகிறவர் லீமா ரோஸ். லாட்டரி அதிபர் மார்ட்டினின் மனைவி. தமிழ்நாட்டிலேயே அதிக சொத்துகளை வைத்திருக்கக் கூடிய பணக்கார வேட்பாளர். தி.மு.க. வேட்பாளர் பெயரில் இருக்கும் ‘வள்ளல்’ நிஜத்தில் இல்லை. பணம் பாதாளம் வரை பாயும் என்ற பழமொழி இலால்குடி தொகுதிக்கு நன்றாக பொருந்துகிறது. கடுமையான மும்முனைப் போட்டியில் லீமா ரோஸ் வெற்றிக்கோட்டை தொடுகிறார்.

## 121. மண்ணச்சநல்லூர்


மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் சிட்டிங் எம்.எல்.ஏ. கதிரவன், அ.தி.மு.க. கூட்டணியில் சிங்கத் தமிழர் முன்னேற்றக்கழகத்தின் ஆர்.வி. பரதன், வி.சரவணன் (டி.வி.கே), தேன்மொழி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சீ.கதிரவன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பரஞ்ஜோதி அவர்களை 59,618 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

சிட்டிங் எம்.எல்.ஏ. கதிரவன் மீது கிட்னி விவகாரம் முதற்கொண்டு, இளம்பெண் தற்கொலை என பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும், 'பணம் பத்தும் செய்யும்' என்ற சொல்லுங்கேற்ப, தி.மு.க. வாக்குவங்கி உதவியுடன் மீண்டும் வெற்றி பெறுகிறார் கதிரவன்!

## 122. முசிறி

முசிறி தொகுதியைப் பொறுத்தளவில் 1977ல் இருந்து 1991 வரைக்கும் தொடர்ந்து அதிமுக வெற்றி பெற்ற தொகுதி. 1996ல் இருந்து திமுக, அதிமுக மாறி மாறி வெற்றி பெற்று வருகிறது. கடந்த 2021ல் திமுகவின் காடுவெட்டி தியாகராஜன் அதிமுகவின் செல்வராசுவை 26,836 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்த முறை திமுகவில் கருணைராஜாவும் அதிமுகவில் யோகநாதனும் களம் காண்கிறார்கள். கருணைராஜா முன்னாள் வனத்துறை அமைச்சரின் மறைந்த என்.செல்வராஜின் மகன். கே.என்.நேரு பண்ணிய பாவத்திற்கு சீட் வாங்கிக்கொடுத்து பரிகாரத்தை தேடிக்கொண்டார். வெற்றியும் பெற வைத்தாக வேண்டும் என நேரு தரப்பு வேலை பார்த்து வருகிறார். அ.தி.மு.க. வேட்பாளர் யோகநாதனுக்கு தனிப்பட்ட முறையில் இருக்கும் செல்வாக்கும், கட்சியின் செல்வாக்கும் கரை சேர்க்கும் என வேலை பார்த்து வருகிறார். முசிறி தொகுதியைப் பொறுத்தளவில் கடும் போட்டி நிலவுகிறது.



## 123. துறையூர்

துறையூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக லெனின் பிரசாத், அ.தி.மு.க. வேட்பாளராக இ.சரோஜா இளங்கோவன், எம்.ரவிசங்கர் (டி.வி.கே), கௌசல்யா சுரேஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

துறையூர்தொகுதிதி.மு.க.கூட்டணியில்காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டது, அக்கட்சியினரை அதிருப்தியில் ஆழ்த்தியிருக்கிறது. திடீர் வேட்பாளராக லெனின் பிரசாத் அறிவிக்கப்பட்டிருப்பது அவருக்கு மைனஸ். ராகுல்காந்தி துறையூருக்கு வந்து பிரச்சாரம் செய்தது பிளஸ்ஸாக பார்க்கப்படுகிறது. அ.தி.மு.க. வேட்பாளர் சரோஜாவைப் பொறுத்தளவில் உள்ளூர்க்காரர், அனைத்து சமுதாய மக்களையும் அரவனைத்துச் செல்லக்கூடியவர். யாரிடமும் அதிர்ந்துகூட பேசமாட்டார் என்பதால், தி.மு.க.வின் ஹாட்ரிக் வெற்றியை சரோஜா இளங்கோவன் தடுத்து நிறுத்திவிடுவார் என்கிறார்கள்.

# பெரம்பலூர் மாவட்டம்

## 124. பெரம்பலூர்

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக மருத்துவர் ஜெயலட்சுமி, அ.தி.மு.க. சார்பில் இளம்பை ரா.தமிழ்ச்செல்வன், கே.சிவக்குமார் (டி.வி.கே), ஜான்சி ராணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் எம்.பிரபாகரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் இளம்பை இரா தமிழ்ச்செல்வன் அவர்களை 31034 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

2011, 2016 என இரண்டு முறை எம்.எல்.ஏ.வாக இருந்த இளம்பை தமிழ்ச் செல்வன் கடந்த முறை தோல்விக்குப் பிறகு மீண்டும் போட்டியிடுகிறார். கடும் போட்டி நிலவினாலும், இளம்பை தமிழ்ச் செல்வன் வெற்றிக் கோட்டை நோக்கி நகர்கிறார்.

## 125. குன்னம்

குன்னம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் சிட்டிங் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், அ.தி.மு.க. கூட்டணியில் (பாரிவேந்தரின்) இரட்டை இலை சின்னத்தில் ஐ.ஜே.கே. வேட்பாளர் சரண்யா, எம்.ரேவதி (டி.வி.கே), கீர்த்தி வாசன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

குன்னம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. எஸ்.எஸ்.சிவசங்கர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.ராமச்சந்திரன் அவர்களை 6,329 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வை அ.தி.மு.க. நேரடியாக எதிர்க்காதது சிவசங்கருக்கு பிளஸ்ஸாக அமைகிறது. தவிர, தொகுதியில் உள்ள கட்சி நிர்வாகிகளுக்கு அமைச்சர் சிவசங்கர் எந்தவொரு பிரதிபலனும் பார்க்காமல் செய்து கொடுத்த வேலைகளும் தேர்தல் சமயத்தில் உதவுகிறது. எனவே, குன்னம் தொகுதியில் கடந்தமுறையை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

# அரியலூர் மாவட்டம்

## 126. அரியலூர்

அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் லதா பாலு, தாமரை எஸ்.ராஜேந்திரன் (அஇஅதிமுக), எம்.சிவக்குமார் (டி.வி.கே), புகழேந்தி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் மதிமுக வேட்பாளர் சின்னப்பா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் தாமரை ராஜேந்திரன் அவர்களை 3234 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த முறை அரியலூரில் திமுக வேட்பாளராக களம் காணும் லதா பாலு சட்டசபை தேர்தலுக்கு புதியவர் என்றாலும் திருமானூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக 2 முறை பதவி வகித்திருக்கிறார். அதிமுகவில மீண்டும் தாமரை ராஜேந்திரன் போட்டியிடுகிறார். 2016ல் எம்.எல்..ஏவாக இருந்தவர் தாமரை ராஜேந்திரன். இருவருக்கும் கடும் போட்டி நிலவினாலும், தாமரை ராஜேந்திரனின் அரசியல் அனுபவம் அவரை களத்தில் வெற்றி பெற வைக்கிறது.

# கடலூர் மாவட்டம்

## 127. ஜெயங்கொண்டம்

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் கண்ணன், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளராக வைத்தி, கவிதா ஜி ராஜேந்திரன் (டி.வி.கே), ரேவதி கலைமணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. கே.எஸ்.கே.கண்ணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ம.க. வேட்பளார் கே .பாலு அவர்களை 5452 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஜெயங்கொண்டம் தொகுதியைப் பொறுத்தளவில் பா.ம.க.விற்கு செல்வாக்கு மிக்க தொகுதி. 2011 காடுவெட்டி குரு எம்.எல்ஏ.வாக இருந்தார். அ.தி.மு.க.வின் பலம், பா.ம.க.வின் செல்வாக்கு வைத்தியை வெற்றி பெற வைக்கிறது.

## 128. திட்டக்குடி

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் திமுகவின் சிட்டிங் அமைச்சர் சி.வி. கணேசன், முருகுமாறன் (அஇஅதிமுக), ராஜசேகர் (டி.வி.கே), மகாலட்சுமி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் சி.வி.கணேசன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் டி. பெரியசாமி அவர்களை 21,563 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திட்டக்குடியைப் பொறுத்தளவில் 2011ல் தே.மு.தி.க. வெற்றி பெற்றிருக்கிறது. 2016, 2021ல் சி.வி.கணேசன் வெற்றி பெற்றார். தொகுதிக்கு தன்னால் முடிந்ததை செய்துகொடுத்திருக்கிறார் சி.வி.கணேசன். எனவே, மூன்றாவது முறையாகவும் சி.வி.கணேசன் பெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 129. விருத்தாச்சலம்

தமிழகத்தின் ஸ்டார் தொகுதிகளில் ஒன்று விருதாச்சலம். திமுக கூட்டணியில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இந்த தொகுதியில் போட்டியிடுகிறார். அதிமுக கூட்டணியில் பாமக வேட்பாளர் தமிழரசி ஆதிமூலம், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் எஸ் விஜய், நாம் தமிழர் கட்சி சார்பில் அமுதாநம்பி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

2021 தேர்தலில் இந்த தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட எம்ஆர்ஆர் ராதா கிருஷ்ணன் வெற்றி பெற்றார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாமக வேட்பாளர் கார்த்திகேயனை 862 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். 2021 தேர்தலில் இந்த தொகுதியில் போட்டியிட்ட பிரேமலதா விஜயகாந்த், 25,908 வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தை பிடித்தார்.

2006 சட்டமன்ற தேர்தலில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதி தான் விருதாச்சலம். 2011 இல் தேமுதிக சார்பில் போட்டியிட்ட முத்துக்குமார் வெற்றி பெற்றார். அந்த வரிசையில் 2026ல் பிரேமலதா விஜயகாந்துக்கும் வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

## 130. நெய்வேலி

நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் சபா ராஜேந்திரன், அ.தி.மு.க. வேட்பாளராக சொரத்தூர் ராஜேந்திரன், கே.ஆனந்த் (டி.வி.கே), வீரமணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் சபா.ராஜேந்திரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ம.க. வேட்பாளர் ஜெகன் அவர்களை 977 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


2011 சட்டமன்ற தேர்தலில் அதிமுக வென்ற நிலையில், 2016, 2021 ஆகிய இரு தேர்தல்களிலுமே திமுக வெற்றி பெற்றது. தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகனின் அண்ணன் திருமால்வளவன் கேமரா சின்னத்தில் போட்டியிடுகிறார். இந்த முறை தி.மு.க., அ.தி.மு.க. இடையே நேரடியாக கடும் போட்டி நிலவுகிறது. த.வெ.க., த.வா.க. பிரிக்கும் வாக்குகள் அ.தி.மு.க. வேட்பாளரை கரைசேர்க்கிறது.

## 131. பண்ருட்டி

பண்ருட்டி தொகுதி திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கட்சி வேட்பாளராக அப்துல் ரகுமான் போட்டியிடுகிறார். அதிமுக சார்பில் மோகன், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மணிகண்டன், நாம் தமிழர் கட்சி சார்பில் பானுபிரியா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்த தொகுதியில் கடந்த முறை தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் 93,801 வாக்குகள் பெற்று தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் சொரத்தூர் ராஜேந்திரனை 4,697 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்த முறை திமுக கூட்டணியில் இருந்து விலகிய வேல்முருகன், தேர்தலில் போட்டியிடவில்லை. பண்ருட்டி தொகுதியில் வி.சி.க, அதிமுக இடையே கடும் போட்டி நிலவுகிறது. யார் வெற்றி பெற்றாலும் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற முடியும். எனவே, தொகுதியில் இழுபறி நீடிக்கிறது.



## 132. கடலூர்

கடலூர் சட்டப்பேரவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சந்திரசேகரன், அதிமுக சார்பில் எம் சி சம்பத், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ராஜ்குமார், நாம் தமிழர் கட்சி சார்பில் சரசு ஆகியோர் போட்டியிடுகின்றனர்

2021 தேர்தலில் திமுக வேட்பாளர் ஐயப்பன் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் எம்.சி.சம்பத்தை 5,151 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இந்த தொகுதியை பொருத்தவரை திமுகவும் அதிமுகவும் மாறி மாறி வெற்றி பெற்று வருகின்றன. 2001 திமுக, 2006 திமுக, 2011 அதிமுக, 2016 அதிமுக, 2021 திமுக வென்றுள்ளது.

இந்த முறை கடலூர் தொகுதியை திமுக காங்கிரசுக்கு கொடுத்துள்ளது. அ.தி.மு.க. வேட்பளாருக்கு இது பிளஸ்ஸாக அமைந்திருக்கிறது. எனவே, 2026 சட்டமன்றத் தேர்தல் களம் அ.தி.மு.க.விற்கு சாதகமாக மாறியிருப்பதால், மீண்டும் எம்.சி.சம்பத் வெற்றி பெறுகிறார்.

## 133. குறிஞ்சிப்பாடி

குறிஞ்சிப்பாடி சட்டப்பேரவை தொகுதியில் திமுக வேட்பாளராக அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் போட்டியிடுகிறார். அதிமுக சார்பில் புவனேந்திரன், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ராஜ்குமார், நாம் தமிழர் கட்சி சார்பில் செங்கோலன் ஆகியோர் களம் காண்கின்றனர்.

2021 தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ராம ஜெயத்தை 17,527 வாக்குகள் வித்தியாசத்தில் எம் ஆர் கே பன்னீர்செல்வம் தோற்கடித்தார். 1996, 2001, 2016, 2021 ஆகிய தேர்தல்களில் எம்ஆர்கே வெற்றி பெற்றுள்ளார். இடையில் 2011 தேர்தலில் மட்டும் அதிமுக வேட்பாளர் ராஜேந்திரன் வெற்றி பெற்றார்.

இந்த முறை திமுக – அதிமுக இடையே கடும் போட்டி நிலவுகிறது. எனினும் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கூட்டணி பலத்துடன் வெற்றி பெறுகிறார்.

## 134. புவனகிரி

புவனகிரி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக துரை க.சரவணன், அ.தி.மு.க.வில் அருண்மொழித்தேவன், டி.மகாலிங்கம் (டி.வி.கே), சுமதி சீனிவாசன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். புவனகிரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அதிமுக வேட்பாளர் அருண்மொழிதேவன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக துரை.கி.சரவணன் அவர்களை 8259 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

தி.மு.க., அ.தி.மு.க. நேரடியாக மோதுவதால் கடும் போட்டி நிலவுகிறது. எனினும் அருண்மொழித்தேவன் நூழிலையில் முந்திச் செல்கிறார்.

## 135. சிதம்பரம்

சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணிக் கட்சி சார்பில் மனிதநேய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தமிமுன் அன்சாரி உதயசூரியன் சின்னத்தல் போட்டியிடுகிறார். கே.ஏ.பாண்டியன் (அஇஅதிமுக), டாக்டர் என்.பாரி (டி.வி.கே), தமிழ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அதிமுக வேட்பாளர் கேஏ பாண்டியன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் ஏ.எஸ் அப்துல் ரஹ்மான் ரப்பானி அவர்களை 16,937 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த முறை தி.மு.க. நேரடியாகப் போட்டியிட வில்லை. தி.மு.க. வேட்பாளருக்கு கூட்டணிப் பலம் பிளஸ்ஸாக இருக்கிறது. வெளியூர்க்காரர் என்பது மைனஸாக இருக்கிறது. எனவே, மீண்டும் அ.தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 136. காட்டுமன்னார்கோயில்

காட்டுமன்னார்கோவில் தொகுதியில் விசிக தலைவர் தொல். திருமாவளவன் போட்டியிடுவதாக முதலில் அறிவித்தார். தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேரடியாக அதிருப்தி தெரிவித்தார்.

அதன்பிறகு காங்கிரஸில் இருக்கக் கூடிய மறைந்த தலித் தலைவர் இளையபெருமாளின் இளைய மகன் ஜோதிமணியை விசிக வேட்பாளராக அறிவித்தார் திருமாவளவன். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளராக மருத்துவர் அன்பு சோழன் களமிறங்குகிறார். த.வெ.க. சார்பில் சீனுவாசன், நா.த.க. சார்பில் சிவஜோதி ஆகியோர் களமிறங்குகின்றனர்.

காட்டுமன்னார் கோவிலில் கனிசமாக பட்டியல் சமூகத்தினர் வாக்குகள் இருக்கிறது. மருத்துவராக அன்புச் செழியன் மக்களிடை பரிச்சயமாக இருந்தாலும், கூட்டணி பலத்தில் வி.சி.க. வேட்பாளர் நுலிழையில் வெற்றி பெறுகிறார்.

# நாகப்பட்டினம் மாவட்டம்

## 137. நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்எச் ஜவாஹிருல்லா, அ.தி.மு.க. வேட்பாளராக தங்க.கதிரவன், என்.சுகுமார் (டி.வி.கே), பாத்திமா ஃபர்ஹானா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் ஆளூர் ஷாநவாஸ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் வேட்பாளர் தங்க கதிரவனை 7238 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி

நாகப்பட்டினம் தொகுதியைப் பொறுத்தளவில் ஜவாஹிருல்லாவுக்கு கூட்டணி பலம் ஒன்றுதான் பிளஸ்! அ.தி.மு.க. வேட்பாளருக்கு உள்ளூர்க்காரர் மற்றும் மக்களை எளிதாக அணுகக்கூடியவர் போன்ற வை பிளஸ்ஸாக இருக்கிறது. எனிலும், சிறுபான்மையினர் வாக்குகளை த.வெ.க. பிரிப்பதால், அ.தி.மு.க.வின் வெற்றி எளிதாகிறது.

## 138. கீழ்வேளூர்

கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் (சிபிஎம்) வேட்பாளர் டி.லதா, அ.தி.மு.க. கூட்டணியில் பாமக வேட்பாளராக வடிவேல் ராவணன், டி.ஏ.பி. செந்தில் பாண்டியன் (டி.வி.கே), கார்த்திகா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வேட்பாளர் மாலி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் வடிவேல் இராவணனை 16,985 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கீழ்வேளூர் தொகுதியில் கூட்டணி பலத்திலும், தங்களுக்குள்ள ஓரளவு செல்வாக்கு மற்றும் சிறுபான்மை வாக்குகளை வைத்து டி.லதா மீண்டும் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

# மயிலாடுதுறை மாவட்டம்

## 139. வேதாரண்யம்


வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் புகழேந்தி, அ.தி.மு.க. சார்பில் சீனியரும், முன்னாள் அமைச்சருமான ஓ.எஸ்.மணியன், ஏ.கிங்ஸ்லி ஜெரால்டு (டி.வி.கே), இடும்பாவனம் கார்த்திக் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அதிமுக வேட்பாளர் ஓஎஸ் மணியன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எஸ்.கே.வேதாரத்தினம் அவர்களை 12, 329 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுகவின் வேதரத்தினம் 1996ல் இருந்து 2006 வரை தொடர்ந்து வெற்றி பெற்றார். அதன் பின்னர் 2011 என்.வி.காமராஜ், 2016, 2021ல் ஓ.எஸ்.மணியன் வெற்றி பெற்றார். தி.மு.க., அ.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவினாலும் ஓ.எஸ்.மணியன் வெற்றி பெறுகிறார்.

## 140. சீர்காழி

சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் மதிமுக வேட்பாளராக செந்தில் செல்வன், அ.தி.மு.க. வேட்பாளராக ம.சக்தி, சி.எஸ்.கோபிநாத் (டி.வி.கே), சுபாஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் மு.பன்னீர்செல்வம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் பாரதியை 12148 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுக அதிமுக மாறி மாறி வெற்றி பெற்று வரக்கூடிய நிலையில், திமுகவில சிட்டிங் எம்.எல்.ஏ. பன்னீர்செல்வம் 1989, 1996, 2006, 2021ன்னு 4 முறை வெற்றி பெற்றிருக்கிறார். இது முதல்வர் ஸ்டாலின் மனைவி துர்கா அம்மையாரின் திருவெண்காடு ஊர் இடம் பெறுகிற தொகுதி. இந்த முறை அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. இடையே கடும் போட்டி நிலவுவதால், இழுபறி நீடிக்கிறது.



## 141. மயிலாடுதுறை

மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ஜமால் யுனுஷ் முகமது, அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளர் சித்தமல்ல ஏ.பழனிசாமி, சி.எஸ்.அருண் ரஷீத் (டி.வி.கே), காசிராமன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் ராஜகுமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் சித்தமல்லி பழனிச்சாமி அவர்களை 27,42 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

டாக்டர் ராமதாஸ் தரப்பு வேட்பாளரின் வேட்புமனு பரிசீலனையின் போது தள்ளுபடி செய்யப்பட்டாலும், கூட்டணி பலத்தில் காங்கிரஸ் வேட்பாளர் கரைசேர்கிறார்.

## 142. பூம்புகார்

பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் நிவேதா முருகன், அ.தி.மு.க. வேட்பாளராக எஸ்.பவுன்ராஜ், ஜே.விஜயாலயன் (டி.வி.கே), இளைய நகுலன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் நிவேதா முருகன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் பவுன்ரா மிகக்குறைந்த 3299 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பூம்புகார் தொகுதியைப் பொறுத்தளவில் இரண்டு பேருமே மீண்டும் மோதினாலும், அ.தி.மு.க. நடக்கும் உள்குத்துகள் பவுன்ராஜுக்கு மைனஸ். சிறுபான்மை வாக்குகள் மற்றும் கூட்டணி பலம் நிவேதா முருகனை மீண்டும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது வெற்றி பெற வைக்கிறது.

# திருவாரூர் மாவட்டம்

## 143. திருத்துறைப்பூண்டி

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் சிபிஐ வேட்பாளர் மாரிமுத்து, அ.தி.மு.க. சார்பில் பாலதண்டாயுதம், எஸ்.பாண்டியன் (டி.வி.கே), வினோதினி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருத்துறைபூண்டி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் மாரிமுத்து, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சுரேஷ்குமார் அவர்களை 30,068 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திருத்துறைப்பூண்டிதொகுதியைப்பொறுத்தளவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு செல்வாக்குள்ள தொகுதி என்பதால், கூட்டணி பலத்தில் மீண்டும் மாரிமுத்து வெற்றி பெறுகிறார்.

## 144. மன்னார்குடி

'மன்னார்குடி' என்ற பெயரைக் கேட்டதுமே சசிகலா குடும்பம்தான் நினைவுக்கு வரும் ஆனாலும், மன்னார்குடி தொகுதி 1996க்குப் பிறகு அதிமுக ஜெயிக்காத தொகுதியாக இருக்கிறது. அமைச்சர் டிஆர்பி ராஜாவின் தொகுதி. 1996, 2001, 2006ல் சிபிஐ சிவப்புண்ணியம் இங்கே எம்.எல்.ஏ.வாக இருந்தார். 2011, 2016, 2021ல் திமுக பொருளாளர் டிஆர் பாலுவின் மகனும் அமைச்சருமான டிஆர்பி ராஜா இங்கே வெற்றி பெற்றார். இந்த முறையும் டிஆர்பி ராஜா திமுக வேட்பாளராக களம் காண்கிறார்

அதிமுக கூட்டணியில அமமுகவின் காமராஜ் இங்கே போட்டியிடுகிறார். 2016ல் அதிமுக வேட்பாளராகவும் 2021ல் அமமுக வேட்பாளராகவும் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர் எஸ்.காமராஜ். காமராஜுக்கு மக்களிடையே அனுதாபம் இருந்தாலும், டி.ஆர்.பி.ராஜாவுக்கு தொகுதி சாதகமாக இருக்கிறது.

## 145. திருவாரூர்

திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக பூண்டி கலைவாணன், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. வேட்பாளராக கோவி சந்துரு, வீரமணி (டி.வி.கே), அஸ்வினி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் பூண்டி கலைவாணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஏ.என்.ஆர். பன்னீர்செல்வம் அவர்களை 51174 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க.வைப் பொறுத்தளவில் நாசுக்காக தொகுதியை பா.ஜ.க. பக்கம் தள்ளிவிட்டுவிட்டது. இங்கு த.வெ.க. வேட்பாளர் கனிசமான வாக்குகளைப் பிரித்தாலும், பூண்டி கலைவானுக்கு வெற்றி பெறும் வாய்ப்பு இருக்கிறது.

## 146. நன்னிலம்

நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் எஸ்.டி.பி.ஐ. வேட்பாளராக முகமது முபாரக், அ.தி.மு.க.வில் முன்னாள் அமைச்சர் ஆர் காமராஜ், எஸ்.பிரபாகரன் (டி.வி.கே), தேன்மொழி திலீப் குமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் ஆர். காமராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எஸ்.ஜோதிராமன் அவர்களை 4424 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

நன்னிலம் தொகுதியில் த.வெ.க. பிரிக்கும் சிறுபான்மையினர் வாக்குகள் அ.தி.மு.க. வேட்பாளர் ஆர்.காமராஜுக்கு சாதகமாக அமைவதால் வெற்றி முகத்துடன் இருக்கிறார் காமராஜ்!

# தஞ்சாவூர் மாவட்டம்

## 147, திருவிடைமருதூர்


திருவிடைமருதூர் தனித் தொகுதி உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியனின் தொகுதி. 2011, 2016, 2021 என 3 தேர்தல்களிலும் ஹாட்ரிக் வெற்றி பெற்றார் அமைச்சர் கோவி. செழியன். மறுபடியும் இந்த முறையும் களம் காண்கிறார். 2011 தேர்தலில் கோவி செழியன் 394 வாக்குகள் வித்தியாசத்திலும் 2016ல் 532 வாக்குகள் வித்தியாசத்திலும் ஜெயிச்சிருந்தாரு. அந்த அளவுக்கு அதிமுக டஃப் பைட் கொடுத்தது. இந்த முறை அதிமுக வேட்பாளராக இளமதி சுப்பிரமணியன் களம் காண்கிறார். த.வெ.க.வில் பிரபாகரன், நா.த.க.வில் திவ்யபாரதி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கடந்த 2021ல் 10,680 வாக்குகள் வித்தியாசத்தில கோவி செழியன் வெற்றி பெற்றார். அ.தி.மு.க. வேட்பாளர் தொகுதிக்கு தொடர்பில்லாதவர் என்பதாலும், அ.தி.மு.க.வினர் காட்டும் சுணக்கத்தாலும், மீண்டும் வெற்றி பெறுகிறார் கோவி.செழியன்!

## 148, கும்பகோணம்

கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக சாக்கோட்டை கா.அன்பழகன் (திமுக), அ.தி.மு.க. கூட்டணியில் த.மா.கா. வேட்பாளராக எம்.கே.ஆர் அசோக்குமார், ஆர்.வினோத் (டி.வி.கே), ஆனந்த் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் அன்பழகன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீதர் வாண்டையார் அவர்களை 21,383 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கும்பகோணம் தொகுதியில் ஆளும் தி.மு.க. மீதான அதிருப்தியும், த.வெ.க. பிரிக்கும் வாக்குகளும், அ.தி.மு.க.வின் கூட்டணி பலமும் ஆசோக்குமாருக்கு பிளஸ்ஸாக இருக்கிறது. தவிர மறைந்த தலைவர் மூப்பனாருக்கு உள்ள செல்வாக்கும், ஜி.கே. வாசனின் சொந்த மண் என்பதும் அசோக்குமாருக்கு கூடுதல் பலமாக அமைகிறது. எனவே சாக்கோட்டை அன்பழகனுக்கு, த.மா.கா. வேட்பாளர் அசோக்குமார் கடும் போட்டியை கொடுப்பதால் தொகுதியில் இழுபறி நிலவுகிறது.



## 149, பாபநாசம்

பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் ஏ.எம். ஷாஜகான், அ.தி.மு.க. வேட்பாளராக சண்முகபிரபு, அசாருதீன் (டி.வி.கே), அனீஸ் பாத்திமா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் வேட்பாளர் ஜவாஹிருல்லா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் கோபிநாதனை 16,273 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பாபநாசம் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் ஏ.எம். ஷாஜகான் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடாதது ஒரு மைனஸ். சிறுபான்மையினர் வாக்குகளை த.வெ.க. பிரிப்பதால், அ.தி.மு.க. வேட்பாளர் சண்முக பிரபு வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 150, திருவையாறு

திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக சிட்டிங் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகரன், அ.தி.மு.க. கூட்டணியில் அமமுக வேட்பாளராக வேலு கார்த்திகேயன், எம்.மணிகண்டன் (டி.வி.கே), செந்தில்நாதன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் துரை சந்திரசேகரன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் பூண்டி எஸ். வெங்கடேசன் அவர்களை 53,650 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுகவின் துரை சந்திரசேகரன் 5 முறை வெற்றி பெற்ற தொகுதி. இந்த முறை துரை சந்திரசேகரன் 60,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் அமைச்சர் பதவி கொடுப்பதற்கு முதல்வரிடம் சிபாரிசு செய்வேன் என்று உதயநிதி வாக்கு கொடுத்ததால் உற்சாகத்தில் வேலை பார்க்கிறார்கள் உடன் பிறப்புக்கள். என மீண்டும் துரைசந்திரசேகரன் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 151, தஞ்சாவூர்

தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக மேயர் ராமநாதன், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. வேட்பாளராக எம். முருகானந்தம், விஜய் சரவணன் (டி.வி.கே), கிருஷ்ணகுமார் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் டி.கே.ஜி.நீலமேகம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் அறிவுடைநம்பியை 47149 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்

சண் ராமநாதன் மேயராக இருந்தபோது அவர் மீது எழுந்த விமர்சனங்களை பட்டியலிட்டு வாக்கு சேகரித்து வருகிறார் பா.ஜ.க. வேட்பாளர் முருகானந்தம். பா.ஜ.க.வில் இருந்து நீக்கப்பட்ட முரளிதரன் சுயேச்சையாக களமிறங்குவது முருகானந்தத்துக்கு மைனஸ்! தவிர, கூட்டணி பலத்துடன் மீண்டும் தஞ்சையில் தி.மு.க. வெற்றி பெறுகிறது.

## 152, ஒரத்தநாடு

ஒரத்தநாடு... ரொம்பவே கவனம் பெறக் கூடிய தொகுதி..! இங்கே திமுக வேட்பாளராக போட்டியிடுகிறவர் வைத்திலிங்கம். 4 முறை அதிமுக எம்.எல்.ஏ.வாக இருந்த வைத்திலிங்கம் அண்மையில் திமுகவில் இணைந்து இப்போது வேட்பாளராக களம் காண்கிறார்.


அதிமுக வேட்பாளராக போட்டியிடும் சேகர், 2021ல் அமமுக வேட்பாளராக போட்டியிட்டு 3வது இடம் பெற்றார். கே.அரவிந்த் (டி.வி.கே), திருமுருகன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வைத்திலிங்கம், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் ராமச்சந்திரனை 28,835 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஒரத்தநாடு தொகுதியில் தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் தி.மு.க.வின் கூட்டணி பலத்தை வைத்துக்கொண்டு மீண்டும் வெற்றிக்கோட்டை தொடுகிறார் வைத்திலிங்கம்!

## 153, பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக சிட்டிங் எம்எல்.ஏ. அண்ணாதுரை, அ.தி.மு.க. வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ., சி.வி.சேகர், சி.மதன் (டி.வி.கே), கண்ணன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அண்ணாதுரை, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சி வேட்பாளர் ரங்கராஜனை 25269 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அண்ணாதுரை சிட்டிங் எம்.எல்.ஏ., 2016ல் சேகர் எம்.எல்.ஏ.வாக இருந்தவர். இருவரும் ஒரே சமுதயாத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் கடும் போட்டி நிலவுகிறது. தொகுதி இழுபறியாக இருக்கிறது.




## 154, பேராவூரணி

தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதியில் திமுக, அதிமுக நேரடிப் போட்டியாக இருக்கிறது. திமுகவில் சிட்டிங் எம்எல்ஏ அசோக்குமாரும் அதிமுகவில் முன்னாள் எம்எல்ஏ கோவிந்தராசனின் மகன் இளங்கோவனும் களத்தில் நிற்கிறார்கள். இங்கு அரசியல் கட்சி என்பதைத் தாண்டி வேட்பாளர்களின் குண நலன்கள் நேரடியாகவும் சாதியப் பின்புலம் மறைமுகமாகவும் பார்க்கப்படுகின்றன.

அதனால் இத்தொகுதியில் 45சதவீதம் முத்தரையர்களும் மீதமுள்ள இனத்தவர் 55சதவீதமும் இருப்பதால் வெற்றி தோல்வியைக் கணிக்க முடியாத இழுபறி நிலையில் இருக்கிறது. திமுக அசோக்குமாருக்கு அவரது அணுகுமுறைகள் பின் தள்ளினாலும் பெரிய அளவில் கெட்ட பெயர் இல்லை என்பதாலும் திமுகவின் வளர்ச்சித் திட்டங்கள் அவரை முன்னிறுத்துகிறது.

அதிமுக வேட்பாளர் கோவி.இளங்கோ மிகவும் சுறுசுறுப்பாகச் செயல் படுவதாலும் அணுகுமுறையாலும் நல்ல பெயர் இருக்கிறது என்ற நிலையில் கஜாபுயல் நேரத்தில் எம்எல்ஏவாக இருந்த அவரது தந்தையார் மந்தமாகச் செயல்பட்டார் என்பதும் மைனசாகத் தெரிகிறது. வெற்றி தோல்வியை மிகக் குறைந்த வாக்குகளே நிர்ணயிக்கும் என்ற இழுபறி நிலைமை பேராவூரணியில் இருக்கிறது.



# புதுக்கோட்டை மாவட்டம்

## 155, கந்தர்வக்கோட்டை

கந்தர்வகோட்டை (தனி) தொகுதி சிட்டிங் திமுக கூட்டணியில் சி.பி.எம்., எம்எல்ஏவான சின்னதுரை மக்களிடம் எளிமையாகப் பழகக் கூடியவர். கட்சியில் தீவிரமான உழைப்பாளி. ஆளும் கூட்டணிக் கட்சியின் பலம், கட்சித் தலைவர்களின் பரப்புரைகள் இவரை மீண்டும் வெற்றி பெற வைக்கும். இவரை எதிர்த்து அதிமுக நின்றால் இவர் வெற்றி பெறுவது கடினம் என்ற நிலையில் தொகுதியை பாஜகவிற்கு ஒதுக்கியிருப்பதாலும் பாஜக வேட்பாளர் உதயகுமார் அரசியலுக்கும் தேர்தல் பணிக்கும் புதியவர் என்பதால் வெற்றி வாய்ப்பை இழக்கும் சூழ்நிலை உள்ளது. குறிப்பாக பாஜக வேட்பாளரை வெற்றிபெற வைக்க விருப்பமில்லாமல் அதிமுகவினர் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இத் தொகுதியில் த.வெ.க வேட்பாளர் ந.சுப்பிரமணியன் ஏற்கனவே இதே தொகுதியில் அதிமுக சார்பில் வெற்றி பெற்று அமைச்சராக இருந்ததாலும் அவருக்கு தொகுதிக்குள் பழைய அறிமுகம் இருப்பதாலும் விசில் சின்னத்தில் நிற்பதாலும் மூன்றாமிடத்தைப் பிடிக்க வாய்ப்புகள் உள்ளன.

## 156, விராலிமலை

விராலிமலையில்கடந்தமூன்றுமுறையும்அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர்தான் வெற்றி பெற்று வந்திருக்கிறார்.

சி.விஜயபாஸ்கர் மக்களிடம் இறங்கி எளிமையாகப் பழகும் விதமும் அவர் வழங்கும் பரிசுகளும் வெற்றி பெற வைத்திருக்கிறது. இப்போதும் வெல்வார் என்று எதிர் பார்க்கப் பட்ட நிலையில் திமுகவினரும் அதுதான் முடிவு என்று மனதளவில் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் திமுக வேட்பாளர் மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியனின் தம்பியான கே.கே.முருகுபாண்டியன் அமெரிக்காவில் இருந்து வந்து களத்தில் இறங்கி வேலை பார்க்கத் துவங்கிய வேகத்தைக் கண்டு திமுகவினரும் துள்ளிக் குதிக்கின்றனர். தோல்வி என்ற நிலையை மாற்றி இருவரும் சரி சமமாக இருக்கிறார்கள் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இதனால் அ.தி.மு.க.வின் விஜயபாஸ்கர் மிகக் குறைந்தவாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெறுகிறார்.

## 157, புதுக்கோட்டை


புதுக்கோட்டை தொகுதியில் திமுக வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா முன்னணியில் இருக்கிறார். அவர் சிட்டிங் எம்எல்ஏ என்பதும் களத்தில் இறங்கி சுழன்று பணி செய்து வந்திருப்பதும் கட்சியின் தலைமை மீண்டும் அவரையே களத்தில் இறக்கியிருப்பதும் அவருடைய வெற்றிக்குப் பலம்.

அவரை எதிர்த்துக் களம் காணும் பாஜக வேட்பாளர் ராமச்சந்திரன் கடைசி நேரத்தில் அறிவிக்கப் பட்டவர். அதிமுகவிற்கு தொகுதியை ஒதுக்கவில்லை என்பதால் அதிமுகவினர் சரியான ஒத்துழைப்புத் தருவதில்லை. பல முறை அதிமுக வெற்றி பெற்றதால் இம்முறை பாஜகவிற்கு ஒதுக்கியது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. திமுக அளவிற்குச் செலவுகள் செய்ய முடியாது என்பதாலும் வெற்றி வாய்ப்பு பாஜகவிற்கு நழுவுகிறது.

## 158, திருமயம்

திருமயம் தொகுதியில் கடந்த 2016, 2021 ஆகிய இரு முறையும் திமுக ரகுபதிதான் வெற்றி பெற்றார். அமைச்சராகவும் இருக்கிறார். ஆனால் மிகக் குறைந்த வாக்குகளில் வெற்றி பெற்றவர் என்றாலும் அமைச்சராக இருப்பதால் தொகுதிக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்திருக்கிறார். அதனால் அவருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

அதே நேரத்தில் அவரிடம் வெற்றி வாய்ப்பை இழந்த பி.கே.வைரமுத்து இம்முறை எப்படியும் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்று தீவிரமாகப் பணியாற்றி வருகிறார். அமைச்சர் ரகுபதிக்கு யாரெல்லாம் வெறுப்பு நிலையில் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் தூது விட்டு தனக்கு வேலை செய்ய வைத்து விட்டார். அமைச்சர் ரகுபதிக்கு டப்பு கொடுக்கும் அளவிற்கு தீவிரமான பிரச்சாரமும் மேற்கொண்டிருப்பதால் இருவரில் யார் வெற்றி பெற்றாலும் மிகக் குறைந்த அளவு வாக்குகளில்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலையில் வெற்றி தோல்வி இழுபறியாக இருக்கிறது.



## 159, ஆலங்குடி

ஆலங்குடியில் தற்போது அமைச்சராக இருக்கும் சிவ.வீ.மெய்யநாதன்தான் மீண்டும் வெற்றி பெறுகிறார் என்ற நிலையில் இருக்கிறது. அதற்குக் காரணம் அவர் தொகுதிக்குச் செய்திருக்கும் 2500கோடி ரூபாய்க்கான திட்டப் பணிகள் அவரை முன்னிறுத்துகிறது. 2016முதல் எதிர்க் கட்சி எம்எல்ஏவாக இருந்த காலத்தில் எதுவும் செய்ய முடியாத நிலையில் தொகுதி இப்போது அபார வளர்ச்சி பெற்றிருக்கிறது. மக்களிடம் எளிமையாகப் பழகும் தன்மையும் கோரிக்கைகளை உடனே நிறைவேற்றித் தரும் குணமும் அவரை மக்கள் இந்த ஐந்தாண்டுகளில் முழுமையாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

அவரை எதிர்த்து நிற்கும் தன.விமல் தொகுதிக்குப் புதியவர். அவரது தந்தை துரை.தனசேகரன் திருவரங்குளம் சேர்மனாக இருந்த காலத்தில் எதுவும் செய்யவில்லை என்ற கோபம் ஒன்றியத்தின் 48 கிராமங்களிலும் உள்ளது. வேட்பாளர் சற்று முன்கோபி என்ற பெயரும் தொகுதி மக்களிடம் உள்ளதால் அவர் இரண்டாமிடத்துக்குத் தள்ளப்படுகிறார்.

## 160, அறந்தாங்கி

அறந்தாங்கியில் காங்கிரஸ் வெற்றி பெறும் நிலையில் உள்ளது. சிட்டிங் எம்எல்ஏ ராமச்சந்திரன் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசரின் மகன் என்ற போதிலும் மீண்டும் சீட் கொடுக்க திமுகவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. பின்னர் அவர்களை கட்சித் தலைமை பேசிச் சரி செய்து விட்டது. அதனால் வெற்றி முகத்தில் இருக்கிறார்.

இவரை எதிர்த்துக் களம் காணும் பாஜகவைச் சேர்ந்த கவிதா ஸ்ரீகாந்த். பாஜகவிற்கே சீட் ஒதுக்கக் கூடாது என்று கொடி பிடித்த அதிமுக இப்போது மட்டும் தேர்தல் வேலை செய்து விடுமா என்ன? மற்ற தொகுதிகளில் உள்ள ஒத்துழையாமை இயக்கம் இங்கும் இருப்பதால் வெற்றி வாய்ப்பு குறைந்து விட்டது பாஜகவிற்கு. இத் தொகுதியிலும் விசில் மூன்றாமிடத்துக்கு வர வாய்ப்பு இருக்கிறது.

# சிவகங்கை மாவட்டம்

## 161, காரைக்குடி

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி சட்டமன்ற தொகுதி நட்சத்திர தொகுதியாக உருமாறியுள்ளது. ஏனென்றால் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமான் இங்கே போட்டியிடுவதேயாகும். திமுக கூட்டணியில் சிட்டிங் காங்கிரஸ் கட்சி எம்எல்ஏவான மாங்குடியும், என்டிஏ கூட்டணியில் அமமுக வேட்பாளராக தேர்போகி பண்டியும், தவெக சார்பில் ஸ்டார் பிரபலமான டாக்டர் பிரபுவும் களத்தில் உள்ளார்கள்.

தவெக வேட்பாளரான டாக்டர் பிரபு கடந்த 6 மாதங்களாகவே தொகுதியை ஒரு கலக்கு கலக்கி வருவதால், மெயின் வேட்பாளர்களுக்கு நிகரான போட்டியில் இவரும் முந்தி நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.சீமானும், டாக்டர் பிரபுவும் பிரிக்கும் ஓட்டுகளால் நாம் எளிதில் வெற்றி பெற்று விடலாம் என மாங்குடி கண்ட கனவு “பலிக்காதோ” என்பது மாதிரித்தான் சீமானுக்கும், டாக்டர் பிரபுவுக்கும் தொகுதிபூராவும் காணப்படும் ஆதரவு மாங்குடி தரப்பை அதிர்ச்சியடையவைத்துள்ளது.

இழுபறிநீடிக்கும் இந்த தொகுதியில், கடைசி ஆச்சர்யமாக தவெகவின் வெற்றி தொகுதிகளில் காரைக்குடியும் ஒன்றாக அமைந்தாலும் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை!

## 162, திருப்பத்தூர்

திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் சிட்டிங் அமைச்சர் பெரிய கருப்பனும், என்டிஏ கூட்டணியில் தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவன தலைவரான திருமாறன், தவெகசார்பில் ஸ்ரீனிவாச சேதுபதியும், நாம் தமிழர் கட்சி சார்பில் ரம்யாவும் களத்தில் உள்ளார்கள்.

சிட்டிங் எம்.எல்.ஏவான அமைச்சர் பெரியகருப்பன், 4 வது முறை வெற்றி பெற்று, இது அவருக்கு 5 வது போட்டிகளமாகும். அதிருப்தி அலைகள் இவருக்கு எதிராக வீசி அடித்தாலும், கடைசி நேரத்தில் இவரது சம்மந்தியே களத்தில் இறங்கி நடத்தும் கரன்சி பாய்ச்சல் களத்தை அப்படியே ஒவ்வொரு முறையும் புரட்டிபோட்டு, வாக்கு வித்தியாசத்தில் அதிகரித்தபடியேதான் உள்ளது.

இந்தமுறை எதிர்ப்பு கொஞ்சம் கூடுதலாக தென்பட்டாலும், புதிய பிளேயரான தவெகவின் வரவு பெரியகருப்பனை அவ்வளவாக பாதித்ததாக தெரியவில்லை.நாம் தமிழர் கட்சிக்கும்பெரிய அளவில் “இம்பேக்ட்” இல்லாத நிலையில், வேலங்குடி கருப்பரின் ஆசியோடும், துணையோடும் இந்த முறையும் பெரிய கருப்பனே திருப்பத்தூரின் எம்.எல்.ஏ என்பது ஏறக்குறைய உறுதி ஆனது போலத்தான் உள்ளது.

## 163, சிவகங்கை

சிவகங்கை சட்ட மன்ற தொகுதியில் திமுக கூட்டணியில் முக்குலத்தோர் புலிப்படை கட்சி தலைவரான நடிகர் கருணாஸ் உதய சூரியன் சின்னத்திலும், அதிமுக சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏவான மா.செ.செந்தில் நாதன், தவெக சார்பில் குழந்தை ராணி நாச்சியார், நாம் தமிழர் கட்சி சார்பில் இந்துஜா போட்டியிடுகிறார்கள்.

நடிகர் கருணாஸ்க்கு எதிரான திமுகவினர் நடத்தும் உள்ளடி வேலைகளால் முழி பிதுங்கி போய் களத்தில் தடுமாறி நிற்கிறார்.அதிமுக வேட்பாளர் செந்தில் நாதனுக்கு அவரது “சமூக” ஓட்டுகள் முழுமையாக கை கொடுப்பதால் தெம்பாக காணப்படுகிறது. பணபலமில்லாத தவெக வேட்பாளரும், நாம் தமிழர் கட்சி வேட்பாளரும் ஒப்புக்கு சப்பாணியாக களத்தில் காணப்படுகிறார்கள்.

தொகுதி கிடைக்காத விரக்தியில், காங்கிரஸ் கட்சியினரும் இங்கே ஒத்துழையாமை இயக்க போராட்டம் நடத்துவது, அதிமுகவுக்கு அடிஷனல் பலமாக உள்ளது. எந்த கணக்கை போட்டு கூட்டி கழித்து பார்த்தாலும் இங்கே அதிமுக வேட்பாளர் செந்தில்நாதன் வெற்றி என்பது எழுதப்பட்ட ஒன்றாகவே தெரிகின்றது.

## 164, மானாமதுரை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை(தனி) சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக சிட்டிங் எம்.எல்.ஏ.தமிழரசியும், அதிமுக கூட்டணியில் பிஜேபி வேட்பாளராக பொன்.பாலகணபதியும், தவெக சார்பில் இளங்கோவனும், நாம் தமிழர் கட்சி சார்பில் சண்முக பிரியாவும் போட்டியிடுகிறார்கள்.

மானாமதுரை தொகுதியில் பிஜேபிக்கென்று தனி “ஸ்பேஸ்” இல்லாத காரணத்தால், முழுக்க அதிமுகவை நம்பியே பிஜேபி இங்கே டிராவல் செய்கிறது. அதிமுகவினருக்கு தொகுதி கிடைக்காத விரக்தியில் இருப்பதால், பெயரளவுக்கு பிஜேபி வேட்பாளருக்காக களத்தில் ஓடியாடி “ஷோ” காட்டுகிறார்கள்.

பணபலமில்லாத தவெக மற்றும் சீமான் தங்கச்சி இங்கே பெரிய அளவில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாத நிலையில், தொகுதிக்காக கடந்த 5 வருஷமும் ஓடி ஓடி உழைத்த தமிழரசி மீண்டும் ஒருமுறை கோட்டை பக்கமாக செல்ல மானாமதுரை மக்கள் கேட்டை திறந்துவிட தயாராகி விட்டதால், உதய சூரியன் இங்கே உச்சி வெயிலை விட பிரகாசமாக உள்ளது.

# மதுரை மாவட்டம்

## 165, மேலூர்

மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதியில் 2026 சட்ட மன்ற தேர்தலில், திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ரொம்பவுமே லேட்ஆக டிக்ளேர் செய்யப்பட்ட காஞ்சிபுரம் எம்.பியாக இருந்த விஸ்வநாதனும், அதிமுக சார்பில் எம்.எல்.ஏ பெரியபுள்ளான் செல்வமும், நாம் தமிழர் கட்சி சார்பில் கோட்டை குமாரும், தாவெக சார்பில் மதுரை வீரனும் களத்தில் உள்ளார்கள்.

வெளியூர் காரரான விஸ்வநாதனை மேலூரில் களமிறக்கியதால், வெகுண்டெழுந்த கதர்கள் இப்பவரைக்கும் களத்தில் விஸ்வநாதனோடு ஒட்டும், உறவும் இல்லாமல் தான் உள்ளார்கள்.அதிமுக வேட்பாளரான "முத்தரையர்" இனத்தை சேர்ந்த பெரியபுள்ளான் 2 முறை எம்.எல்.ஏ. வாக இருந்தவர் என்பதும், இந்த முறையும் வெற்றி பெற்றால் எடப்பாடியார் கேபினெட்டில் அமைச்சராகிவிடுவார் என அவரது ஆதரவாளர்கள் செய்யும் பிரச்சாரம் இவரது ஆதரவை மேலும் வலுவாக்கியுள்ளது.

நாம் தமிழர் கட்சியும், தவெகவும் பெரிய அளவில் சேதாரத்தை ஏற்படுத்தாத சூழ்நிலையில், மேலூரில் இந்த முறையும் பெரியபுள்ளானே வெற்றி பெறுவார் என்பது நூறு சதவீதம் களநிலவராமாக உள்ளது.

## 166, மதுரை கிழக்கு

2026 சட்டமன்ற தேர்தலில் மதுரை கிழக்கு தொகுதியில் திமுக வேட்பாளராக சிட்டிங் அமைச்சர் மூர்த்தியும், என் டி ஏ கூட்டணியில் அதிமுக சார்பில் மாங்குளம் மகேந்திரனும், நாம் தமிழர் கட்சி சார்பில் செல்வமும், த வெ க சார்பில் கார்த்திகேயனும் களத்தில் உள்ளார்கள்.

உடன்பிறப்புகள் மூர்த்திக்காக ஓடியாடி உழைப்பதை பார்த்தால், அதிமுக வேட்பாளரான மாங்குளம் மகேந்திரன் "எங்கேயோ" இருப்பதைப் போன்ற ஒரு பிரமிப்புதான் உள்ளது. ஆனாலும் புதிய இளம் தலைமுறை வாக்காளர்கள், பெண்கள் விஜய் பக்கமாக நின்று விசிலடிப்பதால், இந்த விசில் சத்தம் தனக்கு சாதகமாக அமையும் என கணக்கு போடுகிறார் மாங்குளம் மகேந்திரன். தொகுதி பூராவும் பட்டுவாடாவை எல்லாம் படு ஸ்பீடில் முடித்துவிட்ட மூர்த்திக்கு, "கீர்த்தி" வெகு தொலைவில் இல்லை என்பதால், வேண்டும் மூர்த்தி, மீண்டும் மூர்த்தி என்பதே மதுரை கிழக்கின் வெளிச்ச ரேகையாக இப்போதே பரவல் உள்ளது.

## 167, சோழவந்தான்

மதுரை மாவட்டம் சோழவந்தான்(தனி) தொகுதில் திமுக சார்பில் வெங்கடேசனும்,அதிமுக சார்பில் மாணிக்கமும் நாம் தமிழர் கட்சி சார்பில் நாகலெட்சுமியும், தவெக சார்பில் கருப்பையாவும் போட்டியிடுகிறார்கள்.

அதிமுக வேட்பாளரான மாணிக்கம் ஏற்கனவே எம்.எல். ஏவாக இருந்தவர் என்பதால் நெகடிவ் இமேஜ் பரவிக் கிடக்கிறது.திமுக வேட்பாளர் வெங்கடேசன் புதுமுகம் என்பதாலும், கூட்டணி கட்சியினர் இவரது வெற்றிக்காக ஓடியாடி உழைப்பதும் இவருக்கான எக்ஸ்ட்ரா பலமாகும்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் நாகலெட்சுமி பெண் என்பதால்,பெண்கள் வாக்குகளை கவருவதற்காக டிசைன் டிசைனாக பிரச்சாசம் செய்து வருகிறார்.தவெக வேட்பாளர் கருப்பையாவும் இளைஞர்கள் மாஸை நம்பி விசில் ஊதி கொண்டு பரபரப்பாக உள்ளார்.

இப்படியான கத்திரி வெயிலை மிஞ்சிய போட்டியில், வெத்திலைக்கு புகழ் பெற்ற சோழவந்தானில் திமுக வேட்பாளர் வெங்ககடேசன் வாய்மணக்க.... தாம்பூழம் சிறக்க சோழவந்தானை வெற்றி கொள்வார் என்பதே களநிலவர எதார்த்தமாக உள்ளது.

## 168, மதுரை வடக்கு

2026 சட்டமன்றத் தேர்தலில் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக மாநகர மா. செ. வான தளபதியும், அதிமுக சார்பில் 'சர்வ கட்சி' டாக்டர் சரவணனும், நாம் தமிழர் கட்சி சார்பில் திருநாவுக்கரசும் விஜய்யின் தவெக சார்பில் கல்லானையும் களமிறங்கி உள்ளார்கள். மதுரை வடக்கை மையமாக வைத்துத் தான் மாணிக்கம் தாகூர் எம்.பி.கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிமுக, திமுக இரண்டுமே நட்சத்திர வேட்பாளர்களை களம் இறக்கி உள்ளதால் போட்டி என்னவோ மதுரையின் கத்திரி வெயிலை மிஞ்சி காணப்படுகிறது.


தவெக வேட்பாளர் கல்லானையும் தாராளமாக செலவு செய்வதால் இவர் யாருக்கு ஸ்பாய்லராக இருப்பார் என்பதை கணிக்க முடியாத சூழ்நிலையில், முடிவு இழுபறியாக இருக்கும் இந்த தொகுதியில் திமுக வேட்பாளர் தளபதிக்கு கொஞ்சூண்டு எட்ஜ் இருப்பது போலவே கள நிலவரம் உள்ளது.

## 169, மதுரை தெற்கு

மதுரை தெற்கு தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில், மதிமுக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் "பொடா" பூமிநாதனும், என்டி கூட்டணியில் பிஜேபி சார்பில் பேராசிரியர் ராம சீனிவாசனும், நாம் தமிழர் கட்சி சார்பில் சுமதியும், தவெக சார்பில் கோபீசனும் களத்தில் உள்ளார்கள்.

பேராசிரியர் ராமசீனிவாசன் பிஜேபியில் நாடறிந்த முகமென்றாலும், உள்ளூர் வேட்பாளரான சிட்டிங் எம்.எல்.ஏ. தொகுதியில் நடக்கும் நல்லது, கெட்டதுகளில் தவறாது "அட்டெடென்ஸ்" போட்டுவருபவர் என்பதால்,இவரை தங்களுக்கானவராக மக்கள் நேசிப்பது இருக்கான பிளஸ் பாயிண்ட்டாக உள்ளது. தொழில் முனைவோர், வர்த்தக அமைப்பினர், நெசவுத்தொழிலாளர் பிரச்சினைகளில் எல்லாம்கூடவே நின்று டெல்லி வரை மத்திய நிதி அமைச்சர் நிர்மலாவிடம் தனக்கிருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி ஜிஎஸ்டி வரி குறைப்பெல்லாம் பேராசிரியர் ராம.சீனிவாசன் செய்திருப்பது படித்தவர்கள் மத்தியில் இவருக்கென்று தனி இமேஜ் உள்ளது.

சீமானின் தங்கச்சியும், விஜய்யின் விசிலும் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தாத நிலையில், பா.ஜ.க.வுக்கும், ம.தி.மு.க.வுக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதால் இழுபறி நீடிக்கிறது!



## 170, மதுரை மத்தி

தமிழ்நாட்டிலேயே கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் ஓட்டுக்கு பணம் கொடுக்காத வேட்பாளர் என்ற பெருமைக்குரிய பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பிலும், அதிமுக கூட்டணியில் புதிய நீதி கட்சி சார்பில் நடிகை குஷ்புவின் கணவர் சுந்தர். சி. யும், நாம் தமிழர் கட்சி சார்பில் அப்துல் ஹக்கீம், தவெக சார்பில் (டிவி டிபேட் புகழ்) முஸ்தபாவும் இங்கே களத்தில் உள்ளார்கள்.

ஆடியோ விவகாரத்தால் சிக்கி கட்சித் தலைமையால் ஓரம் கட்டப்பட்ட பி டிஆருக்கு, குடும்பப் பின்னணி இருப்பதால் அசைக்க முடியாதவராகவே காணப்படுகிறார். சுந்தர்.சி. யின் ஸ்டார் இமேஜ் ஓட்டுக்களாக மாறுமா என்பது கணிக்க முடியாத சூழ்நிலையில், மாநகராட்சி வரி ஏய்ப்பு ஊழல் முறைகேடு போன்ற விவகாரம் தொகுதியில் சுழன்று அடித்தாலும் , சீமானின் நாம் தமிழர் கட்சியும், விஜய்யின் விசிலும் இங்கே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாத சூழ்நிலையில், பிடிஆரே இங்கே மாரத்தான் ரேசில் முன்னணியில் உள்ளார்.

## 171, மதுரை மேற்கு

மதுரை மேற்கு தொகுதியில் சிட்டிங் எம்எல்ஏவான கலகலப்பு பிரமுகர் செல்லூர் ராஜு அ.தி.மு.க சார்பிலும் திமுக வேட்பாளராக பாலாஜியும் நாம் தமிழர் கட்சி சார்பில் விக்னேஷ் குமாரும் த வெ க சார்பில் தங்கபாண்டியும் களத்தில் உள்ளார்கள். தொடர்ந்து இந்த தொகுதியில் ஹாட்ரிக் அடித்து வெற்றி பெறும் செல்லூர் ராஜுவுக்கு அர்பன் ஏரியாவில் அதிர்ப்தி நிலவினாலும் ரூரல் பக்கம் ஹீரோ இமேஜியோடு வலம் வருகிறார்.

திமுக என்னதான் செல்லுராருக்கு எதிராக தெர்மாகோல் விஞ்ஞானி என்றெல்லாம் அடைமொழி கொடுத்து பிரச்சாரம் செய்தாலும், இது எம்ஜிஆர் வெற்றி பெற்ற தொகுதி என்பதால், இன்னமும் அதிமுகவுக்கு அசைக்க முடியாத கோட்டையாகவே மதுரை மேற்கு உள்ளது.

நாம் தமிழரும், த வெ க வும் தங்களது சக்திக்கு ஏற்றபடி வாக்குகளை பிரித்தாலும், இங்கு செல்லூர் ராஜுவின் வெற்றி என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

## 172, திருப்பரங்குன்றம்

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றாம் சட்ட சபை தொகுதியில், 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக வேட்பாளராக கிருத்திகா தங்க பாண்டியனும், அதிமுக வேட்பாளராக சிட்டிங் சத்யா தேவியும், தவெக சார்பில் அறிவு ஜீவியான சி.டி.ஆர்.நிர்மல் குமாரும் போட்டியிடுகிறார்கள்.

தீபத்தூன் விவகாரம் பரபரப்பை கிளப்பிய இந்த தொகுயில் திமுக தடுமாறுகிறது என்றே சொல்லலாம். இது போதாதென்று, திமுகவேட்பாளரின் கணவர் மீது வீசியடிக்கும் "சர்ச்சை" புகார் வேறு தொகுதிபூராவும் திமுக வேட்பாளர் பெயரை பஞ்சராக்கியுள்ளது.

திருப்பரங்குன்றம் பேசிக்காகவே அதிமுகவுக்கு சாதகமான தொகுதிஎன்பதால், அதிமுக வேட்பாளரான ராஜன் செல்லப்பாதென்போடு காணப்படுகிறார்.

தவெக வேட்பாளர் சிடிஆர் நிர்மல் குமாரும், இரண்டாவது இடத்தை பிடிப்பதற்காக களத்தில் கடுமையாக போட்டி வருகிறார்.நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சத்யா தேவி, எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தாத நிலையில், குன்றத்துமலையின் மேல் இலையின் வாசம் தூக்கி அடிப்பதாகவே களநிலவரம் உள்ளது.


## 173, திருமங்கலம்

திருமங்கலம் தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரும், திமுக சார்பில் முன்னாள்9 சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவின் மகன் மணி மாறனும், நாம் தமிழர் கட்சி சார்பில் முனீஷ்ம், தவெக சார்பில் சதீஷ்குமாரும் போட்டியிடுகிறார்கள்.

ஓபிஎஸ்ஸை எதிர்த்து 9 ஓபிஎஸ்ஸை நிறுத்தி குடைச்சல் கொடுத்த ஆர்.பி.உதயகுமாரை திருமங்கலத்தில் மண்ணை கவ்வ வைக்க வேண்டும் என்பதற்காக ஓபிஎஸ்ஸே இந்த தொகுதியின் மீது தனி கவனம் செலுத்தவதாக தொகுதி பூராவும் பேசபடுகிறது. திமுக வேட்பாளராக மணிமாறன் மா.செ.வாக இருப்பதும், முன்னாள் சபாநாயகரின் மகன் என்பதும் இவருக்கான கூடுதல் பலமாகும். இவர் சார்ந்த “பிறழ்மலைகள்ளர்” சமூகத்தவர்கள் வாக்குவங்கியும் இவருக்கான எக்ஸ்ட்ரா பலமாகும்.

சீமானின் தம்பி முனீஷ்ம், விசில் விஜய்யின் தம்பி சதீஷ்குமாரும் களத்தில் காணப்பட்டாலும், வைட்டமின் பற்றாக்குறையால் அல்லாவது கண்கூடாகவே தெரிகின்றது.

ஆர்.பி.உதயகுமாரும், மணிமாறனும் தண்ணீர் போல இறைத்து பணத்தை செலவு செய்து வருவதால், இவருக்கான வெற்றி வாய்ப்பு என்பது இப்போது வரைக்கும் இழுபறியாகவே நிற்கின்றது.




## 174, உசிலம்பட்டி

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதியில் 2026 சட்ட மன்ற தேர்தலில் திமுக சார்பில் மகேந்திரனும், நாம் தமிழர் கட்சி சார்பில் அபிராமியும், தவெக சார்பில் விஜய்யும் ( இவர் வேறு விஜய்) போட்டி போடுகிறார்கள். ஓபிஎஸ்ஸோடு கடைசி வரைக்கும் டிராவல் செய்துவிட்டு, தனக்கு திமுகவில் போட்டியிட சீட் வாங்கி கொடுக்கவில்லைஎன்றஏமாற்றத்தில், சசிகலாகட்சியில் சேர்ந்தவுடனேயே வேட்பாளராகி விட்டார் எக்ஸ் எம்.எல்.ஏ. அய்யப்பன்.

இவர் காங்கிரஸ் வேட்பாளரான சரவணகுமாருக்குஸ்பாய்லராக இருப்பதால், அதிமுக வேட்பாளரான மகேந்திரன் மிகுந்த நம்மிக்கையோடு உள்ளார். திமுகவினரும் காங்கிரஸ் போட்டியிடுவதால் ஒருவித சலிப்போடுதான் களப்பணி ஆற்றி கொண்டிருக்கிறார்கள்.

நாம்தமிழர் வேட்பாளரும், விஜய் விசில் வேட்பாளர் விஜய்யும் எவ்வித தாக்கத்தையும் களத்தில் ஏற்படுத்தாத சூழ்நிலையில் அதிமுக வேட்பாளரான மகேந்திரன் வெற்றி கோட்டை தொட்டுவிட்டார் என்றே உறுதியாக கூறலாம்.



# தேனி மாவட்டம்

## 175. ஆண்டிப்பட்டி

ஆண்டிபட்டிம், எம்ஜிஆர் தொகுதி என அறியப்பட்ட தொகுதி. 1980ல் லட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு வென்றார். 1984ல் எம்ஜிஆர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற நிலையில் ‘படுத்துக் கொண்டே’ ஜெயிச்ச தொகுதி என சொல்லப்பட்டதுதான் ஆண்டிபட்டி தொகுதி.

2026ல் தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ. மகராஜன், அ.தி.மு.க வேட்பாளராக லோகிராஜன், வி.பாண்டி (டி.வி.கே), அருணாதேவி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் மகாராஜன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் லோகிராஜன் அவர்களை 8538 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். தற்போதைய தி.மு.க. ஆட்சியில் வருஷநாடு மலைப் பகுதியில் அடிப்படை வசதிகளான சாலை வசதிகள் மேம்படுத்தாதது தி.மு.க. மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக அ.தி.மு.க வேட்பாளர் லோகிராஜன் முந்திச் செல்கிறார்.



## 176. பெரியகுளம்

பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. வேட்பாளராக ஆற்றல் அரசு களமிறங்குகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் அ.ம.மு.க. வேட்பாளராக டாக்டர் கதிர்காமு, ஜி.சபரி (டி.வி.கே), விமலா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கே.எஸ்.சரவணக்குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எம்.முருகன் அவர்களை 21,321 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பெரியகுளம் தொகுதியைப் பொறுத்தளவில் திமுக, அதிமுக மாறி மாறி ஜெயிச்சிருக்கு. சிபிஎம் ஒரு முறை ஜெயிச்சிருக்கு. இந்த முறை அ.ம.மு.க. வேட்பாளர் கதிர்காமு வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.



## 177. போடிநாயக்கனூர்

1989ல் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதி என்பதால் ஸ்டார் அந்தஸ்தை பெறுகிறது. 2011, 2016, 2021ல் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வென்ற தொகுதி. தற்போது திமுக வேட்பாளராக ஓபிஎஸ் களம் காண்கிறார்.


அதிமுக வேட்பாளராக விடி நாராயணசாமி போட்டியிடுகிறார். 2024 மக்களவைத் தேர்தலில் தேனி தொகுதியில அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு சுமார் 1.55 லட்சம் ஓட்டுகளை நாராயணசாமி பெற்றிருந்தார். அந்த தேர்தலில் திமுக வேட்பாளராக அதிமுக, அமமுகவில் இருந்து வந்த தங்க தமிழ்செல்வன், அமமுக வேட்பாளராக அதன் பொதுச்செயலாளர் டிடிவி தினகரனும் போட்டியிட்டதால கடுமையான போட்டி இருந்தது. இந்த முறை போடி சட்டசபை தொகுதி வேட்பாளராக நாராயணசாமி களம் காண்கிறார்.

இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்ட ஓபிஎஸ், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவது கொஞ்சம் அதிருப்தியாக இருந்தாலும், தனிப்பட்ட செல்வாக்கு, சமூக செல்வாக்கு, கூட்டணி பலம் ஆகியவற்றின் மூலம் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது ஓ.பி.எஸ். வெற்றிக் கனியை பறிக்கிறார்.

## 178. கம்பம்

கம்பம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக 'கம்பம்' ராமகிருஷ்ணன், அ.தி.மு.க. வேட்பாளராக ஜக்கையன், பி.எல்.ஏ. ஜெகந்நாத் மிஸ்ரா (டி.வி.கே), அன்புச்செல்வி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். கம்பம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் கம்பம் ராமகிருஷ்ணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சையதுகான் அவர்களை 42413 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுக, அதிமுக, மதிமுக, காங்கிரஸ் ஜெயிச்ச தொகுதி. இப்ப சிட்டிங் எம்.எல்.ஏ.வான கம்பம் ராமகிருஷ்ணன் 4 முறை எம்.எல்.ஏ.வாக இருந்துள்ளார். இந்த முறையும் கம்பம் நா.ராமகிருஷ்ணன் திமுக வேட்பாளராக களம் காண அதிமுக வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்டிகே ஜக்கையன் போட்டியிடுகிறார். த.வெ.க. வேட்பாளர் ஜெகந்நாத் மிஸ்ரா அதிகப்படியான வாக்குகளை பிரிப்பதால், தி.மு.க., அ.தி.மு.க. இடையேயும் கடும்போட்டி நிலவுவதால் இழுபறி நீடிக்கிறது.



# விருதுநகர் மாவட்டம்

## 179. இராஜபாளையம்

இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக தங்கப்பாண்டியன், பா.ஜ.க. கூட்டணியில் ஜான் பாண்டியனின் மனைவி பிரிசில்லா பாண்டியன், கே.ஜெகதீஸ்வரி (டி.வி.கே), கார்த்திக் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் சௌ.தங்கபாண்டியன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ராஜேந்திர பாலாஜியை 3,898 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுக 3 முறையும் அதிமுக 4 முறையும் காங்கிரஸ் 2 முறையும் சிபிஐ 1 முறையும் வென்ற தொகுதி. இந்த முறை அ.தி.மு.க நேரடியாகப் போட்டியிடாமல் இருப்பது தி.மு.க.விற்கு பிளஸ்ஸாக அமைந்திருக்கிறது. கூட்டணி பலத்தால் மீண்டும் தி.மு.க.வே வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 180. ஸ்ரீவில்லிபுத்தூர்

ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் சி.பி.ஐ. வேட்பாளராக மகாலிங்கம், அ.தி.மு.க. சார்பில் சந்திரபிரபா, ஏ.கார்த்திக் (டி.வி.கே), கரிகால பாண்டியன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஸ்ரீ வில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அதிமுக வேட்பாளர் மான்ராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் மாதவ ராவை 12,738 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அதிமுக, திமுக, காங்கிரஸ், சிபிஐ மாறி மாறி வெற்றி பெற்றிருக்கக் கூடிய இந்த தொகுதியில சிபிஐ வேட்பாளராக மகாலிங்கம் களம் காண்கிறார். புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியின் மகன் ஷ்யாம், நெல்லையை போல இங்கேயும் போட்டியிட்டாலும் அ.தி.மு.க.விற்கு பெரிதாக பாதிப்பில்லாததால், அ.தி.மு.கவே வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 181. சாத்தூர்

சாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் திமுக வேட்பாளராக கடற்கரை ராஜ் களமிறங்குகிறார். அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், எம்.அஜித் (டி.வி.கே), ஆனந்தராஜா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் மதிமுக வேட்பாளர் ரகுராமன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ரவிச்சந்திரனை 11,179 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

நெல்லையில் சிறுபான்மையினர் கணிசமான வாக்குகள் அதிகமாக இருக்கிற நிலையில் அது தனக்கு நெகட்டிவாகிடுமோன்னு என எண்ணி, இந்துக்கள் வாக்குகள் அதிகமாக இருக்கும் சாத்தூருக்கு மாறி இருக்கிறார் நயினார் நாகேந்திரன். திமுக வேட்பாளராக இங்கே கடற்கரை ராஜ் களம் காண்கிறார். இந்த தொகுதியில அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரனும் 5 முறை வெற்றி பெற்றிருந்தார். சாத்தூர் தொகுதியில் சசிகலா கட்சியின் வேட்பாளர் இசக்கி ராஜா பிரிக்கும் வாக்குகள்தான் நயினாருக்கு கவலையை ஏற்படுத்தினாலும் நூலிழையில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 182. சிவகாசி

சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக கணேசன் அசோகன், அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி, கீர்த்தனா (டி.வி.கே), டயானா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் அசோகன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் லட்சுமி கணேசன் அவர்களை 17319 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

சிவகாசி தொகுதியில் 2011, 2016ல் வெற்றி பெற்றவர் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி. தற்போது கடும் போட்டி நிலவினாலும், காங்கிரஸ் போட்டியிடுவதால் கே.டி.ராஜேந்திர பாலாஜி வெற்றி பெறுகிறார்.

## 183. விருதுநகர்

விருதுநகர் தொகுதியில் திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தேமுதிக நிறுவனர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் இங்கே களம் காண்கிறார். 2024 லோக்சபா தேர்தலில் இங்கே விஜய பிரபாகரன், அதிமுக கூட்டணியில போட்டியிட்டார். காங்கிரஸின் மாணிக்கம் தாகூருக்கு மிக கடுமையான போட்டியை கொடுத்தார். யாரு ஜெயிப்பாங்கன்னு கணிக்க முடியாத அளவுக்கு வாக்கு எண்ணிக்கை இருந்தது. 4,379 வாக்குகள் வித்தியாசத்தில்தான் மாணிக்கம் தாகூரால் வெற்றி பெற முடிந்தது. 2026 தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் வி.ஜி.கணேசன், எஸ்.பி.செல்வம் (டி.வி.கே), லட்சுமணன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

இங்கே நாயுடு/ நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமான வாக்காளர்கள். விருதுநகர், விஜயகாந்தின் பூர்வீகம்னு சொல்கிறார்கள். தேமுதிகவுக்கு தொடக்கம் முதலே நல்ல பேஸ் உள்ள தொகுதி என்பதால் விஜய பிரபாகரன் வெற்றி பெறுகிறார்.

## 184. அருப்புக்கோட்டை

அருப்புக்கோட்டை தொகுதியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் களம் காணக் கூடிய தொகுதி. 2016, 2021ல் தொடர்ந்து வெற்றி பெற்றார் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன்.2011ல் அதிமுகவின் வைகைச் செல்வன் இங்கே போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்த முறையும் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் களம் காண்கிறார். 2011, 2016, 2021 தேர்தல்களில் சாத்தூர் ராமச்சந்திரன் வைகை செல்வன் இடையேதான் போட்டி இருந்தது.

இம்முறை இங்கே வைகைச் செல்வனுக்கு பதிலாக அதிமுக சேதுபதி என்பவரை வேட்பாளராக நிறுத்தி உள்ளது. காரணம், வைகைச் செல்வன் 'விட்டமின்' காரணமாக போட்டியிடவில்லை என்றாலும், மீண்டும் சாத்தூர் ராமச்சந்திரன் வெற்றி பெறுகிறார்.

## 185. திருச்சுழி

திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. சார்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு (திமுக), அ.தி.மு.க. சார்பில் ராஜவர்மன், எஸ்.சமயன் (டி.வி.கே), கார்த்திக் ராஜா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் தங்கம் தென்னரசு, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ராஜசேகர் அவர்களை 60,992 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார்.

நகர்ப்புறங்கள் முதற்கொண்டு கிராமப்புறங்கள் வரை நல்லது கெட்டதுகளில் கலந்துகொண்டு தனக்கான செல்வாக்கை தக்க வைத்திருக்கும் தங்கம் தென்னரசு மீண்டும் வெற்றி பெறுகிறார். அ.தி.மு.க. வேட்பாளர் ராஜவர்மனுக்கு அக்கட்சியினர் செய்யும் உள்ளடி வேலைகளை தங்கம் தென்னரசுவை மீண்டும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்கிறது.

## 186. பரமக்குடி

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில், திமுக சார்பில் வக்கீல் கதிரவனும், அதிமுக சார்பில் டாக்டர் முத்தையாவும், தவெக சார்பில் கோபி ராஜனும், நாம் தமிழர் கட்சி சார்பில் எழிலரசியும் வேட்பாளர்களாக போட்டியிடுகிறார்கள். கூடுதலாக சசிகலா சார்பில் அமிர்தா களமிறங்கியுள்ளார்.

பிரதான போட்டி என்பது திமுகவுக்கும், அதிமுகவுக்கும், இடையேத்தான் உள்ளது.முக்குலத்தோர் ஓட்டுக்களை சசிகலா வேட்பாளர் சரமாரியாக பிளப்பதால், தவெக பிரிக்கும் இளைஞர்கள் மற்றும் புதிய தலைமுறை டீன் ஏஜ் வாக்காளர்கள் சரிவையும் சமாளித்து திமுக வேட்பாளரான கதிரவனே இங்கே முந்தி செல்கிறார்.

அதிமுக வேட்பாளர் டாக்டர் முத்தையாவுக்கு சொந்த கட்சியினேரே குழி தோண்டுவதால், பிஜேபியினரும் ஒத்துழையாமை இயக்கம் நடத்துவதாலும் வெற்றி கோட்டை நெருங்குவதற்கு சான்ஸ்ஸே தென்படவில்லை. கடந்த முறை வெற்றி பெற்ற பரமக்குடி தொகுதியை திமுக மீண்டும் தக்க வைப்பதில் சிரமம் ஏதும் இல்லை என்பதுதான் கள நிலவரம்.

## 187. திருவாடாணை

திருவாடனை சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ராம.கரு.மாணிக்கமும், அதிமுக சார்பில் மாநில மகளிரணி இணை செயலாளர் கீர்த்திகாவும், தவெக சார்பில் ராஜீவ்ம், நாம் தமிழர் கட்சி சார்பில் பிரேம் நாத்தும் போட்டியிடுகிறார்கள். சசிகலா சார்பில் பார்வர்டு பிளாக் சிங்கம் சின்னத்தில் தென்காசி சுரேஷ் தேவர் போட்டியிடுகிறார்.


கடந்த முறை அமமுக வேட்பாளராக போட்டியிட்ட வ.து.ந.ஆனந்த் 44 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை வாங்கி “கை” ஜெயிப்பதற்கு உதவினார். இந்த முறை அதே வேலையை சிங்கம் சின்னம் வேட்பாளரும், தவெக சார்பில் போட்டியிடும் கட்டுமான தொழிலதிபர் ராஜீவ் செய்வதால், காங்கிரஸ் கட்சி வேட்பாளரான ராம.கரு. மாணிக்கம் ரிஸ்க்கே இல்லாமல் வெற்றி கோட்டை தொட்டு நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 188. இராமநாதபுரம்

திமுக சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ மா.செ.வான காதர் பாட்சா முத்து ராமலிங்கமும், என்டிஏ கூட்டணியில் பிஜேபி வேட்பாளராக ஜிபிஎஸ் நாகேந்திரனும், தவெக சார்பில் டாக்டர் சாகுல் ஹமீதுவும், நாம் தமிழர் கட்சி சார்பில் முத்து கேசவனும் மற்றும் சுயேட்சைகளும் போட்டியிடுகிறார்கள். 4 முனை போட்டிஎன்றாலும், பிரதான போட்டி என்பது திமுகவுக்கும், பிஜேபிக்கும் இடையேதான் உள்ளது.

ஆரம்பத்தில் பிஜேபிதானே என இளக்காரமாக பார்த்த திமுக தரப்பு, போக போக பிஜேபி வேட்பாளருக்கு அவர் சார்ந்த யாதவர் சமூகம், ஒட்டுமொத்த அகமுடையர் சமுதாயம், மீனவர் சமுதாயம், நாடார் சமுதாயம் என திரண்ட “மாஸ்” ஆதரவை கண்டு தினகத்து போய்த்தான் கரன்சியை திமுக தரப்பு தாராளமாக இறக்கி விட்டுள்ளது.

தவெக வேட்பாளர் “இசுலாமியர்” என்பதால், முழுமையான முஸ்லீம் வாக்கு வங்கியை மலை போல் நம்பியிருந்த திமுக வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தற்போது அதுவும் இரண்டு கூறாக பிளப்பதால், இசுலாமிய இளைஞர்களுக்கு கூடுதலாக “தனிகவனிப்பு” செய்ய உத்தரவிட்டுள்ளாராம். என்னதான் திமுக தரப்பு கவனிப்பு நடத்தினாலும், அதற்கு ஈடு கொடுத்து பிஜேபி தரப்பும் சளைக்காமல் கரன்சி பாய்ச்சலை நடத்துவதால், இழுபறியாக நீடிக்கிறது.



## தூத்துக்குடி மாவட்டம்

### 189. முதுகுளத்தூர்

முதுகுளத்தூர் தொகுதியில் திமுக வேட்பாளராக சிட்டிங் அமைச்சர் ராஜகண்ணப்பனும், அதிமுக சார்பில் மலேசியா பாண்டியும், தவெக சார்பில் கிழக்கு மா.செ.வான மலர்விழி ஜெயபாலாவும், நாம் தமிழர் கட்சி சார்பில் சந்திர பிரபாவும் களத்தில் உள்ளார்கள். பிரதான போட்டி என்பது திமுக, அதிமுக என்றிருந்த நிலைமை மாறி, சசிகலா சார்பில் களமிறங்கியுள்ள டாக்டர் ராம்குமார், கடந்த முறை அமமுக வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் எம்.எல்.ஏவான முருகன் 17,840 ஓட்டுகளை பெற்று, கண்ணப்பன் ஜெயிப்பதற்கு காரணகர்த்தாவாக அமைந்தார்.

இந்த முறையும் சசிகலா ரூபத்தில் ராஜ கண்ணப்பனுக்கு ராஜயோகம் கூடி வருவதால், சசிகலா வேட்பாளர் டாக்டர் ராம்குமார் ஆடும் பரமபத ஆட்டத்தால், சிட்டிங் அமைச்சர் ராஜகண்ணப்பனின் வெற்றி எளிதாகி விடுகிறது.

### 190. விளாத்திகுளம்


விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தளவில் அதிமுக அதிகமுறை வென்ற தொகுதி! 2021ல் திமுகவின்ஜிவி மார்க்கண்டேயன், அதிமுகவின் முன்னாள் எம்.எல்.ஏ. சின்னப்பனை 38,549 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்த முறை விளாத்திகுளத்தில் திமுக வேட்பாளராக மீண்டும் சிட்டிங் எம்.எல்.ஏ. ஜிவி மார்க்கண்டேயன் களம் காண்கிறார். அதிமுக வேட்பாளராக சத்யா போட்டியிடுகிறார். இங்கு தவெக வேட்பாளராக காசிராம் போட்டியிடுகிறார். இவர் களத்தில் கடும் போட்டியை ஏற்படுத்தினாலும் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

### 191, தூத்துக்குடி

அமைச்சர் கீதா ஜீவனின் தொகுதி தூத்துக்குடி. 2006, 2016, 2021ல் கீதா ஜீவன் வென்ற தொகுதி. திமுகவின் முரட்டு பக்தர் என கலைஞரால் அழைக்கப்பட்ட கீதா ஜீவனின் தந்தை பெரியசாமி, 1989, 1996ல் இங்கே எம்.எல்.ஏ.வாக இருந்தவர். கடந்த 2021 தேர்தலில் அதிமுகவின் விஜயசீலனை 50,310 வாக்குகள் வித்தியாசத்தில் கீதா ஜீவன் தோற்கடித்தார்.

இந்த முறை கீதா ஜீவனுக்கு எதிராக அதிமுக வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ. சி.த. செல்லப்பாண்டியன் களம் காண்கிறார். 2011ல் கீதா ஜீவனை தோற்கடித்தவர் செல்லப்பாண்டியன். காரணம், 2011ல் அ.தி.மு.க. அலை அடித்தது. 2026 விஜய் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறார். த.வெ.க. சார்பில் விஜய்யின் நெருங்கிய நண்பரும், நடிகருமான ஸ்ரீநாத் களம் காண்கிறார். மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பது கூடுதல் பலமாக இருக்கிறது. தவிர, தூத்துக்குடியில் பெண் எடுத்தவர் என்பதாலும், விஜய் தூத்துக்குடி வந்து சென்ற பிறகு கள நிலவரம் மாறியிருப்பதால் இழுபறி நீடிக்கிறது.



### 192. திருச்செந்தூர்

திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக சிட்டிங் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. வேட்பாளராக கே.ஆர்.எம் ராதாகிருஷ்ணன், கே.முருகன் (டி.வி.கே), ஒபிலியா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் அனிதா ராதாகிருஷ்ணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட கே.ஆர்.எம். ராதாகிருஷ்ணன் அவர்களை 25,263 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

2001ல் இருந்து 2 முறை அதிமுக வேட்பாளராக போட்டியிட்டும், 3 முறை திமுக வேட்பாளராகவும் போட்டியிட்டும் தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறவர் அனிதா ராதாகிருஷ்ணன். அ.தி.மு.க.வில் நடக்கும் உள்ளடி வேலைகள் அனிதா ராதாகிருஷ்ணனை மீண்டும் வெற்றி பெற வைக்கும் என்பதுதான் களநிலவரம்!

## 193. ஸ்ரீவைகுண்டம்


ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக ஊர்வசி அமிர்தராஜ், அ.தி.மு.க. வேட்பாளராக எஸ்.பி. சண்முகநாதன், ஜி.சரவணன் (டி.வி.கே), சண்முக சுந்தரம் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஊர்வசி அமிர்தராஜ், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுகு வேட்பாளர் சண்முகநாதனை 17,372 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1977ல் இருந்து திமுக ஒரே ஒரு முறைதான் வெற்றி பெற்றுள்ளது. அதிமுக, காங்கிரஸ் மாறி மாறி வெற்றி பெறக் கூடிய தொகுதி. அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்பி சண்முகநாதன் 2 முறை வென்ற தொகுதி. இந்தமுறை அ.தி.மு.க. காங்கிரசுக்கு இடையே கடும் போட்டி நிலவினாலும் நூலிழையில் முந்திச் செல்கிறார் ஊர்வசி அமிர்தராஜ்!

## 194. ஓட்டப்பிடாரம்

ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக பி.எம். ராமஜெயம், அ.தி.மு.க. கூட்டணியில் அ.ம.மு.க. வேட்பாளராக சுந்தர்ராஜன், பி.மதன்ராஜா (டி.வி.கே), அனுசியா (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக சண்முகையா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பி. மோகன் அவர்களை 8510 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஒட்டப்பிடாரம் தொகுதியைப் பொறுத்தளவில் 1996, 2011 தேர்தல்களில் டாக்டர் கிருஷ்ணசாமி வெற்றி பெற்றார். பெரும்பாலும் இவரே இந்தத் தொகுதியில் களமிறங்குகிறார். இந்த முறை டாக்டர் தனித்துப் போட்டியிடுவதால், தி.மு.க., அ.ம.மு.க. இடையே கடும் போட்டி நிலவுவதால் தொகுதியில் இழுபறி நிலை நீடிக்கிறது.



# திருநெல்வேலி மாவட்டம்

## 195. கோவில்பட்டி

கோவில்பட்டி அதிமுகவின் சீனியர்களில் ஒருவரான கடம்பூர் ராஜுவின் தொகுதி. 2011, 2016, 2021ல் தொடர்ந்து இங்கே கடம்பூர் ராஜு வெற்றி பெற்று வருகிறார். இந்த முறையும் கடம்பூர் ராஜு அதிமுக வேட்பாளராக களம் காண்கிறார். 2021ல் இங்கே டிடிவி தினகரன் போட்டியிட்டு 2வது இடம் பெற்றார். திமுக கூட்டணியில சிபிஎம் போட்டியிட்டது.


இந்த முறை திமுக வேட்பாளராக கருணாநிதி போட்டியிடுகிறார். த.வெ.க.வில் பாலசுப்பிரமணி, நா.த.க.வில் பாண்டி ஆகியோர் களம் காண்கின்றனர். கோவில்பட்டி தொகுதியில் அ.தி.மு.க. ஆட்சியில் தான் கொண்டுவந்த திட்டங்களையும், தி.மு.க. ஆட்சியில் அது முடக்கப்பட்டதையும் புள்ளி விபரங்களுடன் சொல்லி வாக்கு சேகரித்து வருகிறார் கடம்பூர் ராஜு!

கடம்பூர் ராஜுவின் எளிமையான அணுகுமுறை, அனைத்து சமுதாயத்தினரையும் அரவணைத்துச் செல்லும் விதம் ஆகியவை மீண்டும் கடம்பூராரை கரைசேர்க்கும்!

## 196, திருநெல்வேலி

திருநெல்வேலி தொகுதியை பொருத்தமட்டில், பிரதான கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என 20 வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள். திமுகவின் சுப்பிரமணியன், அதிமுகவின் தச்சை கணேசராஜா, தவெக வேட்பாளராக களத்தில் நிற்கும் ஆர். எஸ். முருகன் ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுகிறது. புதிய தமிழகம் கட்சியின் டாக்டர் ஷ்யாம் கிருஷ்ணசாமி,நாம் தமிழர் கட்சியின் சத்யா, ஆகியோரும் வலுவான பிரச்சாரத்தில் உள்ளனர்.

திமுகவின் வேட்பாளர் சுப்பிரமணியனுக்கு, சிறுபான்மையினர் ஓட்டு வங்கி, திமுகவிற்கே உரித்தான ஓட்டு வங்கி, கூட்டணி கட்சிகளின் ஓட்டு வங்கி பலம் என்றாலும், உள்கட்சி பூசல் மைனஸாக உள்ளது. அதிமுகவில் தச்சை கணேசராஜா களத்தில் நிற்கிறார். அதிமுகவிற்கே உரித்தான ஓட்டு வங்கி மற்றும் முற்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு காரணமாக, முற்பட்ட மக்களின் ஓட்டு வங்கி, பிஜேபி ஓட்டு வங்கி ஆகியவை பலம் என்றாலும், எதிர்பாராத விதமாக தவெக வேட்பாளராக களத்தில் இருக்கும் முருகன் இவருடைய ஓட்டுக்களை கணிசமாக குறைப்பார். தவெகாவின் முருகன் பொருளாதார பலத்தின் காரணமாக திமுக, அதிமுக வேட்பாளர்களுக்கு சவாலாக நிற்கிறார். குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் முந்தினால், இரண்டாம் இடத்திற்கு அதிமுக மற்றும் தவெக இடையே கடும் போட்டி நிலவுகிறது.



## 197. அம்பாசமுத்திரம்

தமிழகத்திலேயே மிகக் குறைந்த வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதியாக அம்பாசமுத்திரம் தொகுதி உள்ளது. மொத்தமே ஐந்து பேர் களத்தில் உள்ளனர். அதிமுகவின் சார்பில் சிட்டிங் எம்எல்ஏ இசக்கி சுப்பையாவும், காங்கிரஸ் சார்பில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.பி.துரையும், நாம் தமிழர் கட்சி சார்பாக சிவசங்கரனும், தவெக வேட்பாளராக ராஜகோபாலும் களத்தில் நிற்கின்றனர்.

திமுக தொடர்ந்து , இத்தொகுதியில் சில முறை தோற்றதால் இம்முறை தொகுதியை காங்கிரசிற்கு தள்ளிவிட்டது. காங்கிரஸ் சார்பாக களத்தில் நிற்கும் வி.பி துரை, முன்னாள் எம்எல்ஏ வேல் துரையின் மகன். சிறுபான்மை மக்களின் ஓட்டு வங்கி, காங்கிரஸ் கட்சிகென்று உள்ள ஓட்டு வங்கி, திமுக மற்றும் திமுக கூட்டணி கட்சியின் ஓட்டு வங்கிகளை நம்பி களத்தில் நிற்கிறார் வி.பி. துரை.

வி.பி. துரையை ஒப்பிடும்போது, பொருளாதார பலத்தில் சற்று கை ஓங்கியவர் இசக்கி சுப்பையா. விட்டமின் ப அதிமுக சார்பில் செழிப்பாக வழங்கப்படலாம் என்ற நிலையில், குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில், வெற்றிக்கனியை பறித்து விடுவார் இசக்கி சுப்பையா என்பது தொகுதி நிலவரமாக உள்ளது.

## 198. பாளையங்கோட்டை

பாளையங்கோட்டை தொகுதி திமுகவின் வெற்றி தொகுதி என்று சொல்லப்படும் அளவிற்கு திமுக தொடர்ந்து வெற்றி பெற்று வரும் தொகுதிகளில் ஒன்று. திமுகவின் சார்பில் சிட்டிங் எம்எல்ஏ அப்துல் வகாப் மீண்டும் களத்தில் இருக்கிறார். சிறுபான்மை மக்களின் வாக்குகள் இவரை கரை சேர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. திமுகவின் பலமான ஓட்டு வங்கியில் ஒன்றான அரசு ஊழியர் ஓட்டு வங்கி இம்முறை சற்று சேதாரம் ஏற்பட்டுள்ளதால் கடந்த தேர்தலில் வெற்றி பெற்றது போல இம்முறை திமுக தொகுதியில் அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற இயலாது என்பது கள நிலவரம். அதிமுகவின் சார்பில் இளைஞரான சையது சுல்தான் சம்சுதீன் களத்தில் நிற்கிறார். இத்தொகுதியில் அதிமுகவின் சார்பில் போட்டியிட சீனியர் பலர் முயற்சி செய்திட ஜூனியரான சம்சுதீனுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், உள்ளடி வேலைகளும் அதிமுக வட்டாரத்தில் உள்ளன.

உட்கட்சி பூசல், தொகுதிக்குள் நிலவும் சிறிய அளவிலான அதிருப்தி ஆகியவை சிட்டிங் எம்எல்ஏ திமுகவின் அப்துல் வகாப்பிற்கு மைனஸ் என்றாலும் குறைந்த வித்தியாசத்தில், வெற்றிக்கொடியை பறக்க விடுவார் என்பது பாளையங்கோட்டையில் கள நிலவரம்.

## 199. நாங்குநேரி

காங்கிரஸ் சார்பாக சிட்டிங் எம்எல்ஏ ரூபி மனோகரன் மீண்டும் களம் இறங்கியுள்ளார். அதிமுக, பாஜக கூட்டணியில் இத்தொகுதி அமமுகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அமமுக வேட்பாளராக இசக்கிமுத்து, தவெக வேட்பாளராக ரெட்டியார்பட்டி நாராயணன், நாம் தமிழர் கட்சி வேட்பாளராக செல்வம், மற்றும் பல சுயேட்சை வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

நாங்குநேரி தொகுதியில் எப்பொழுதுமே வெளியூரில் இருந்து வேட்பாளரை இறக்குமதி செய்ய வேண்டுமா.? என்று காங்கிரஸில் அதிருப்தி குரல்கள் கேட்கத்தான் செய்கின்றன. இத்தொகுதியில் அதிமுக பலமுறை வெற்றி பெற்றுள்ளது, அமமுகவிற்கு சாதகமான அம்சம் என்றாலும், சசிகலாவின் அஇபுதமமுக கட்சி சார்பாக இறங்கியுள்ள ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி வெள்ளத்துரை அமமுக வெற்றியில் சேதாரத்தை ஏற்படுத்துவார். மேலும் சில சுயேச்சை வேட்பாளர்களும் அமமுகவிற்குரிய ஓட்டுகளை பிரிக்கும் நிலை உள்ளது.

முன்னாள் அதிமுக எம்எல்ஏவாக இருந்த ரெட்டியார்பட்டி நாராயணன் இம்முறை தவெக வேட்பாளராக களத்தில் நிற்கிறார். அவர் காங்கிரஸ் மற்றும் அமமுக வாக்குகளை பிரிப்பார். அதிருப்தி நிலவினாலும், கூட்டணி பலம் மற்றும் பணபலம் ஆகியவற்றின் காரணமாக ரூபி மனோகரன் வெற்றிக் கோட்டிற்கு அருகில் தான் நிற்கிறார்.

## 200. ராதாபுரம்

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் கட்சி சார்பிலான வேட்பாளர்கள், சுயேச்சை வேட்பாளர்கள் என 23 வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள். திமுகவின் சார்பில் சபாநாயகர், சிட்டிங் எம்எல்ஏ அப்பாவுவும், அதிமுக கூட்டணியில் பாஜகவின் சார்பில் பாலகிருஷ்ணனும், தவெகாவில் டாக்டர். சதீஷ் கிறிஸ்டோபரும், நாம் தமிழர் சார்பாக கிரிஜா தாமரைப் பாண்டியனும், தொகுதியில் வேட்பாளர்களாக தொகுதியில் களத்தில் நிற்கிறார்கள்.

1996, 2001, 2006, 2021 என நான்கு முறை (ஒருமுறை தமாக, ஒருமுறை சுயேச்சை, இரு முறை திமுகவில்) இத்தொகுதியில் வெற்றி பெற்றவர் அப்பாவு. ஐந்தாவது முறையாக களத்தில் நிற்கிறார்.ராதாபுரம் தொகுதியில் திரும்பிய பக்கமெல்லாம் கல்குவாரிகள் என்பது இவர் மீது அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. உள் கட்சி பூசலும் உள்ளது. பாஜகவின் சார்பாக களத்தில் நிற்கிறார் பாலகிருஷ்ணன் என்பவர். இவருக்கு தொகுதி முழுவதும் பரவலாக வரவேற்பு உள்ளது. தவெகாவின் வேட்பாளர் மருத்துவர் சதீஷ் கிறிஸ்டோபரும் உற்சாகமாக வலம் வருகிறார்.

அதிருப்திகள் அதிகம் இருந்தாலும் குறைந்த வாக்கு வித்தியாசத்திலாவது சபாநாயகர் அப்பாவு, முந்துவதற்கு வாய்ப்புள்ளது என்பது கள நிலவரம்.

# கன்னியாகுமரி மாவட்டம்

## 201. கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் திமுகவும், அதிமுகவும் நேரடியாக மோதும் தொகுதி. அதிமுக சார்பில் சிட்டிங் எம்எல்ஏ தளவாய் சுந்தரம் வேட்பாளராக களத்தில் உள்ளார். அவரை எதிர்த்து திமுகவில் நாகர்கோவில் மேயர் மகேஷ் களத்தில் உள்ளார். நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக மரிய ஜெனிபர் மற்றும் தவெக வேட்பாளராக மாதவனும் களத்தில் உள்ளனர்.

சிட்டிங் எம்எல்ஏ தளவாய் சுந்தரத்திற்கு, அதிமுக வாக்கு வங்கியும், பிஜேபி வாக்கு வங்கியும், கட்சியைத் தாண்டி வெள்ளாளர் வாக்கு வங்கியும் பலம் தருகின்றன. ஐந்து வருடம் எம்எல்ஏவாக இருந்து தான் செய்த பணிகளை எடுத்துச் சொல்லி தொகுதியை வலம் வருகிறார் தளவாய் சுந்தரம்.

நாகர்கோவில் மேயராக இருந்த மகேஷ், கன்னியாகுமரி தொகுதியில் திமுக வேட்பாளராக களத்தில் நிற்கிறார். திமுகவிற்கே உரித்தான ஓட்டு வங்கி, கூட்டணி கட்சிகளின் ஓட்டு வங்கி, திமுகவின் திட்டங்களின் மூலம் கிடைக்கும் பெண்களின் வாக்குகள் இவை மகேஷிற்கு பலம் சேர்க்கின்றன. நாம் தமிழர் கட்சியின் மரிய ஜெனிபர் கணிசமான வாக்குகளை பெறக்கூடும். மரிய ஜெனிபர் மற்றும் தவெக வேட்பாளர் மாதவன், இருவரும் திமுகவின் கிறிஸ்துவ ஓட்டு வங்கியில் சேதாரத்தை ஏற்படுத்துவார்கள்.

வெற்றிக் கோட்டிற்கு சிறிது தள்ளி மகேஷும், வெற்றிக்கோட்டின் மிக அருகில் அதிமுகவின் தளவாய் சுந்தரமும் நிற்கிறார்கள்.


## 202. நாகர்கோவில்

பாஜக சார்பில் வேட்பாளராக சிட்டிங் எம்எல்ஏ எம்.ஆர். காந்தியும், திமுக வேட்பாளராக ஆஸ்டினும், தவெக வேட்பாளராக பெர்வின் கிங்ஸும், நாம் தமிழர் கட்சி வேட்பாளராக முத்துக்குமாரும் களத்தில் நிற்கின்றனர்.

திமுகவும், அதிமுகவும், ஓரிரு முறை காங்கிரசும் மாறி மாறி வெற்றி பெற்ற தொகுதி. கடந்த 2016 ஆம் ஆண்டு பாஜக சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த எம். ஆர். காந்தி 2021 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு 11 ஆயிரத்து 669 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி அடைந்தார். எளிமையான வேட்பாளர் என்று பெயர் பெற்றிருந்தாலும், பெயர் சொல்லும்படியான பெரிய திட்டங்கள் எதையும் தொகுதிக்கு கொண்டு வரவில்லை என்ற அதிருப்தி உள்ளது.

கடந்த முறை கன்னியாகுமரியில் போட்டியிட்ட திமுகவின் ஆஸ்டின் இம்முறை தொகுதி மாறி நாகர்கோவிலில் போட்டியிடுகிறார். ஆஸ்டின் போட்டியிடுவது குறித்து திமுகவிலும் சிலருக்கு அதிருப்தி இருக்கிறது. இருந்தாலும் திமுகவின் பலமான ஓட்டு வங்கி மற்றும் கூட்டணி கட்சிகளின் ஓட்டு வங்கியும் அவரை கரைச் சேர்க்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

பாஜக எம்.ஆர். காந்தியும், திமுகவின் ஆஸ்டினும், பெரிய அளவில் வித்தியாசங்கள் இன்றி வெற்றிக்கோட்டின் அருகிலேயே இருவரும் நிற்கின்றனர்.



## 203. குளச்சல்

ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு பெயர் பெற்ற குளச்சல் சட்டமன்ற தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளராக தாரகை கத்பர்ட், பாஜக வேட்பாளராக சிவக்குமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளராக ஆன்சி ஷோபா, தவெக வேட்பாளராக பிரேம் அலெக்ஸ் லாரன்ஸ், உள்பட 13 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.

காங்கிரஸ் வேட்பாளர் தாரகை கத்பர்ட் கடந்த முறை விளவங்கோடு தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவர். தற்போது குளச்சல் தொகுதியில் களம் இறங்குகிறார். பாரம்பரியமான காங்கிரஸ் வாக்குகள் மற்றும் திமுக அதன் கூட்டணி வாக்குகள் இவருக்கு பலம் சேர்க்கின்றன. மேலும் சிறுபான்மை மக்களின் வாக்குகள் மற்றும் மீனவ மக்களின் வாக்குகள் இவருக்கு கூடுதல் பலம்.

பாஜக வேட்பாளராக போட்டியிடும் சிவக்குமார், தொகுதியில் பரவலாக உள்ள இந்து மக்களின் வாக்குகளை மொத்தமாக பெறுவார். காங்கிரஸ், தவெக, மற்றும் நாம் தமிழர் கட்சி ஆகியவை சிறுபான்மை மக்களின் வாக்கை பிரிப்பது பாஜக வேட்பாளரின் வெற்றிக்கு உதவும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. நாதக ஆன்சி சோபா, தவெக பிரேம் அலெக்ஸ் லாரன்ஸ், இருவரும் சிறுபான்மை மக்களின் வாக்குகளை பிரித்தாலும், காங்கிரஸ் தாரகை கத்பர்ட்டின் கையே ஓங்கி நிற்கிறது.

## 204. பத்மனாபபுரம்

சிபிஎம் வேட்பாளராக செல்ல சுவாமியும், பாஜக வேட்பாளராக ரமேஷும், நாதக வேட்பாளராக சீலனும், தவெக வேட்பாளராக கிருஷ்ணகுமாரும், சுயேச்சை வேட்பாளர்களும் களத்தில் நிற்கின்றனர்.

திமுக நான்கு முறை தொடர்ந்து வெற்றி பெற்ற தொகுதி இது. அமைச்சராக இருந்த மனோ தங்கராஜ் இருமுறை வெற்றி பெற்றிருந்தார். ஆனால் இத்தொகுதியை தற்போது சிபிஎம் க்கு வழங்கி விட்டது திமுக தலைமை. திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வாக்குகள், சிறுபான்மை மக்களின் வாக்குகள் வெற்றியை தேடித் தந்து விடும் என்ற நம்பிக்கையில் களத்தில் நிற்கிறார் சிபிஎம் வேட்பாளர்.


தென்னிந்தியாவின் முதல் பாஜக எம்எல்ஏ வேலாயுதத்தை 1996 ல் தந்த தொகுதி இது என்பதாலும், அதிமுக மற்றும் இந்து மக்களின் வாக்குகள் மொத்தமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் களத்தில் இருக்கிறார் பாஜக வேட்பாளர் ரமேஷ். திமுகவின் வலுவான வாக்கு வங்கியும், சிறுபான்மை மக்களின் வாக்கு வங்கியும், தோழர்களின் உழைப்பும், சிபிஎம் வேட்பாளர் செல்ல சுவாமியை வெற்றிக் கோப்பையை வாங்க வைக்கின்றது.

## 205. விளவங்கோடு

விளவங்கோடு தொகுதியில் மூன்று முறை காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற விஜயதரணி தற்போது பாஜக வேட்பாளராக களம் காண்கிறார். காங்கிரஸ் வேட்பாளராக பிரவீனும், தவெக வேட்பாளராக மைக்கேல் குமாரும், நாதக வேட்பாளராக மரிய ஸ்டெல்லாவும் களத்தில் நிற்கின்றனர். அரசியல் கட்சி வேட்பாளர்கள், சுயேட்சைகள் என 14 வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

காங்கிரஸ் வேட்பாளர் பிரவீன் விளவங்கோடு தொகுதியைச் சார்ந்தவர் என்றாலும், கேரளாவில் வசித்து வருவதால், இறக்குமதி வேட்பாளரா.? என்று அதிருப்தி விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. காங்கிரஸ் இத்தொகுதியில் பலமுறை வெற்றி பெற்றுள்ள நம்பிக்கையால் களத்தில் நிற்கிறார் பிரவீன்.

தவெகவின் மைக்கேல் குமாரும், நாதக மரிய ஸ்டெல்லாவும் சளைக்காமல் தீவிர பிரச்சாரத்தில் உள்ளனர். மூன்று முறை வாக்களித்தும் கட்சி மாறிவிட்டாரே என்ற ஆதிருப்தி இருந்தாலும், கூட்டணி பலம் கடும் போட்டியை ஏற்படுத்துகிறது. பாரம்பரிய காங்கிரஸ் தொகுதி என்றாலும் அதிருப்திகள் இருப்பதால் இழுபறி நீடிக்கிறது.



## 206. கிள்ளியூர்

தமிழகத்தின் கடைசி தொகுதியான கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளராக ராஜேஷ் குமாரும், பாஜக, அதிமுக கூட்டணியில் தமாக வேட்பாளராக நிவின் சைமனும், நாம் தமிழர் கட்சி வேட்பாளராக ஹிம்லரும், தவெக வேட்பாளராக சுபினும் இங்கு களம் காண்கின்றனர்.

கிள்ளியூர் தொகுதியில் இருமுறை போட்டியிட்டு வெற்றி பெற்ற ராஜேஷ்குமார் மீண்டும் காங்கிரஸ் சார்பில் களம் இறங்குகிறார். சிறுபான்மை வாக்குகள், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வாக்குகள் இவருக்கு பலம் சேர்க்கின்றன.

தமாகாவின் வேட்பாளர் நிவின் சைமன் தாமரைச் சின்னத்தில் போட்டியிடுகிறார். முன்னாள் தமாகா எம்எல்ஏ ஜான் ஜேக்கப்பின் மகன் என்பதால்,இந்துக்களின் வாக்குகளோடு,கிறித்துவ மக்களின் வாக்குகளும் இவருக்கு கிடைக்க வாய்ப்புண்டு. நாம் தமிழர் வேட்பாளர் ஹிம்லர், மற்றும் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் சுபின் ஆகியோர் தீவிர பிரச்சாரத்தில் இருக்கின்றனர். இவர்கள் கணிசமான கிறித்துவ மக்களின் ஓட்டுகளை பெறக்கூடும்.

கிள்ளியூர் தொகுதியில் நான்கு முனை போட்டியிருந்தாலும், வெற்றி காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஷ் குமார் பக்கமே உள்ளது என்பது கள நிலவரம்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம்

## 207. உளுந்தூர்பேட்டை

உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக வசந்தவேல் (திமுக), அ.தி.மு.க சார்பில் குமரகுரு, எம்.சுதாகர் (டி.வி.கே), லோகேஸ்வரி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் எ.ஜெ.மணிகண்ணன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க வேட்பாளர் குமரகுருவை 5256 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. வேட்பாளர்களில் முக்கிய நபராக பார்க்கப்படுபவர் குமரகுரு என்பதோடு, பா.ம.க. வாக்குகளும், அ.தி.மு.க.வின் பலத்திலும் குமரகுரு முந்திச் செல்கிறார்.

## 208. கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி தொகுதியில 2021ல் அதிமுக வெற்றி பெற்றது. இந்த முறை திமுக கூட்டணியில விசிகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விசிக தலைவர் திருமாவளவனின் அக்கா மகள் மாலதி இங்கே வேட்பாளராக களமிறங்கியிருக்கிறார். சொந்த அக்கா பொண்ணுக்கே திருமாவளவன் சீட் கொடுத்திருக்கிறார் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

மாலதியை எதிர்த்து அதிமுகவின் ராஜீவ் காந்தி களம் காண்கிறார். இவர் 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் மணிரத்தினத்தை 25,891 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். தவெக சார்பில் அருள் விக்னேஷ், நாதக சார்பில் நாகம்மாள் ஆகியோர் களம் காண்கின்றனர்.

கள்ளச்சாராய மரண விவகாரம் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் வி.சி.க.விக்கு மைனஸாகப் பார்க்கப்படுவதோடு, தி.மு.க.வினரின் உள்ளடி வேலைகளில் அ.தி.மு.க.வின் ராஜீவ்காந்தி வெற்றி பெறுகிறார்.

## 209. ரிஷிவந்தியம்

2011ல் தேமுதிக தலைவர் மறைந்த விஜயகாந்த் வெற்றி பெற்ற தொகுதி. அப்போதுதான் விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவரானார். அதன் பிறகு 2016, 2021ல் திமுகவின் வசந்தம் கார்த்திகேயன் வெற்றி பெற்றார். 3வது முறையாக திமுகவின் வசந்தம் கார்த்திகேயன் களம் காண்கிறார். 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் சந்தோஷை 41,728 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

அதிமுக கூட்டணியில பாமகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த தொகுதியில செழியன் வேட்பாளராக போட்டியிடுகிறார். தவெக சார்பில் அசோக்குமார், நாதக சார்பில் ராதிகா ஆகியோர் களம் காண்கின்றனர் 2026 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சிகளின் பலத்துடன் மீண்டும் வசந்தம் கார்த்திகேயன் வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 210. சங்கராபுரம்

சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக தா.உதயசூரியன்), அதிமுக சார்பில் ராகேஷ், ஏ.ஜெகதீசன் (டி.வி.கே), ரமேஷ் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் தா.உதயசூரியன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ம.க. வேட்பாளர் ராஜாவை 45963 வாக்குகள் வித்தியாசத்தில் வீவெற்றி பெற்றார்.

கணிசமான வாக்கு வங்கி வைத்துள்ள பா.ம.க. பலத்துடன் அ.தி.மு.க. வேட்பாளர் களமிறங்கினாலும், மீண்டும் சங்கராபுரம் தொகுதியில் உதயசூரியன் உதிக்கவே வாய்ப்பு அதிகம்!

# தென்காசி மாவட்டம்

## 211. சங்கரன்கோவில்

தனித் தொகுதியான சங்கரன்கோவில் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக சங்கை கணேசன், அதிமுக வேட்பாளராக டாக்டர். திலீபன் ஜெய்சங்கர், நாம் தமிழர் கட்சி வேட்பாளராக கவிதா, தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளராக ராமராஜன் ஆகியோர் உள்பட 20 வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்ற தொகுதி. இத்தொகுதியின் சிட்டிங் எம்எல்ஏ ராஜா தற்போது வாசுதேவநல்லூர் தொகுதிக்கு மாறி உள்ளார். தற்போது இந்த தொகுதியை காங்கிரசிற்கு ஒதுக்கி உள்ளது திமுக. காங்கிரஸ் வேட்பாளராக சங்கை கணேசன் என்பவர் போட்டியிடுகிறார்.

அதிமுக பலமுறை வெற்றி பெற்ற தொகுதி இது. கடந்த 2016 ல் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ராஜலட்சுமி அமைச்சராகவும் இருந்தார். இம்முறை அவரே களம் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில் புதுமுகம் திலீபன் ஜெய சங்கர் என்பவருக்கு வாய்ப்பளித்துள்ளார் எடப்பாடி பழனிச்சாமி. அதிமுகவிற்கு வலுவான ஓட்டு வங்கி உள்ள இத்தொகுதியில், தற்போது பாஜகவிற்கு உள்ள இந்து மக்களின் ஓட்டு வங்கியும் இணைந்து இருப்பதால் நம்பிக்கையுடன் களத்தில் நிற்கிறார் அதிமுக வேட்பாளர் திலீபன் ஜெயசங்கர்.


சங்கரன்கோவில் தனி தொகுதியில் மீண்டும் இலையே துளிர்க்கும் என்பதே தற்போதைய கள நிலவரம்.

## 212. வாசுதேவநல்லூர்

தனித் தொகுதியான வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் திமுகவின் வேட்பாளராக ராஜாவும், பாஜக வேட்பாளராக ஆனந்தன் அய்யாசாமியும், தவெக வேட்பாளராக அமுத ராணியும், நாம் தமிழர் கட்சி வேட்பாளராக இசை மதிவாணனும் போட்டியிடுகின்றனர். இது தவிர சில சிறிய கட்சிகளும் சுயேட்சைகளும் களத்தில் உள்ளனர்.

சங்கரன்கோவில் சிட்டிங் எம்எல்ஏ ராஜா, அங்கிருந்து மாறி தற்போது வாசுதேவநல்லூர் தொகுதியில் போட்டியிடுகிறார். இந்தத் தொகுதியில் திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் மற்றும் மதிமுக வேட்பாளர்கள் பலமுறை வெற்றி பெற்றுள்ளனர். எனவே திமுகவின் வாக்குகள் மற்றும் கூட்டணி கட்சியின் வாக்குகள் திமுகவின் பலத்தை கூட்டுகின்றன.

பாஜக, அதிமுக கூட்டணியில் பாஜக வேட்பாளராக ஆனந்தன் அய்யா சாமி போட்டியிடுகிறார். இவர் கடந்த சில வருடங்களாகவே இத்தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளை (வேலைவாய்ப்பு முகாம்கள், மருத்துவ முகாம்கள், பெண்களுக்கான வழிகாட்டுதல் முகாம்கள், போட்டி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி நிகழ்ச்சிகள்) தொடர்ந்து நடத்தி வந்தார். இதன் மூலம் தொகுதியில் நல்ல அறிமுகத்தை பெற்றுள்ளார். இத்தொகுதியில் போட்டியிடும் புதிய தமிழகம், அஇபுதமமுக, மற்றும் சில சுயேச்சைகள் வாக்குகளை பிரிப்பதால், திமுக மற்றும் பாஜக வேட்பாளர்களில் யார் வெற்றி பெறுவார் ..? என்பது இழுபறியாக உள்ளது.



## 213. கடையநல்லூர்

திமுக கூட்டணியில் மதிமுக வேட்பாளர் ராஜேந்திரனும், அதிமுகவில் சிட்டிங் எம்எல்ஏ கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பாவும், தவெக வேட்பாளராக அப்துல் ஜலிலும், நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக அபூபக்கர் சித்திக்கும் களத்தில் நிற்கிறார்கள். இஸ்லாமியர்கள் நிறைந்த தொகுதி என்பதால் 2016 மற்றும் 2021 தேர்தல்களில் இத்தொகுதியை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு ஒதுக்கி இருந்தது திமுக. எனவே இம்முறை திமுக நேரடியாக களம் இறங்க வேண்டும் என திமுகவினர் கடையநல்லூர் தொகுதியில் போட்டியிடுவதற்கு திமுகவில் விருப்ப மனு கொடுத்திருந்தனர். ஆனால் திமுக தலைமை இத்தொகுதியை இம்முறை மதிமுகவிற்கு வழங்கி விட்டது.

சிறுபான்மை மக்களின் ஓட்டு வங்கி, மற்றும் திமுக கூட்டணி கட்சிகளின் ஓட்டு வங்கிகள் ஆகியவற்றை நம்பி மதிமுக வேட்பாளர் ராஜேந்திரன் உதயசூரியன் சின்னத்தில் களத்தில் நிற்கிறார். ஆனால் நாம் தமிழர் மற்றும் தவெக ஆகிய கட்சிகள் இஸ்லாமியர்களை வேட்பாளர்களாக களத்தில் இறக்கி உள்ளது, மதிமுக வேட்பாளருக்கு சேதாரம் தான்.

அதிமுக சார்பில் போட்டியிடும், சிட்டிங் எம்எல்ஏ கிருஷ்ண முரளி, கடந்த தேர்தலில்,அமமுக சார்பில் போட்டியிட்ட அய்யாதுரை பாண்டியன் 34,216 வாக்குகள் பெற்றிருந்த போதிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளரை விட 24, 349 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருந்தார். இம்முறை அமமுக, அதிமுக கூட்டணியில் இணைந்திருப்பது அதிமுக கூட்டணியை வலுவாக்கியுள்ளது. உதயசூரியன் சின்னம், திமுக கூட்டணி கட்சிகளின் ஆதரவு, என்பது மதிமுக வேட்பாளரின் பலமாக இருந்த போதிலும், அதிமுக வேட்பாளர் கிருஷ்ண முரளியே வெற்றிக்கோட்டை தொடுவதற்கு வாய்ப்புகள் அதிகம்!

## 214. தென்காசி

கட்சி வேட்பாளர்கள், சுயேச்சை வேட்பாளர்கள் என 22 பேர் இத்தொகுதியில் களத்தில் நிற்கிறார்கள். இத்தொகுதியின் சிட்டிங் எம்எல்ஏ காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பழனி நாடார். ஆனால் தொகுதியை காங்கிரசிற்கு வழங்காமல் இம்முறை திமுக எடுத்துக் கொண்டது. முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு மிக நெருக்கமானவரான அன்பகம் கலையின் மகன் மருத்துவர் கலை கதிரவன் திமுக வேட்பாளராக களத்தில் நிற்கிறார்.

அதிமுகவின் சார்பில் முன்னாள் எம்எல்ஏ செல்வமோகன்தாஸ் பாண்டியன் மீண்டும் போட்டியிடுகிறார். தவெக வேட்பாளராக ராஜ பிரகாஷ் என்பவரும், நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக புஷ்பலதா என்பவரும் களத்தில் நிற்கிறார்கள். கடந்த முறை 370 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்த அதிமுகவின் செல்வமோகன் தாஸ் பாண்டியன் இம்முறை வெற்றி பெற்றே தீர வேண்டும் என்று களத்தில் தீவிரமாக பணியாற்றி வருகிறார். அஇபுதமமுக கட்சி வேட்பாளர் பிரிக்கும் வாக்குகள் இவருக்கு சேதாரத்தை உண்டு பண்ணும்.

சிறுபான்மை மக்கள் வாக்குகள், திமுக கூட்டணி வாக்குகள், பணபலம், படைபலம் ஆகியவை குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது திமுக வேட்பாளர் கலை கதிரவனுக்கு வெற்றியைத் தேடித் தந்துவிடும் என்பது கள நிலவரம்.

## 215. ஆலங்குளம்

திமுக சார்பில் மனோஜ் பாண்டியன், அதிமுக சார்பில் பிரபாகரன், தவெக சார்பில் விபின் சக்கரவர்த்தி, நாம் தமிழர் கட்சி சார்பில் பால்ராஜ், என்பவர்கள் உட்பட 13 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர். பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட பனங்காட்டு படை கட்சி தலைவர் ராக்கெட் ராஜா, சத்திரிய சான்றோர் படை தலைவர் ஹரி நாடார் ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏனோ தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன.


அதிமுகவில் இருந்து வந்த வேகத்தில் திமுகவில் சீட்டா..? என்று ஆங்காங்கே அதிருப்தி குரல்கள் திமுகவில் கேட்கின்றன. அதிமுகவின் வேட்பாளர், முன்னாள் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர், பிரபாகரன் களத்தில் மிக வேகமாகவே களப்பணி ஆற்றி வருகிறார். பாஜக, அமமுக, தமமுக போன்ற கூட்டணி கட்சிகளின் வாக்குகள் வெற்றிக்கு உதவும் என்ற நம்பிக்கையில் வலம் வருகிறார்.

தவெக வேட்பாளராக களத்தில் நிற்கும் விபின் சக்கரவர்த்தி மிகப்பெரிய வணிக குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் திமுக,அதிமுக என இரண்டு வேட்பாளருக்கும் கணிசமான சேதாரத்தை ஏற்படுத்துவார். திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் வாக்குகள், சிறுபான்மை மக்களின் வாக்குகள், திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள் போன்றவை திமுக வேட்பாளர் மனோஜ் பாண்டியனை குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலாவது வெற்றி பெற வைக்கிறது.

## 216. சோழிங்கநல்லூர்

சோழிங்கநல்லூர் அதிக வாக்காளர்கள் கொண்ட தொகுதி. திமுக வேட்பாளராக அரவிந்த் ரமேஷ், அதிமுக வேட்பாளராக கே.பி.கந்தன், தவெக வேட்பாளராக சரவணமூர்த்தி, நாதக வேட்பாளராக ஜெயலட்சிமி ராமன் ஆகியோர் களம் காண்கின்றனர். இதில் முன்னாள் எம்.எல்.ஏ கந்தனுக்கும் இன்னாள் எம்.எல்.ஏவுக்கும் கடும் போட்டி நிலவுகிறது. இருவரும் மக்களுக்காக களத்தில் இறங்கி வேலை செய்யக்கூடியவர்கள். எனினும் திமுகவுக்கு பலம் அதிகமாக இருப்பதாக கள நிலவரம் கூறுகிறது.

2021 தேர்தலில் திமுக வேட்பாளர் அரவிந்த் ரமேஷ் அதிமுக வேட்பாளர் கந்தனை 35,405 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். தற்போது தி.மு.க. மீதான அதிருப்தியும், தொகுதியில் கே.பி.கந்தனுக்கு செல்வாக்கு இருப்பதால் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதால் இழுபறி நீடிக்கிறது.




## 217. தாம்பரம்

2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் டி.கே.எம்.சின்னய்யாவை, திமுகவின் எஸ்.ஆர்.ராஜா தோற்கடித்தார். இந்த முறை அவருக்கு சீட் கிடைக்கவில்லை. 2026ல் திமுக வேட்பாளராக டாக்டர் கிருத்திகா களத்தில் உள்ளார். இதனால், எஸ்.ஆர்.ராஜா ஆதரவாளர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். திமுக பொருளாளர் டிஆர் பாலுவை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர். டாக்டர் கிருத்திகா, இந்த தேர்தல் களத்துக்கு புதுமுகம்!

அதிமுக வேட்பாளராக போட்டியிடுபவர் சிட்லபாக்கம் ராஜேந்திரன். இவர் முன்னாள் எம்.பி. ஆவார். தவெக சார்பில் சரத்குமார், நாதக சார்பில் தமிழ் செல்வி ஆகியோர் களம் காண்கின்றனர்.

தி.மு.க. தலைமை எஸ்.ஆர்.ராஜாவிடம் 'வேட்பாளரை வெற்றி பெற வைத்து கூட்டி வாருங்கள்' என உத்தரவு போட்டதால் கிருத்திகாவுடன் பிரச்சாரக் களத்தில் பம்பரமாக சுற்றி சுழன்று வந்தாலும் தி.மு.க. தொண்டர்கள் போதிய ஒத்துழைப்பு கொடுக்காதது தாம்பரம் தொகுதியில் இழுபறி நிலையை ஏற்படுத்துகிறது.



## 218. பல்லாவரம்

கடந்த 2 தேர்தல்களாக பல்லாவரம் தொகுதியில் திமுகவின் இ.கருணாநிதி வெற்றி பெற்றார். 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுகவின் சிட்லபாக்கம் ராஜேந்திரனை 37,781 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இந்த முறை தமக்கு சீட் கிடைக்கும் என எதிர்பார்த்த கருணாநிதிக்கு ஏமாற்றம்தான்.


பல்லாவரம் தொகுதி, திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தேமுதிகவின் அனகை முருகேசன் இங்கே போட்டியிடுகிறார். இவர், 2011ல் செங்கல்பட்டு எம்.எல்.ஏ.வாக இருந்தவர். அதிமுக கூட்டணியில் ஐஜேகே கட்சியின் வெங்கடேசன், வேட்பாளராக போட்டியிடுகிறார். இவர் சட்டசபை தேர்தல் களத்துக்கு புதியவர். தவெக சார்பில் காமாட்சி, நாதக சார்பில் கார்த்திகேயன் ஆகியோர் களம் காண்கின்றனர்.

பல்லாவரம் தொகுதியில் தே.மு.தி.க. போட்டியிடுவதால், தனது கூட்டணி பலத்தாலும், பண பலத்தாலும் ஐ.ஜே.கே. முந்திச் செல்கிறது.

## 219. செங்கல்பட்டு

செங்கல்பட்டு தொகுதியை பொறுத்தவரை 2021ல் திமுகவின் வரலட்சுமி வென்ற தொகுதி. இந்த முறை திமுகவின் கார்த்திக் தண்டபாணி, அதிமுகவின் கஜேந்திரன் வேட்பாளராக களம் காண்கிறார்கள். 2021ல் அதிமுகவின் கஜேந்திரன் 26,665 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியவர். இந்த தேர்தலில் தவெக சார்பில் தியாகராஜன், நாதக சார்பில் அமுதா நம்பியார் ஆகியோர் களம் காண்கின்றனர்.

செங்கல்பட்டு தொகுதியில் த.வெ.க. அதிக வாக்குகளை பிரிப்பதால் தி.மு.க.விற்கு பாதிப்பு ஏற்படுவதால் தொகுதியில் இழுபறி நிலை நீடிக்கிறது.




## 220. திருப்போரூர்

திருப்போரூர் தொகுதி 2021ல் திமுக கூட்டணியில் விசிகவுக்கு ஒதுக்கப்பட்ட பொதுத் தொகுதிகளில் ஒன்று. எஸ்.எஸ். பாலாஜி எம்.எல்.ஏ.வாக இருக்கிறார். இந்த முறையும் விசிகவுக்கு கொடுக்கப்பட்ட இந்த தொகுதியில் பன்னீர்தாஸ் வேட்பாளராக இருக்கிறார்.

இங்கே அதிமுக கூட்டணியில் பாமகவின் வழக்கறிஞர் கே.பாலு களம் காண்கிறார். கடந்த முறை பாமகவின் ஆறுமுகம் இங்கே போட்டியிட்டு 1,947 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். தவெக வேட்பாளராக விஜயராஜ், நாதக வேட்பாளராக அம்பேத்ராஜன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. வேட்பாளர் 'தாராளம்' காட்டுகிறார். இந்த முறை திருப்போரூரை கைப்பற்றியே ஆகவேண்டும் என அன்புமணி தனது தளபதியை நிறுத்தியிருப்பதால் தொகுதியில் கடும்போட்டி நிலவுகிறது.



## 221. செய்யூர்

செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. வேட்பாளர் சிந்தனை செல்வன், அ.தி.மு.க. சார்பில் ராஜசேகர், கே.மோகன்ராஜா (டி.வி.கே), சுவாதி லட்சுமி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் பாபு, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத்தை 4042 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

தி.மு.க. வாக்குகளையும், மீனவர் வாக்குகளையும் த.வெ.க. பிரித்துச் செல்வது அ.தி.மு.க.விற்கு பிளஸ்ஸாக அமைகிறது. எனவே, அ.தி.மு.க. முந்திச் செல்கிறது.

## 222. மதுராந்தகம்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக அமுலு பொன்மலர், அ.தி.மு.க. சார்பில் சிட்டிங் எம்.எல்ஏ. மரகதம் குமரவேல், எழில் கேத்தரின் (டி.வி.கே), ஜானகி ராமன் (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் மரகதம் குமாரவேல், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மதிமுக வேட்பாளர் மல்லை சத்யா அவர்களை 3570 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுக அதிமுக இடையே கடும் போட்டி நிலவுகிறது. ஆனாலும், அ.தி.மு.க.வின் பலமான வாக்கு வங்கி மற்றும் கூட்டணியில் பா.ம.க. இருப்பது அதிமுக வேட்பாளர் மரகதம் குமாரவேலை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

# திருப்பத்தூர் மாவட்டம்

## 223. திருப்பத்தூர்

திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில், 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் சிட்டிங் எம்எல்ஏ நல்லதம்பி ஞானசேகர் (அ.ம.மு.க), திருப்பதி (த.வெ.க), ஆறுமுகம் (நா.த.க) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர்.

கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர் நல்லதம்பி தன்னை எதிர்த்து போட்டியிட்ட பா.ம.க., வேட்பாளர் டி.கே.ராஜா வை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

த.வெ.க வேட்பாளர் திருப்பதி கணிசமான வாக்குகளை பிரித்தாலும் கடந்த 2016, 2021 நல்லதம்பி யின் தொடர் வெற்றியை இந்த முறையும் தக்கவைக்க வாய்ப்பு இருக்கிறது. காரணம் தொகுதி மக்களின் நன்மதிப்பு அவர்களை அடிக்கடி சந்தித்து குறைகளை கேட்பது, அதை நிவர்த்தி செய்வது என்பதுடன் தொகுதியின் அடிப்படை வசதிகளை ஓரளவு செய்து கொடுத்திருக்கிறார் நல்லதம்பி.

## 224. ஜோலார்பேட்டை

ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் கவிதா, முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி (அதிமுக) முனிசாமி (தவெக) சசிரேகா (நா.த.க)மற்றும் சுயேச்சைகள் பலர் போட்டியிடுகின்றனர். முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி (அதிமுக) சார்பில் போட்டியிடுவதால் விஐபி அந்தஸ்து பெற்றுள்ளது.

கடந்த 2021 ஆம் தேர்தலில் திமுக மாவட்ட செயலாளர் தேவராஜ்யுடன் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி ஆயிரத்து 35 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். ஆனால் இந்த 2026 தேர்தலில் அதிமுக வேட்பாளர் கே.சி. வீரமணி இரட்டை இலையை தக்க வைக்க வாய்ப்பு இருக்கிறது. காரணம் சிட்டிங் எம்எல்ஏ தேவராஜ் தொகுதியின் அடிப்படை வசதிகளில் பெரிதாக கவனம் செலுத்தவில்லை. மேலும் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளது.

மேலும் திமுகவின் உள்குத்து அரசியலும் அதன் வெற்றிக்கு சறுக்கல் ஏற்படுத்துகிறது. மேலும், கே.சி வீரமணி கடந்த ஓராண்டுக்கு முன்பே தேர்தல் பணிகளை முடக்கிவிட்டதுடன் தொகுதி மக்களுக்கு கட்சி சார்பில் பல நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார். இதுவே அ.தி.மு.க. வேட்பாளர் கே.சி.வீரமணி வெற்றிக்கு பெரிதும் கை கொடுத்து உதவுவதாக தெரிகிறது.

## 225. வாணியம்பாடி

வாணியம்பாடி சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சையத் பாருக் பாஷா (ஏணி சின்னம்), சிட்டிங் எம்எல்ஏ செந்தில்குமார் (அதிமுக), புர்ஹனுதீன் (தவெக) போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலில் சிட்டிங் எம்எல்ஏ செந்தில்குமார் (அதிமுக) போட்டியிட்டாலும், அவரின் செயல்பாடு தொகுதி மக்களுக்கு திருப்தி அளிக்கவில்லை.

மேலும் அடிப்படை வசதிகளை போதிய அளவில் நிறைவேற்றவில்லை. அதனால் திமுக கூட்டணியின் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் சையத் பாரூக் பாஷா தொகுதியை தக்கவைக்க வாய்ப்பு உள்ளது. அதற்கு காரணம் கூட்டணி கட்சியினரின் ஒத்துழைப்பு, முஸ்லிம் மக்களின் ஓட்டு வங்கி, அனைத்து சமூகத்தினரின் 'கவரு'ம் வாக்குறுதிகளும் தான்.

## 226. ஆம்பூர்

ஆம்பூர் சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் சிட்டிங் எம்எல்ஏ வில்வநாதன், வெங்கடேசன் (அதிமுக) இம்தியாஸ் (தவெக) அபிஷியா நஸ்ரின் (நாதக) மற்றும் பல சுயாட்சிகள் போட்டியிடுகின்றனர். கடந்த 2019 இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட வில்வநாதன் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். 2021 சட்டமன்றத் தேர்தலும் அந்த வெற்றி தொடர்ந்தது.

2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக., அதிமுக இடையே கடும் போட்டி நிலவினாலும், சிட்டிங் எம்எல்ஏ வில்வநாதன் தொகுதியை தக்க வைப்பார் என்றே தெரிகிறது. அதற்கு முக்கிய காரணம் தொகுதியின் அடிப்படைப் பிரச்சனையான குடிநீர், சாலை, மருத்துவம் உள்ளிட்ட பிரச்சினைகளை ஓரளவு செய்து கொடுத்துள்ளார்.

# ராணிப்பேட்டை மாவட்டம்

## 227. அரக்கோணம் (தனி)

அரக்கோணம் (தனி) சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக சார்பில் சிட்டிங் எம்எல்ஏ ரவி, திமுக கூட்டணி கட்சி சார்பில் எழில் கரோலின் (விசிக) காந்திராஜ் (த.வெ.க), ராஜ்குமார் (நா.த.க) மற்றும் சுயேச்சைகள் பலர் போட்டியிடுகின்றன சிட்டிங் எம்எல்ஏ ரவி, விசிக வேட்பாளர் எழில் கரோலின் இடையே தான் கடும் போட்டி நிலவுகிறது. இருப்பினும் ஐந்தாவது முறையாக களம் காணும் சிட்டிங் எம்எல்ஏ ரவிக்கு வெற்றி சாத்தியமாகும் என்பது தெரிகிறது.

காரணம் கட்சி நிர்வாகிகளின் பலம், தொகுதி மக்களிடம் உள்ள செல்வாக்கு, தொகுதியின் அடிப்படை வசதிகளை போதுமான அளவிற்கு நிறைவேற்றி உள்ளார் என்பதுதான்.

## 228. சோளிங்கர்

சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் சிட்டிங் எம்எல்ஏ முனிரத்தினம் (காங்கிரஸ்) சரவணன் (பாமக) கபில் (த.வெ.க) அசோக்குமார் (நாதக) மற்றும் சுயேச்சைகள் பலர் போட்டியிடுகின்றனர்.

கடந்த 2021 தேர்தலிலும் காங்கிரஸ்., பாமக இடையே தான் கடும் போட்டி நிலவியது. இருப்பினும் சிட்டிங் எம்எல்ஏ முனிரத்தினம் 26 ஆயிரத்து 698 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அந்த வெற்றியை 2026 தேர்தலிலும் காங்கிரஸ் வேட்பாளர் முனிரத்தினம் தக்க வைப்பார் என்று தெரிகிறது. காரணம் கூட்டணி கட்சியினரின் ஒத்துழைப்பு, பிளவு பட்ட பாமக. மேலும் அவர் தொகுதியின் அடிப்படை வசதிகளை ஓரளவு நிறைவேற்றி இருப்பது அவருக்கு 'கை' கொடுக்கிறது.

## 229. இராணிப்பேட்டை

ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஏ.ஆர்.காந்தி, கார்த்திகேயன் (த.மா.க) தாஹிரா (த.வெ.க) தாரிகா (நா.த.க) மற்றும் சுயேட்சைகள் பலர் போட்டியிடுகின்றனர். அமைச்சர் ஏ.ஆர். காந்தி ஏழாவது முறையாக போட்டி இடுகிறார்.

மேலும் அமைச்சர் தொகுதி என்பதால் நட்சத்திர அந்தஸ்து பெறுகிறது. களத்தில் திமுக., த.மா.கா இடையே தான் போட்டி என்றாலும் அமைச்சர் ஏ.ஆர். காந்தி வெற்றியை தக்க வைப்பார் என்று தெரிகிறது. காரணம் திமுக நிர்வாகிகளின் அனைவரும் பம்பரமாக சுழன்று வேலை செய்வது. உள்ளூர் மக்களின் செல்வாக்கு, தொகுதியின் அடிப்படை ஓரளவு வசதிகளை செய்து கொடுத்திருப்பது தான்.

## 230. ஆற்காடு

ஆற்காடு சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் சிட்டிங் எம்எல்ஏ ஈஸ்வரப்பா, எஸ்.எம்.சுகுமார் (அதிமுக) விஜய்மோகன் (தவெக) அர்ச்சனா (நா தக)ஆகியோர் பிரதான வேட்பாளராக போட்டியிடுகின்றனர்.

இந்த தொகுதியை பொறுத்தவரை சிட்டிங் எம்எல்ஏ ஈஸ்வரப்பா, அதிமுக வேட்பாளர் எஸ். எம்.சுகுமார் இடையே தான் கடும் போட்டி. இருப்பினும் சிட்டிங் எம்எல்ஏ ஈஸ்வரப்பா தொகுதியை தக்க வைப்பார். காரணம் திமுகவின் உள்கட்டமைப்பு, நிர்வாகிகள் ஒத்துழைப்பு. தொகுதி மக்கள் இவரை எளிதில் அணுக முடியும் என்ற நன்மதிப்பு தான் இவரது வெற்றிக்கு பிளஸ் ஆக அமைந்துள்ளது.

# காஞ்சிபுரம் மாவட்டம்

## 231. ஆலந்தூர்

2001ல் அதிமுக முன்னாள் அமைச்சர் வளர்மதி வென்றார். 2011ல் தேமுதிகவில் பண்ருட்டி ராமச்சந்திரன் வென்ற தொகுதி. 2016ல் திமுக சார்பில் போட்டியிட்ட தா.மோ.அன்பரசன் அதிமுக சார்பில் போட்டியிட்ட பண்ருட்டி ராமச்சந்திரனை தோற்கடித்தார்.

2021 தேர்தலில் தா.மோ.அன்பரசன் 40,571 வாக்குகள் வித்தியாசத்தில் அதிமுக வேட்பாளர் வளர்மதியை தோற்கடித்தார். 2026 தேர்தலில் மீண்டும் திமுக வேட்பாளராக அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலந்தூர் தொகுதியில் களம் காண்கிறார். அதிமுக சார்பில் சரவணன், தவெக சார்பில் ஹரீஷ், நாதக சார்பில் மகாலட்சுமி ஆகியோர் களம் காண்கின்றனர்

ஆலந்தூர் தொகுதியில் அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு போட்டியைக் கொடுக்கும் வகையில் அ.தி.மு.க.வில் வேட்பாளரை நிறுத்தவில்லை. எனவே, தி.மு.க. கூட்டணி பலத்துடன் மீண்டும் வெற்றி பெறுகிறார் தா.மோ.அன்பரசன்!

Published & Printed by **JSK. SATISHKUMAR,** On behalf of Published Tamilaga Arasiyal from No. 47, Giriappa Road, T.Nagar, Chennai - 600017 and printed at Cosmic Printers, No.12 Oil Monger Street, Triplicane, Chennai - 600 005. Editor : **JSK. SATISHKUMAR**

## 232. உத்திரமேரூர்

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக சிட்டிங் எம்.எல்.ஏ., சுந்தர் (திமுக), அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. வேட்பாளர் மகேஷ் பெ.மகேஷ் குமார், முனிரத்தினம் (டி.வி.கே), மரம் மாசிலாமணி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் க.சுந்தர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் சோமசுந்தரம் அவர்களை 1,622 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திமுகவின் சுந்தர், 1989, 1996, 2006, 2016, 2021ன்னு மொத்தம் 5 முறை வெற்றி பெற்றிருந்தாலும் கள நிலவரமானது திமுகவுக்கு எளிதாக இம்முறை இல்லை. காரணம் ஆளும் கட்சி மீதான அதிருப்தி, கடந்த முறை சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது என, இந்த முறை உத்திரமேரூர் தொகுதியில் பா.ம.க. வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

## 233. காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் 2026 தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக நித்யா குமார், அ.தி.மு.க. வேட்பாளராக சோமசுந்தரம், ஆர்.வி.ரஞ்சித்குமார் (டி.வி.கே), வெற்றிச்செல்வி (நாதக) மற்றும் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் வேட்பாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் பெ. மகேஷ்குமார் அவர்களை 11595 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


தி.மு.க. வேட்பாளருக்கு தொகுதியில் போதிய செல்வாக்கு இல்லை என்றாலும், தி.மு.க.வின் கட்டமைப்பு, கூட்டணி பலம் ஆகியவற்றின் மூலம் அ.தி.மு.க. வேட்பாளரை முந்திச் செல்கிறார் நித்யா குமார்!

## 234. ஸ்ரீபெரும்புதூர்

தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை மீண்டும் போட்டியிடும் தொகுதி. 2021 தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பழனியை 10,879 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

அதிமுகவில் கடந்த முறை தோல்வி அடைந்த முன்னாள் எம்.எல்.ஏ. பழனி மீண்டும் வேட்பாளராக களம் காண்கிறார். 2016ல் இவர் எம்.எல்.ஏ.வாக இருந்தார். தவெக சார்பில் கே.தென்னரசு, நாதக சார்பில் சிந்து ஆகியோர் களம் காண்கின்றன.

தி.மு.க.- காங்கிரஸ் உறவில் லேசாக காணப்படும் விரிசலும், உடன் பிறப்புக்கள் சரியாக வேலை பார்க்காதது அ.தி.மு.க.விற்கு சாதகமாக அமைந்ததால் கடும்போட்டி ஏற்பட்டு இழுபறி நீடிக்கிறது.





Registered with the Registrar of Newspapers for India under RNI No. TNTAM/2008/27080
Day of Publishing : Every Friday

